# சாரதா

மலர் 2 இதழ் 3

விலை 6 மே 94

இலங்கை சிறப்பிதழ்



# இலங்கை சிறப்பிதழ்

## ... உள்ளே

### நேர்காணல்

கோமல் சுவாமிநாதன் ... 3
முகில் (தொடர்ச்சி) ... 39

### சிறுகதை

கோசலை—ரஞ்சகுமார் ... 24

### கவிதைகள்

கடன் பற்றிய ஒரு மூன்றாமுலகப் பார்வை—சிவசேகரம் ... 22
விபசாரம்—புவனம் ... 15
திரைகளின் பின்னால்—சுபிகால் ... 43
பி. நரேந்திரநாத்—தமிழில் : ரமேஷ் ... 49

### கட்டுரை

ஓவிய ரசனை—கொ. ரோ. கான்ஸ்டன்டைன் ... 12
உட்கவரும்மனம் (தொடர்) மரியாமாண்டஸாரி-தமிழில்: கே.உமாபதி ... 19

### நூல் விமர்சனங்கள்

சி. சிவசேகரம் ... 51
செ. யோகநாதன் ... 16
வல்லிக்கண்ணன் ... 44
மா. அரங்கநாதன் ... 18
ரெங்கராஜன் ... 46

ஆசிரியர் **கோ. பாஸ்கரன்**
பொறுப்பாசிரியர் **சூரியசந்திரன்**
ஓவியங்கள் **கலைச்செல்வன்**

★

தென் ஆப்பிரிக்காவின் இனவெறி அரசியல் முடிந்து போயிற்று. ஒரு கோடியே 62 லட்சம் கருப்பின மக்கள், முதன் முதலாக தங்களுக்கு வாக்குரிமையைப் பெற்றுத் தந்த ஆப்பிரிக்க தேசிய கட்சியின் தலைவர் மண்டேலாவை புதிய குடியரசுத் தலைவராக்கி இருக்கிறார்கள். ஒரு நூற்றாண்டு கால போராட்டக் களங்களையும் உயிர் தியாகங்களையும், அடக்குமுறை சித்திரவதைகளையும் அனுபவித்ததன் மூலம் அமைந்த இந்த ஜனநாயக அரசு கருப்பின மக்களை அவமானகரமான வாழ்விலிருந்து மீட்டுள்ளது. அதோடு, பல இன மக்களின் வாழ்வைப் பேணவும், கருப்பின மக்களின் எதிர்பார்ப்புகளை நிவர்த்திக்கவும், நாட்டை ஜனநாயக பாதையில் முன்னோக்கி இட்டுச் செல்வதான முயற்சியிலும் இவ்வரசு எதிர் காலத்தில் பல சோதனைகளை சந்திக்க வேண்டியதிருக்கும். மண்டேலாவால் முடியாதா என்ன? சந்திப்பார்; சாதிப்பார். அவர் அமைத்துக் கொண்ட வாழ்க்கை முறை நம்பகமானது.

'இலக்கியச் சிந்தனை' பரிசு, இவ்வாண்டு திரு. செ. யோகநாதனுக்கு வழங்கப் பட்டது. பரிசு பெற்ற 'நேற்றிருந்தோம் அந்த வீட்டினிலே' தமிழில் ஒரு குறிப்பிடத் தகுந்த வரலாற்று நாவல். யாழ்ப்பாணத்தின் சிறு கிராமமான குளத்தூரில் இருநூறு வருடங்களுக்கு முன்பு வசித்த மக்களின் மனோநிலையை, வாழ்வு முறையை, பண்பாட்டு நிகழ்வுகளை இந்நாவல் பிரதிபலிக்கிறது. இங்கே வாழ்கிற தமிழருக்கும், யாழ்ப்பாணத்தில் வாழ்கிற தமிழருக்கும் வாழ்க்கை முறையில் எந்த வேறுபாடும் இல்லாததால் இந்நாவலை ஒரு கிராமத்தினுடையது மட்டுமே என்றில்லாது அந்த கால கட்டத்தில் வாழ்ந்த தமிழ் மக்கள் அனைவருடையதாகவும் கருதலாம். ஆசிரியரை மகிழ்ந்து பாராட்டுகிறோம். 'அசுரவித்து' தொடர் நாவலின் இரண்டாம் பாகத்தை எதிர் நோக்குகிறோம்.

தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கம் 24-4-94ல் 'தமிழ் வளர்ச்சி பண்பாட்டுப் பாதுகாப்பு மாநாடு' ஒன்றை சென்னையில் நடத்தியது, பல இயக்கங்களைச் சார்ந்த முன்னணி கலை இலக்கிய வாதிகள் கலந்து கொண்ட இம்மாநாட்டில் (1) அனைத்து தேசிய மொழிகளையும் மத்தியில் ஆட்சி மொழிகளாக ஆக்குக. (2) தமிழகத்தில் அரசு நிர்வாகத்தில், நீதி மன்றங்களில் தமிழுக்கு உரிய இடம் தருக, (3) கல்வித்துறையில் தமிழின் இடத்தை உறுதி செய்க. (4) உலகத் தமிழ் மாநாட்டினை பயனுள்ள முறையில் நடத்துக. (5) தொலைக் காட்சியில் தமிழ் நிகழ்ச்சிகளுக்கு உரிய இடம் தருக. (6) ஆகாய வழி வரும் ஆபத்திலிருந்து பண்பாட்டைக் காத்திடுக. ஆகிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. தமிழ் மொழியையும், கலாச்சாரத்தையும் மீட்டெடுத்து காக்க பல இயக்கங்கள் முனைந்து செயல்படத் துவங்கியுள்ள இவ்வேளையில் இம்மாநாடு அதிக முக்கியத்துவம் பெறுகிறது.

சென்னையில் வரும் ஜூன் திங்களில் 'தமிழின அறிவாளர் பேரவை'யின் முதல் கருத்தரங்கு நடக்கவிருக்கிறது. தமிழின வரலாற்றில் ஆதிக்க மரபின் அடையாளங்களையும் தமிழரின் எதிர் மரபு அடையாளங்களையும் இனம் காணும் அக்கருத்தரங்கில் அறிவாளரும், கலைஞரும் ஆய்வுக் கட்டுரைகள் படிப்பர். கலை, இலக்கியம், நாடகம், திரைப்பட, திறனாய்வு, இசை, ஓவியத் துறைகளில் தமிழரின் சுயஅடையாளங்களைக் காணும் ஆர்வம் உள்ளோர் தொடர்பு கொள்க: தமிழின அறிவாளர் பேரவை, 10, வெங்கடரமண வீதி, இரத்தின சபாபதிபுரம் கோவை-641 002

# "ஈழத்தமிழ் எழுத்தாளர்கள்-இணைப்புப் பாலம்"


### இலங்கை சென்ற
## கோமல் சுவாமிநாதன்
## நேர்காணல்

''மனிதனுக்கு அப்பாற்பட்ட சக்தி எதுவுமேயில்லை. ஆனால், இந்த மனிதனோ சுயநலத்திற்கு ஆட்பட்டு இருக்கிறான். எந்தமனிதனுக்கு இந்த சமூகத்தின் அநீதியைக் கண்டு கோபம் வருகிறதோ, இந்த சமூகத்தின் மேம்பாட்டுக்காக ஒரு கல்லையாவது புரட்ட வேண்டும் என்ற எண்ணம் வருகிறதோ, அப்படிப்பட்ட மனிதனைத் தூக்கிக் காட்டுவதே நல்ல இலக்கியம். இன்றைய சமுதாயப் போக்கினையும், அதன் ஏற்றத் தாழ்வினையும், அது சென்றடையும் இடத்தினையும் ஒளிவு மறைவின்றி வெளிப் படையாக புரட்சிகரமாக எவன் எழுதுகிறானோ அவன் முற்போக்குவாதி. சமுதாயம் எக்கேடு கெட்டாலென்ன என்று தனது பேனாவைப் பணம் சம்பாதிக்க மாத்திரமே பயன்படுத்துபவர்கள் பிற்போக்குவாதிகள். துரதிஷ்டவசமாக இன்றைய இலக்கியத் துறையில் பிற்போக்குவாதிகள் நுழைந்திருக்கிறார்கள். அவர்களை அகற்றுவதே முற்போக்குவாதிகளின் சிந்தனையாக இருக்கவேண்டும்''.

இவ்வாறு கூறிய 'சுபமங்களா' ஆசிரியர் கோமல் சுவாமிநாதன் அவர்கள் சென்ற மாதம் இலங்கை சென்று எழுச்சியுடன் பல மேடைகளையும், பல அறிஞர் களையும் சந்தித்து மீண்டார். அடுத்த நூற்றாண்டு தமிழ் இலக்கியத்திற்கு ஈழத்து இலக்கியமே வழிகாட்டும் எனக் கூறும் கோமல் அவர்களின் துறைபோன கலை நாடகமே. எனினும் தற்பொழுது பத்திரிகைத் துறையில் எழுத்து வடிவில் தனது உணர்வுகளை வெளிக்கொண்டு வருவதில் முனைப்புடன் ஈடுபட்டுக் கொண்டிருக் கிறார். திரைப்பட இயக்குநராக இருந்து மாநிலத்துக்கான திரைப்பட விருதினையும் உருஷ்யப்பட விழாவில் பாராட்டையும் பெற்றவர். போராட்டச் சூழலில் வாழும் இலங்கைத் தமிழ்மக்களையும், சிங்களஇனந்தவரையும் மலையக மக்களையும் சந்தித்து பல அனுபவங்களோடு தமிழகம் மீண்டுள்ளார். அவரைச் சந்தித்து இலங்கையில் பெற்றுள்ள அனுபவங்களையும் தற்போதுள்ள நிலைப்பாடுகளையும் அறியும் ஆவலுடனும் அவற்றைப் பத்திரிகை வாயிலாக மக்களுடன் பகிர்ந்து கொள்ளும் நோக்கத்துடனும் நேர்காணலுக்காகச் சென்றபொழுது மிகவும் எளிமையாக அறிஞர்கள் கூடும் நூலக அறையில் நேர்காணலுக்குத் தயாரானார்.

● **பல்வேறு நெருக்கடியான சூழலில் இலங்கைத் தமிழ் மக்கள் வாழ்கிறார் கள். இவர்களில், போராட்டச் சூழலில் வாழும் யாழ்ப்பாணத்து தமிழ் மக்கள், இடம் பெயர்ந்து கொழும்பு போன்ற வேறுஇடங்களில் வாழும் தமிழ் மக்கள், புலம் பெயர்ந்து வெளிநாடுகளில் வாழும் தமிழ் மக்கள் ஆகியோரிடையே காணப்படும் படைப்புகளிலும், உணர்வு களிலும் உள்ள வேறுபாடுகளைக் கூற முடியுமா ?**

○ தேசிய கலை இலக்கியப் பேரவையின் அழைப்பு சார்பாக முதலில் கொழும்பிற்கும் பின்னர் கண்டி ராகலை போன்ற மலையகப் பிரதேசத்திற்கும், திருகோணமலை மட்டக் களப்பு வழியே பாதுகாப்பு அமைச்சின் அனுமதியுடன் வவுனியாவூடு யாழ்ப்பாணத் திற்கும் மூன்று நாட்கள் விஜயம் செய்தேன். ஆரம்பத்தில் யாழ் செல்லும் திட்டம் இருக்க வில்லை.



தமிழர்களின் போராட்டம், இலக்கியத் தில் ஒரு புதிய மாற்றத்தினை ஏற்படுத்தி இருக் கின்றது. படைப்புகள் கொழும்பில் அவ்வளவு தீவிரமாக இல்லை. எனினும் மட்டக்களப்பு யாழ்ப்பாணம் போன்ற பிரதேசங்களில் வாழும் மக்கள் அன்றாட யுத்தத்தின் விளை வாக பல இன்னல்களை அனுபவித்துக் கொண் டிருக்கிறார்கள். இவர்கள் இடம் பெயர்த லாலும், பொருளாதாரத் தடைகளை எதிர் கொள்வதாலும் ''பம்பர்'', ஷெல், அடித் துலில் பயந்து பயந்து வாழ்க்கை நடத்தி வருகின்றார்கள். இவர்கள் வாழ்க்கையின் சவால்களை எதிர்கொள்ளப் பழகியதன் மூலம் படைக்கும் இலக்கியங்களும் நாடகங் களும், சிறுகதைகளும் கவிதைகள் என்பனவும் மிகவும் எழுச்சி பெற்றுக் காணப்படுகின்றன. மலையகத்தில் கூட நல்ல பல நாடக இலக்கி யங்கள் உள்ளன. தோட்டத் தொழிலாளர் கள் படும் அவதிகளால் அவை வெளிக் கொண்டு வரப்படாது உள்ளன. வெளி நாடுகளில் வாழும் தமிழர்கள் ஏதோ சில காரணங்களுக்காக வெளிநாடு சென்றாலும் அவர்களுக்கு இங்கு நடக்கும் இன்றைய போராட்டநிலை தெரியாது இருக்கலாம். ஆனால் அவர்களும் அகதிகளாக வெளிநாடு சென்று அக்கலாச்சாரத்தையும் ஏற்றுக் கொள்ள முடியாது இக்கலாச்சாரத்தையும் ஏற்றுக் கொள்ள முடியாது தமது நிலைகளை விட்டு ஏதோ ஒரு வேலையை ஏற்றுக் கொண்டு வாழ்க்கையை நடத்தும் போது கலாச்சார அதிர்ச்சிக்குள் ளாகி தமது படைப்புகளிலும் இவ்வித தாக்கத்தினை வெளிப்படுத்துகின்றார்கள். வெளிநாடு செல்வதற்காக மாதக் கணக்காக ஓட்டலில் தங்கும் மத்தியதர வர்க்க தமிழர் கள் எப்பொழுதுமே சந்தேகக் கண்கொண்டு பார்க்கப்படுபவர்கள். குண்டு வெடித்தால் இவர்கள் தான் சோதனைக்குள்ளாகி அடைக் கப்படுவர். வெளிநாட்டுப் பணத்தில் வாழ்க்கை நடத்தும் இவர்களிடையே பிரிந்து வாழும் துன்பமான சோகமான வாழ்க்கை முறை களைப் பார்க்க முடிகிறது. பொதுவாகப் பீதி என்பது எல்லாத் தமிழர்களிடையேயும் இருக் கிறது. இப்பீதியே இலக்கியப் படைப்புக்கு ஆதாரமாயுள்ளது. எல்லா தமிழர்களுக்கும் நாளை என்ன நடக்குமோ என்ற பயத்திற் கான கேள்விக்குறியே பிரதிபலிப்பதாகத் தெரிகிறது. எதை தமது தாய்நாடாக-சமூக மாக நினைத்துக்கொண்டிருந்தனரோ அதுவே தமது தாய்நாடுதானா? தமக்கும் இங்கு இருப் பிடம் இருக்குமா? என்ற கேள்வி வந்த பின்பு எல்லோர் மனத்திலும் மாற்றங்கள் வரு கின்றன. அதையொட்டி வெளிப்பாடுகள் வருகின்றன. அவை கலை இலக்கியங்கள் என ஆகின்றன.

● ஈழத்தில் புதிய சூழலில் தோன்றியுள்ள

கலை இலக்கிய கர்த்தாக்களைத் தங்களால் இனங்காண முடிந்துள்ளதா?

○ புதிய சூழலில் தோன்றியுள்ள கலை இலக்கிய கர்த்தாக்கள் அனைவரையும் சந்திக்கும் வாய்ப்பு எனக்கு கிட்டவில்லை. எழுத்தாளர்களாக கொழும்பில் ரஞ்சகுமாரையும் தென்பகுதியில் முஸ்லிம் சமுதாயத்தைப் பற்றி எழுதி வருகின்ற திக்குவல்லை கமால், மலை நாட்டில் மாத்தளை சோமு, மாத்தளை வடிவேலு போன்றோர்களையும், கவிஞர்களாக முரளீதரன், பழைய கவிஞர் முருகையன் போன்றவர்களுடன் பல்கலைக் கழக மட்டத்தில் பல இளம் தலைமுறைக் கவிஞர்கள் உருவாகி வருகிறார்கள். புதுவை இரத்தினதுரை போன்ற பழமையையும் புதுமையையும் இணைக்கும் கவிஞர்களையும் காணமுடிகிறது. மட்டக்களப்பில் பாலசுகுமார் என்ற நாடக ஆசிரியர், யாழ்ப்பாணத்தில் குழந்தை சண்முக லிங்கத்துடன் சிதம்பரநாதன் போன்றோர்களும் சிறப்பான படைப்புகளை படைக்கிறார்கள். இவர்கள் எல்லோருமே போராட்டச் சூழ்நிலையில் பாதிக்கப்பட்டவர்கள். கஷ்டப்பட்ட சூழ்நிலையில் இவ் இனம் பல சம்பவங்களை யதார்த்தமாயும், கலா பூர்வமாகவும் செய்கின்றது. நம்பிக்கைக்குரிய ஒரு தலைமுறை உருவாகிவருவது தெரிகின்றது. கவிஞன் வாசுதேவன், பாரம்பரியக்கவிஞன் அவளங்கன் போன்றோரும் புத்தகங்கள் கொடுத்துள்ளார்கள். சிறுகதைத்தொகுப்புகள், நாவல், கவிதை தொகுப்புகள் எனப்பல புத்தகங்கள் கிடைத்துள்ளன. இவை படித்துப் பார்த்த பின்பே அவற்றின் போக்குகளை மதிப்பிட முடியும்.

● 21-ம் நூற்றாண்டின் தமிழ்இலக்கியத்தின்முன்னோடியாக ஈழத்து இலக்கியம் அமையும் என்ற தங்களின் கூற்றுக்குரிய ஆதார அம்சங்கள் எவை?

○ ஒரு பழைமையாக இருக்கக்கூடிய தமிழ் இலக்கிய பாணியிலிருந்து முற்றிலும் வேறுபட்ட ஒரு பாணியில் இப்போது இலக்கியத்தின் உள்ளடக்கம் போய்க் கொண்டிருக்கிறது. இதற்குக் காரணம் அங்கு நடக்கும் இனப் போராட்டமே. நாடகத்தூடு கவிதையூடு எல்லாம் இப்புதிய வடிவம் வருகிறது. தமிழ் நாட்டில் இப்போராட்ட சூழல் இல்லாததால் இம்மாற்றத்தினைக் காண்பது அரிதாக உள்ளது. எனவேதான், ஈழ இலக்கியத்தில் இத்தாக்கத்தால் வரப்போகிற காலத்தில் நம்பிக்கைக்குரிய பல புதிய வடிவங்களை எதிர் பார்க்கக் கூடியதாக இருக்கிறது. ஈழத்தில் காணப்படுகின்ற தீவிர வளர்ச்சி, பெரிய இயக்கம், உத்வேகம் தமிழகத்தில் இருப்பதாகத் தெரியவில்லை. எனவேதான் 21-ம் நூற்றாண்டின் தமிழ் இலக்கியத்தின் முன்னோடி ஈழ இலக்கியம் என்றேன்.

● ஈழ இலக்கியவாதிகள் கைலாசபதி, சிவத்தம்பிக்குப்பின் அறிமுகமானவர்கள் என யாரைக் கருதுகிறீர்கள்?

○ கைலாசபதி,சிவத்தம்பிக்குப்பின் நுஃமான் ஒரு குறிப்பிடும்படியான விமர்சகராக இருக்கிறார். கவிஞர் சிவசேகரம் நல்ல விமர்சகர். பெண்ணிய பார்வையில்சித்திரலேகா, மௌனகுரு போன்றவர்கள் விமர்சிக்கிறார்கள். எனினும் கைலாசபதிக்குப்பின்அவர்வளர்த்தெடுத்த இயக்கம் அதேவீச்சிலும் அதே தாக்கத்தினைக் கொண்டும் வளர்கிறதா என்பதனை ஆராய வேண்டும். எனினும் அடுத்த கால கட்டத்துக்குப் படிப்படியாக வந்து கொண்டிருக்கிறார்கள் என்பது புலப்படுகிறது.

● ஈழத்தில் நல்ல கலை இலக்கியங்கள் என எதைக் கருதுகிறீர்கள்?

○ எனக்கு சமீப காலமாகத் தான் ஈழத்து இலக்கியத்தில் தொடர்பு ஏற்பட்டுள்ளது. எனவே இப்பொழுதுதான் இவற்றைத் தீவிரமாக படிக்க ஆரம்பித்துள்ளேன். இவற்றில் நல்ல இலக்கியம் என்று சொல்லும் பொழுது நாடகத்தில் மௌனகுரு, குழந்தை சண்முகலிங்கம், சிதம்பரநாதன் போன்றவர்களையும், சிறுகதையில் ரஞ்சகுமாரையும்... சிவத்தம்பி போன்றவர்கள் மூலம் அறிமுகமாகும் வாய்ப்பு கிடைத்தது. பல இலக்கியங்களை நூல்கள் வாயிலாகக் காண்கின்றேன். அவை படித்து முடித்த பின்னரே கூறமுடியும். சிங்கள இலக்கியங்களும் போராட்ட சூழ்நிலையோடு பொறுத்தி வெளிவருகின்றன. பொருளாதாரப் பாதிப்பு மிகுதியாக உள்ள மக்க

யிடையே இவ் இலக்கியங்கள் எவ்வாறு வளர முடியும். அதை எவ்வளவு பேர் படிக்கிறார்கள்? என்பன போன்ற செயற்பாடுகளை சில நாட்களே தங்கியிருந்த காலத்தில் அறிய முடியவில்லை.

● இலங்கை இந்திய இணைப்பு நிறுவனம் பற்றியும் அதன் செயற்பாடுகள் பற்றியும் கூறுங்கள்?

○ ஒரு விருந்தின் போது இதுபற்றிய பேச்சு எழுந்தது. பொதுவாக இலங்கையிலுள்ள தமிழ் எழுத்தாளர்களுக்கு ஒரு பெரிய குறை உள்ளது. அதாவது இந்தியாவிலிருந்து வரும் தமிழ் பத்திரிகைகள், இலங்கை எழுத்தாளர்களுக்கு தகுதியான இடம் கொடுப்பதில்லை என்பதுவும், இலங்கை தமிழ் எழுத்தாளரின் எழுத்துக்கள் புரியவில்லை என்று சொல்வதையும் குறையாகச் சொன்னார்கள். இந்தக் குறையை நாம் ஏற்றுக் கொள்ள முடியாது. இலங்கைத் தமிழை பத்திரிகைகளில் போடும் போது வட்டாரத் தமிழ் போன்று இருப்பதாகக் கூறுகிறார்கள். திருநெல்வேலி வட்டாரத் தமிழ் ஆரம்பத்தில் புரியாமலேயே இருந்தது. ராஜநாராயணன், பூமணி ஆகியோரது படைப்புக்களை இப்போது புரியவில்லை என ஒருவரும் கூறுவதில்லை. ஆரம்பத்தில் எனக்குக்கூடப் புரியாதுதான் இருந்தது. வாசகர்கள் இலங்கைத் தமிழைப் படித்துப் பழக்கப்பட்டு விட்டால் எல்லாம் புரியும். இலங்கையில் புதிதாக எத்தனையோ எழுத்தாளர்கள் போராட்ட அடிப்படையிலும் பல இலக்கியங்களைப் படைத்துள்ளனர். ஒரு குறிப்பிட்ட நாலைந்து பேரைத் தவிர புதிய எழுத்தாளர்கள் பற்றித் தமிழ் நாட்டில் யாருக்குமே தெரியாது. இதற்கு காரணம் பத்திரிகைகளே ஆகும். வியாபாரப் பத்திரிகைகள் சிறுகதைகளையே சரியாகப் போடுவதில்லை. இந்நிலையில் இவ்விணைப்பு நிறுவனம் இரு நாடுகளுக்குமிடையே அவசியமாகிறது.

இங்கிருந்து பெரும்பாலான புத்தகங்கள் இலங்கைக்குச் செல்ல முடிகிறது. ஆனால் இலங்கையிலிருந்து சில புத்தகங்களே இங்கு வருகின்றன. அங்கு நடக்கும் கலை நிகழ்ச்சிகள் பற்றியும் தமிழ் எழுத்தாளர்களின் படைப்புக்கள் பற்றியும் இங்குள்ளவைகளின் கருத்துக்களை பகிர்ந்து கொள்ளவும் கருத்தரங்குகள், கலந்துரையாடல்கள் போன்றவற்றை ஏற்பாடு செய்யவும் இவ்விணைப்பு நிறுவனம் உதவிடும். இந்நாட்டுத் தமிழ் எழுத்தாளர்களும் சேர்ந்து ''ஈழத்தமிழ் எழுத்தாளர்கள் இணைப்புப் பாலம்'' என்ற ஒரு அமைப்பை ஏற்படுத்தினால் கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ள மிகச் சுலபமாக இருக்கும் என்ற கருத்து பேசப்பட்டது. இதனை எல்லோரும் வரவேற்றார்கள். இரு நாட்டிலும் பத்துப்பேர் கொண்ட இரு குழுக்கள் தெரிவு செய்து இவர்களின் செயற்பாட்டில் இவ்வமைப்பு இயங்கும். இச்செய்தி இலங்கைப் பத்திரிகையான ''தினகரனின்'' தலையங்கத்தில் கூட செய்தியாக வெளியிடப்பட்டது.

● இந்திய இலங்கைப் பரிவர்த்தனையில் ''ஒருவழிப் பாதை'' என்பது வரலாற்றுக்கால நடைமுறையாய் உள்ளதென் ஈழத்து எழுத்தாளர்கள் குறைபடுவதன் நோக்கம் என்ன?

○ இந்தியாவில் உள்ள பெரியபத்திரிகைகள், முன்பு ஈழத்தமிழர்களுக்குக் கொடுத்தது போல வாய்ப்புக்களை இப்போது கொடுக்காமல் இருப்பது முக்கிய காரணமாகும். இப்பொழுது இந்தியாவில் பத்திரிகைகள் துண்டும் துணுக்குமாக வேறு தினுசாகவே வருகின்றன. காத்திரமாக ஒரு பத்திரிகையுமே வரவில்லை. அப்படிப் பத்திரிகை வந்தாலும் ஈழத்து இலக்கியங்கள் ஜனரஞ்சகப் பத்திரிகையில் வெளியிடப்பட்டாலேயே ஜனங்களைப் போய் அடையும். ஏனெனில் 'புரியாமை' என்பது முக்கிய காரணமாக உள்ளது. அடுத்த காரணம் பரிவர்த்தனை சரியாக நடக்காமை. இங்குள்ள பத்திரிகைகள் எத்தனை ஈழ இலக்கியங்களைப் போடத் தயராக உள்ளன என்பது அடுத்த கேள்வி.

யோகநாதன் போன்ற எழுத்தாளர்கள் தமிழக மக்களுக்கு புரியும் வண்ணம் தமது எழுத்துக்களை ஓரளவு மாற்றி அமைப்பதால் புரிய முடிகிறது.

● நீங்கள் சந்தித்த சிங்களக் கலைஞர்கள் பற்றிய தகவல்களைத் தரமுடியுமா?

○ சிங்களக் கலைஞர்கள் ஒரு சிலரைச் சந்தித்தேன். (அவர்களின் பெயர்கள் ஞாபகமில்லை. குறித்து வைத்துள்ளேன்) கவிஞர்கள் பலர் இருக்கிறார்கள். ஓடிப்போசு, சோபோகிளிஸ் போன்ற நாடகங்களை மொழி பெயர்த்த ஒரு கவிஞர். ஆரிய வம்ச ரணவீரா என்பது அவர் பெயர். சரத்சந்திரா என்ற நாடக ஆசிரியரையும் விபவி என்ற அமைப்பில் ஜயதிலக கம்மல வீரா என்ற சிறுகதை ஆசிரியரையும் இவர்களோடு சுனில் என்ற பத்திரிகை ஆசிரியர், இசை அமைப்பாளர் ஹேமதாசா, டிவி தயாரிப்பாளரும் திரைப்பட இயக்குநருமான பராக்கிரம நிரியல போன்றவர்களையும் சந்திக்கும் வாய்ப்புக்கிடைத்தது. ஆனால் இவர்களின் நூல்கள் ஆங்கிலத்தில் சிலதே உள்ளதால் அவற்றின் வளர்ச்சிப் போக்கை சரியாக அறிந்து கொள்வது முடியாதுள்ளது.

● நாடகத்தில் சிறப்பீடுபாடு கொண்ட நீங்கள் இந்திய தேசிய திரைப்படக் குழுவின் நீண்ட கால உறுப்பினர். இந்தியாவின் பல்வேறு திரைப்பட நாடகப் போட்டிகளின் நடுவர் குழுக்களில் பணியாற்றியவர். இந்த அனுபவங்களின் வாயிலாக இலங்கையில் நாடகங்களின் போக்கு எவ்வாறு அமைந்துள்ளது எனக் கூறமுடியுமா?

○ கொழும்பில் எனக்கு முழு நாடகங்கள் பார்ப்பதற்கான வாய்ப்பு ஏற்படவில்லை. மட்டக் களப்பில் மௌனகுரு அவர்களின் ''புதியதோர் வீடு'' என்ற நாடகம் முழு ஒத்திகை போன்று காண்பித்தனர். யாழ்ப்பாணத்தில் ''பொய்க்கால்'' என்ற நாடகத்தையும் 'சந்தனக்காடு' என்ற இயக்கப் பிரச்சார நாடகத்தையும் பார்த்தேன். ''பொய்க்கால்'' போன்ற நாடகங்களைப் பார்க்கையில் விடயங்களோடும், உள்ளடக்கத்தோடும் புதிய நாடக வடிவத்தையும் தேர்ந்தெடுப்பதற்கான முயற்சி நடந்து கொண்டிருப்பதை காணக் கூடியதாக இருந்தது. நாடகத்தின் பலவிதமான நடவடிக்கைகள் பற்றி பேராசிரியர் சிவத்தம்பி, குழந்தை சண்முகலிங்கம், மௌனகுரு, சிதம்பரநாதன் ஆகியோருடன் பேசினேன். எல்லோருமே புதிய நாடக வடிவத்தை தேர்ந்தெடுக்க வேண்டும் என்ற தேடலில் பேசினார்கள்.

இந்நாடகங்களை போராட்டம் என்று சொல்லாமல் போராட்டத்துக்கான விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகின்ற கலைப்படைப்பாக உருவாக்குகின்றார்கள். இந்நாடகங்கள் ஒரு காலத்தில் போராட்டத்தின் அடிப்படையில் வந்ததை வைத்து நாளைக்கு நாடகக் கலைகள் எல்லாமே ஒரு பிரச்சாரமாக மாறிவிடக் கூடிய தன்மை வந்து விடுமோ என்று எனக்கொரு சந்தேகம் வந்தது. ஆனால், சிவத்தம்பி போன்றோர் ''அவ்வாறு ஒரு நிலை ஏற்படாது; வெறும் பிரச்சாரமாகவே இக்கலைகள் போய்விடாது'' என்றார்கள். எனக்கும் நம்பிக்கை இருக்கின்றது. ஏனெனில் இவற்றைப் பார்க்கும் பொழுது பிரச்சாரத்தை ஒருகலை வடிவமாகவே கொண்டு வருகின்றார்கள். இதே முறையில் பின்பற்றுவது போதுமானது. ஆனால், இயக்கம் சார்ந்த நாடகம் என்பதில் பிரச்சாரத் தன்மை என்பது தவிர்க்க முடியாதது. அது இருக்கத் தான் வேண்டியுள்ளது. அப்படிப் பார்க்கும் போது பிரச்சாரமில்லாத நல்ல கலைவடிவங்களும் அங்கு வளர்ந்து கொண்டிருக்கின்றன. இந்தியாவுடன் ஒப்பு நோக்குவதும் கடினம்.

ஆனால் இந்தியாவிலுள்ள பலவிதமான மரபு வழி வந்த கலைவடிவ வகைகளை யாழ் கூத்துக்களும் கொண்டுள்ளன. (சொல்லப் போனால் சிங்களத்திலும் இக்கூத்து வடிவங்களை சரத்சந்திரா போன்றோர் எடுத்துக் கொண்டுள்ளார்கள்) கேரள, மராட்டி, தமிழ் நாடு போன்ற பிரதேசங்கங்களில் இவ்வடிவங்களே காணப்படுகின்றன. இவை உரையாடல் நாடகங்களிலிருந்து வேறுபடுகின்றன.

● போராட்டச் சூழலில் வாழும் தமிழ் மக்கள் இந்திய திரைப்படப் பாதிப்பு அற்றவர்களாக உள்ளனர். இச்சூழலில் தரமான திரைப்படங்களை உருவாக்க முயற்சிகள் மேற்கொள்ள முடியுமா?

○ கொழும்பு, கண்டி, மட்டக்களப்பு போன்ற பிரதேசங்களில் வாழும் மக்கள் தமிழ்

சினிமாவின் மோசமான விளைவுகளுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர். இவை பத்திரிகைகளினூடு தெரிகிறது. சிங்களவர்களுக்கு அரசியல் உதவி இருப்பதால் தரமான படங்களை எடுக்கிறார்கள். காமினி பொன்சேகாவின் ''நொமியன மினீசுன்'' என்ற படம் சர்வதேச ரீதியில் போட்டி போடத் தக்கதாக அமைந்துள்ளது. தமிழ்ப்படங்களுக்கு இன்றிருக்கும் அரசியல் சூழ்நிலையில் உதவிகள் கிடைக்குமா என்பது தெரியவில்லை. அடுத்து பொருளாதாரத்தைத் திரட்டக் கூடிய பார்வையாளர்கள் பலம் இருக்குமா? என்பது ஒரு கேள்விக் குறியாகவே உள்ளது. எனவே ஈழத்து தமிழ் சினிமா என்பது இன்னும் பத்து வருடங்களுக்கு சாத்தியமில்லை என்றே கூறுகிறேன். மேலும் கலைஞர்கள் தொழில் நுட்ப வல்லுனர்கள் சிறந்த பயிற்சியுடன் இருத்தல் வேண்டும். மலையகத்தில் கூட இதுபற்றி நான் கூறினேன். இவற்றுக்கு வெளிநாடுகளில் சென்று பயிற்சி பெற்றால்தான் சினிமாத் துறையை நன்கு வளர்க்க முடியும்.

நாடகத் துறையைப் பொறுத்தவரையில் அதற்குப் பொருளாதார பலமோ மூலதனமோ அவ்வளவு தேவையில்லை. யாழ்ப்பாணத்தில் நாடகத்துறையின் மிகப் பெரிய வளர்ச்சியை இப்பொழுதே காணமுடிகின்றது. இவர்களுக்கு சினிமா பாதிப்பில்லை. வாழ்க்கை பற்றிய யதார்த்தத்தைப் புரிந்து கொண்டுள்ளனர். கலைப்பற்றிய அனுபவங்கள் மனோபாவங்கள் வளர்ச்சியடைந்த நிலையில் சிறப்பாக அஸ்திவாரங்கள் போடப்பட்டு வருகின்றன. இவர்களுக்கு இந்தியச் சினிமாவின் பாதிப்பு அறவே இல்லாத சூழ்நிலையில் இவர்கள் மூலம் வியாபார ரீதியான படங்களை எடுக்க முடியாது. இதற்கு உதாரணமாக அஸாம் மாநிலத்தினை எடுத்துக் கொள்ளலாம். அங்கு உள்ளவர்கள் இந்திய மக்களுடன் போட்டி போட்டு வியாபார ரீதியான படங்களை எடுக்க முடியாது. அதே நேரம் திரைப்படத்துறையில் புதிதாக அவர்கள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். பல நல்ல கலைஞர்களும் உருவாகியுள்ளார்கள். எனவே இங்கு எடுக்கப்படும் படங்களில் பத்தில் எட்டுப் படங்கள் சமூகப் பிரச்சனையை மையமாக கொண்டதாகவும், அகில இந்திய ரீதியில் பரிசு வாங்கக்கூடிய நல்ல படங்களாகவும் வந்து கொண்டு இருக்கின்றன. இது மாதிரி யாழ்பாணத்திலும் உலக ரீதியில் போட்டி போடக்கூடிய அர்த்தமுள்ள படங்களை எடுக்க முடியும். இவை உலக சந்தைக்குச் செல்லும்போது அதனுடைய பொருளாதாரப் பிரச்சனை ஓரளவு தீர்ந்து விடும்.

அந்த மாதிரியான வாய்ப்புக்கள் யாழ் கலைஞர்களுக்கு இருக்கின்றன. கலைஞர்கள் இப்போதிலிருந்தே தயார் பண்ணல் வேண்டும்.

● **நவீன நாடகங்கள் மூலம் சொல்லப்பட வேண்டிய செய்தி மக்களைச் சென்றடைகின்றனவா?**

○ மக்கள் திரைப்படம் அதிகமாகப் பார்த்த நிலையில் இருப்பதால், நாங்கள் சிறிது கீழே இறங்கி அவர்களையும் சிறிது மேலே தூக்கி இடையிலுள்ள ஒரு பாதையில்தான் நாம் செல்ல முடியும். இங்கே உள்ள மாதிரி புரியாத தன்மையில் அங்கே எந்த நாடகங்களும் இருக்கிறதாகத் தெரியவில்லை. புரியாத தன்மை அங்கு இல்லை. ''பொய்க்கால்'' என்ற நாடகம் பார்க்கும் பொழுது 300-400 ஜனங்களோடு இருந்து பார்த்தேன். எல்லோரும் அந்த நாடகத்தை ரசித்தார்கள். சாதாரண ஜனங்களும் ரசித்தனர். அதேவேளை, ஜனங்களுக்குப் புரிய வேண்டும் என்பதற்காக கலை இலக்கியங்களை மலினப்படுத்தவும் முடியாது.

நாடகங்கள் பார்வையாளரிடம் புரியாது இருப்பது பற்றி வினாக்கள் எழுப்ப வேண்டும். புரியாத இடங்கள்; ஏன் புரியவில்லை? என வினாக்களை எழுப்பி கலந்துரையாட வேண்டும். கருத்தரங்குகள் ஏற்படுத்த வேண்டும். 'பொய்க்கால்' என்ற நாடகத்தில் பொய்க்காலைக் கட்டிக் கொண்டு ஒருவர் உயரமாக வந்தார். அவர் போராட்டத்தில் ஈடுபடும் பையனுக்கு சில புத்திமதிகள் சொல்கிறார். எனக்குத் தெரிந்த வரையில் பழைய காலத்து பழைய மனிதர் போல அவர் காணப்பட்டார். அவர் ஏன் பொய்க்காலைக் கட்டிக்கொண்டு வந்தார்? பொய்க்காலுக்கான முக்கியத்துவம் என்ன? என்பதெல்லாம் மேலும் விளக்கமாக வந்திருக்கலாம் என்பது

தான் என்னுடைய எண்ணங்கள். இது மாதிரி ஒரு சில தன்மைகள் ஜனங்களுடைய வீச்சுக்கு இல்லாமல் இருக்கலாம். மேடையில் உள்ளவர்களின் ஒவ்வொரு அசைவுகளும், வெளிப்பாடுகளும் பார்வையாளர்களைச் சரியான முறையில் சென்றடைதலே நெறியாளருக்குக் கிடைக்கும் வெற்றி.

சிங்கள நாடகங்கள் பார்க்கச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. பொதுவாக, சிங்கள மேடை நாடகங்கள் ரொம்பவும் உயர்தரமாக நடத்தப்படுகின்றதென பலரும் (தமிழர் உட்பட) சொன்னார்கள். அதுமாதிரி எங்களால் நடத்த முடியவில்லை எனவும், அவர்களுக்குப் பல வசதிகள் இருப்பதால் நன்கு முன்னேறிக் கொண்டு வருகிறார்கள் எனவும் தமிழர்கள் ஆதங்கத்துடன் கூறுகிறார்கள். தொலைக்காட்சியில் சிங்களத் தொடர் நாடகம் ஒன்று பார்த்தேன். உரையாடல் நாடகம் என்றாலும் உரையாடல் குறைவாகவும் நடிப்பு மிகைப்பட்டும் காணப்பட்டது. நவீன மேடை நாடகங்களைச் சிங்களவர்கள் பரிசோதனை முயற்சியாகச் செய்வதாகத் தெரியவில்லை.

● பிறெச்ட் போன்றவர்கள் நடிகனும், பார்வையாளனும் நாடகத்துடன் ஒன்றிப் போய் விடாது அந்நியப்பட்டிருத்தலை வலியுறுத்துகிறார்கள். இதற்கும் பாத்திரமாக மாறுவதன் மூலம் சிறப்புற நடிக்க முடியும் என்பதிலும் உள்ள முரண்பாட்டினை தெளிவு படுத்துங்களேன்?

○ பிறெச்ட் ஒரு கால கட்டத்தில் ஒரு சில நோக்கங்களுக்காக, சிலதை மறுத்து உரைப்பதற்காக அந்நியப்படுத்தலைக்கையாண்டார் இதனை முக்கிய விதியாக எடுத்துக் கொள்ள வேண்டுமென்றில்லை. இது நடிப்பின் ஒரு பகுதி; ஒரு போக்கு. இதனை மறுதலிக்க வேண்டுமென்பதில்லை. நடிப்பு என்பது பாத்திரமாக மாறுவது என்பது உண்மை என்றாலும் நடிகன் எப்பொழுதும் தான் என்பதுவும், நடிகன் என்பதுவுமாக இரண்டு விதமாகவே இருக்கிறான். பிரசார நாடகங்களுக்கு இவ் அந்நியப்படுத்தல் அத்தியாவசியமானது. நாடகம் ஒரு போதை வஸ்து. இது மக்களைச் சரியான முறையில் போய்ச் சேர விழிப்புணர்ச்சியுடன் இருக்க வேண்டும், என்பதாலேயே அந்நியப்படுத்தலைச் சொன்னார்கள்.

● பள்ளிக் கூடங்களிலும் கல்லூரிகளிலும் இசை, நாடகம் என்பன இலங்கையில் கற்றுக் கொடுக்கப்படுகின்றன. இந்தியாவில் அவ்விதம் ஏற்படுத்துவதில் பலனுண்டா?

○ இசை பற்றித் தெரியவில்லை. நாடகத்தைப் பொறுத்தவரை எட்டாம் வகுப்புகளிற்கு மேல் ஒரு பாடமாக வைக்கலாம் இசை சிறிய வகுப்புகளிலேயே ஆரம்பிக்கலாம். பாடசாலைப் படிப்பை முடிக்கும் பொழுது நான்கு வருடங்கள் பயிற்சி பெற்ற மாணவர்கள் வெளியேறுவார்கள். இதனால் இக்கலை அழியாது பேணப்படும். யாழ்ப்பாணத்தில் கல்லூரி மாணவர்களே முழுக்க முழுக்க நடிக்கிறார்கள். பாடசாலை மாணவர்கள் மிக நுணுக்கமான கேள்விகளைக் கேட்கிறார்கள்.

○ சத்தியஜித்ரேயின் படங்களைப் போன்று இப்போது வெளிவரும் படங்கள் இல்லாதது ஏன்?

● 54-ம் ஆண்டு ரே படத்தயாரிப்பில் ஈடுபட்ட சமயம் மக்கள் மத்தியில் வெற்றியடைந்ததா என்பது கேள்விக்குறிதான். ஆனால் வெளிநாடுகளில் இவை சிறந்த வெற்றியை ஏற்படுத்தின. தொலைக்காட்சியிலும் வெற்றியடைந்தன. கேரளாவில் பார்வையாளர்களை மனதில் கொண்டே செலவு செய்வார்கள். தமிழ்நாட்டில் 10 லட்சம் செலவழித்து ஒரு படத்துக்கான 'கூட்டுஆடல்' காட்சியினையே எடுப்பார்கள். எனவே வெற்றி வந்தால் மலையுச்சியில் கொண்டு போய் விட்டு விடும். தோல்வி வந்தால் அதள பாதாளம் தான்.

● கலைஞர்கள், இலக்கியப் படைப்பாளிகள் இந்தியாவில் அதிக அளவில் உள்ளனர். அவர்களைத் தகுந்த முறையில் பயன்படுத்த பத்திரிகைகள் எவ்விதம் உதவி செய்ய முடியும்?

○ ஒரு ஜனரஞ்சகமான கவர்ச்சிகரமான கலைகளுக்கு ஒரு பெரிய மேனியா இருக்கிறது. ஒரு நல்ல இலக்கியத்தைப் படைப்பதற்கான படைப்பியல் சூழ்நிலை இன்று தமிழ்நாட்டில் பெரிய அளவில் உருவாகவில்லை. இதற்குப் பல காரணங்கள் உள்ளன. முக்கியமானது, ஜனரஞ்சகப் பத்திரிகையிலுள்ள ஒரு வியாபாரத் தன்மை. பன்னெடுங்காலமாக இவ் வியாபாரத் தன்மையால் ஜனங்கள் இதையே நல்ல இலக்கியம் என எண்ணியுள்ளார்கள். இந்த மாயையைச் சிறிது சிறிதாக அகற்ற வேண்டும். பத்திரிகைகள், கருத்தரங்குகள், கதைகள் மூலம் நல்ல இலக்கியம் எது எனக் காட்டுவதன் மூலம் இதை அகற்ற முடியும். 'சுபமங்களா'விலேயே விமர்சனக் கடிதங்களில் நல்ல இலக்கியங்களை இனம் காண உதவியது பற்றிய கடிதங்கள் வருகின்றன. இதற்கு 20 க்குமேல் பத்திரிகைகள் வெளிவரவேண்டும். முற்போக்கு எழுத்தாளர் சங்கம் போன்று பல இயக்கங்கள் கருத்தரங்குகள், கலந்துரையாடல்கள் என்பனவற்றை வைத்து ரசனைகளை வளர்க்க வேண்டும். இதற்கு பத்திரிகையின் பங்கு மிக முக்கியமானது. துர்அதிஷ்டவசமாக தமிழ் நாட்டில் பத்திரிகைகள் எதுவும் இதற்கு அக்கறை செலுத்துவதில்லை, இதுவே வருந்தக் கூடிய விடயம்,

● எவ்வகையான வாசகர்களுக்காக உங்கள் பத்திரிகை வெளி வருகிறது?

○ கலை இலக்கியத்தில் ஓரளவு பயிற்சி பெற்ற வாசகர்கள், ஆர்வமுள்ள வாசகர்கள், கலை இலக்கியம் பற்றிய வேறுபட்ட சிந்தனையுள்ளவர்கள்; பேராசிரியர்கள், கல்லூரி மாணகள் சிறந்த இலக்கியத்தின் மேல் தாகம் உடையவர்கள், சாதாரண விடயங்களில் சலித்துப் போனவர்கள். இவர்களை நோக்கியே பத்திரிகை நடத்துகிறேன். அதில் வெற்றியும் கிட்டியுள்ளது. மேலும் விரிவடைந்து கொண்டு போகிறது.

● உங்கள் வாழ்க்கையின் இலட்சியம் என்ன?

○ நல்லஇலக்கியங்கள் வளரவேண்டும். உலக அளவிற்கு நல்ல விமர்சனங்களும் கலைகளும் வளரவேண்டும்.

● இளம் கலைஞர்களுக்கு என்ன கூறுகிறீகள்?

○ நல்ல இலக்கியத்தையும், நல்ல கலைகளையும் எடுத்துக்காட்ட-வழிகாட்ட-ஊக்குவிக்க பல ஊடகங்கள் இளம் கலைஞர் மத்தியில் உருவாக வேண்டும். இலக்கியங்களும், கலை கலாச்சாரங்களும் மாறுபட்ட கருத்துக்களும் மதச்சார்பு இல்லாது சண்டை மனப்பாங்கு இல்லாது ஜனநாயக ரீதியில் வளர வேண்டும். இவற்றுக்குத் தளம் அமைத்துக் கொடுப்பது என்பதில் வெற்றிகாணவேண்டும்.

● முதன் முதலில் கடல்கடந்து இலங்கை சென்று வந்துள்ள தங்கள் அனுபவம் பத்திரிகையை வளப்படுத்த உதவுகிறதா?

○ இலங்கையில் என்னைக் கவர்ந்த முக்கிய விடயம் ''மானிடவியல் ஆய்வு'' என்பதாகும். ஒவ்வொரு பிரதேசத்திலும் ஆதியானகலைகள் என்ன? ஆதியில் மக்கள் எப்படி வாழ்ந்தார்கள்? அவர்களுடைய வரலாற்றுப் பின்னணி என்ன? அந்த மக்களின் பழக்க வழக்கங்கள் சடங்குகள், மதவழிபாடுகள் எப்படி அமைந்திருந்தன என்பன போன்ற 'பண்பாட்டியல் மானிடவியல்' என்பது தமிழ், நாட்டை விட இலங்கையில் தீவிரமாக வளர்ந்திருப்பது புத்தகங்கள் வாயிலாகவும், சிறு பத்திரிகைகள் வாயிலாகவும் புலப்படுகின்றது. இவற்றைவிட நாட்டார் வழக்கியல் என்பது பற்றியும் ஆராய்ச்சிகள் நடந்து கொண்டிருக்கின்றன. இவைகள் பற்றிய கருத்துக்களுக்கு 'சுபமங்களா'வின் அடுத்த இதழில் முக்கியமான இடம் கொடுக்க டுவண்டும் எனக் கருதுகிறேன்.

இவையாவும் வரலாற்றைப் புதிய கோணத்தில் பார்க்க உதவுகின்றன. வெறும் இலக்கியத்தில் மட்டுமே தமிழ்மொழி வளர்ச்சி அடைய வேண்டும் என்றில்லை. இவையாவும் தமிழில் வந்தாகவேண்டும். மொழிக்கும் இது நல்லது.


○ இலங்கை பயணத்தில் மறக்க முடியாத சம்பவம் பற்றி கூறுங்களேன்?

# விபசாரம்

தோட்டத்து வளவில்
மண் கிளறும் வாலிபனை
வேலி மறைக்கும்.
துலா மிதிக்கும் உருவமோ
வேலி தாண்டி விஸ்வரூபமாய்க்
கட்டாய்க் கரிதாய்க் கண்ணில் விழும்.
பவுடர் பூசிய ஒட்டுமீசைக் கதாநாயகனைவிட
நிசமான ஆண்பிள்ளை
வளவுப் பனையிலும் ஏறுவான்.

ஆண்களைப்
பாராதே பேசாதே நினையாதே!
அண்ணன் (காவலாள்) அருகாய் நடப்பான்.
சைக்கிளில் தொடரும் இளைஞனைக்
காவாலி என்று ஏசுவான்.
வயதுக்கோளாறு
சந்தியிலே நின்று கண்சிமிட்டும் வாலிபத்தின்
சட்டைப் பொத்தான்களைத் தளர்த்தும்.
கடிதம் தருவதற்கு வந்தவனின் கையை
நடுக்கும்.

சிநேகிதிகளின் முற்றல் அரட்டைகள்
பாராதே பேசாதே
பருவமும் வயதும் மீறாத ஆணைகள்.
நினைவு மதில் தகர்க்கும்.
விதவிதமாய் கனவுகள்
இடையே விரஸமாய்.



காசுங் காணியும் நகையுந் தந்தாற்
கல்யாணமென்று வந்தாய் வாங்கினாய்
கனவுகள் தூர்ந்தன.
புதைந்த நினைவுகளில்
வந்து போன ஒருவன் தவறாமல்
இன்பம் நுகர்ந்தே இருந்தாலும்
இல்லாதவாறு
உன்னோடு தூங்கி
எழும் ஒவ்வொர் விடியலிலும்
ஏனிந்த அருவருப்பு?

—புவனம்

நன்றி : தாயகம் (ஈழத்தமிழ்)

நூல் விமர்சனம்

செ. யோகநாதன்

# மூன்று தரமான தொகுதிகள்

1- ஒரு ஜனனத்தின் அஸ்தமனம் — நீர்கொழும்பூர் முத்துலிங்கம்

2- அயல் கிராமத்தைச் சேர்ந்தவர்கள் — நந்தினி சேவியர்

3- வெட்டுமுகம் — இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன்

வெளியீடு:
இலங்கை,
தேசிய கலை இலக்கியப் பேரவையுடன்
இணைந்து
சவுத் ஏசியன் புக்ஸ்,
6/1, தாயார் சாகிப் 2-வது சந்து, சென்னை-2

மூன்று வெவ்வேறு தளங்களின் பின்னணியில் இருந்து படைக்கப்பட்ட, ஆனால் அடிப்படையில் பொதுத் தன்மை கொண்ட தரமான தொகுதிகளை அண்மையில் படிக்க நேர்ந்தது.

அறுபதுகளின் பிற்பகுதியில் எழுதத் தொடங்கியவர் நீர்கொழும்பூர் முத்துலிங்கம். ஈழத்துப் படைப்பிலக்கியத்தில் முத்துலிங்கத்தின் இடம் சரியாகப் பதிவு செய்யப்படவில்லையென்பதை அவரது தொகுதியான •ஒரு ஜனனத்தின் அஸ்தமனம், புலப்படுத்துகிறது. சிறந்த படைப்பாளியாக இத்தொகுதி அவரை உறுதிப்படுத்துகிறது.

ஒரு நாவலும், ஐந்து சிறுகதைகளும் உள்ளடங்கிய இந்தத் தொகுதியைப் படிக்கின்றபோது முழுமையான அனுபவம் உண்டாவதை உணரலாம். எந்தப் பிரயத்தனமோ உத்திமுறைகளோ இன்றி வெகு இயல்பாகவும் சர்வ சாதாரணமாகவும் கதையைச் சொல்வதுதான் ஆசிரியரின் சிறப்பு. ஆனால் இவரது பதிவு வெகு நுட்பமானதாயும் மெய்ம்மை கொண்டதாகவுமிருப்பதனால் ஒருவரியைக் கூட இவரது படைப்பில் வீணானதாக நம்மால் காண முடிவதில்லை. நம்மோடு மிக நெருங்கிய உணரப்பட்ட சம்பவமாக நமக்கு மிக அருகில் வந்துவிடுகின்றன இவரது கதைகள். ஒரு சிறந்த படைப்பாளனின் அடையாளம் இதுதான்.

முத்துலிங்கத்தின் வாழ்வு அனுபவம் மிகவும் விரிந்ததென்பதை அவர் பற்றிய குறிப்புக்கள் தெரிவிக்கின்றன. திரைப்படத்துறை சார்ந்தவர். நாடக அபிமானி. மூன்று மொழிகளும் அறிந்தவர். எல்லாவற்றையும் விட நுட்பமாக எதையும் கவனித்து உள்வாங்கிக் கொள்கிற இயல்புடையவர். வாசகர். இவையெல்லாம் சேர்ந்து முத்துலிங்கத்தை ஒரு முழுமையான படைப்பாளியாக ஆக்கியிருக்கின்றன.

முத்துலிங்கத்தின் கதைகளின் எல்லை ஒரு சிற்றூராகவுமிருக்கிறது. கடலோரக் கிராமமாக வனப்புற நம்மைக் கொள்ளை கொள்கிறது. அதன் மனிதர்களும் குறையும் நிறையும் சலனமும் சஞ்சலமும் கொண்டவர்களாக

வந்து போய் நம் மனதில் தங்குகின்றனர். நம்மை அழுத்துகின்றனர். ஆயினும் இவர்கள் எல்லைக்குள் உட்பட்டவர்களல்லர். இவர்கள் சர்வ தேசத்தன்மை கொண்டவர்கள். கால தேச வர்த்தமானங்களையும் மொழி எல்லைகளையும் தாண்டிய உலக மனிதர்கள். இது தான் முத்துலிங்கத்தின் படைப்புக் கலையின் தனிச் சிறப்பு. கைதேர்ந்த எழுத்தாற்றல், ஒரு சில வார்த்தைகளிலேயே முழுமையான அனுபவத்தை தந்து விடுகிறது. உள்ளடக்கமும் உருவப் பண்பும், சொல்ல வந்தவற்றை பூரணமாகப் பொலிய வைத்து விடுகிற விந்தை இந்த எழுத்தாற்றல் சார்ந்ததே. முத்துலிங்கமும் இந்த எழுத்தாற்றல் அமைந்தவர்.

'ஒரு மகன் தன் தாயைத் தேடுகிறான்' என்ற கதை, சிறந்த படைப்பொன்றிற்கு எடுத்துச் சொல்லத்தக்க உதாரணம். திரும்பத் திரும்ப படிக்கிற போது தன்னை இன்னுமின்னும் வெளிப்படுத்துகிற சொற்சித்திரம். தமிழில் எழுதப்பட்ட மிகச் சிறந்த கதைகளில் இதுவும் ஒன்று. ஒரு நேர்த்தியான கதை எப்படி எழுதப்பட வேண்டுமென்று அறிய விரும்புகிற இளம் எழுத்தாளர்களுக்கு, இந்தக் கதையை திரும்பத் திரும்ப படிக்கக் கொடுக்கலாம். இது போல இன்னொரு கதை, 'குரங்கு'. இத் தொகுதியில் இல்லாத கதை.

முத்துலிங்கம், இன்னும் படைப்பாளியாக தமது நேரத்தை விஸ்தரித்துக் கொண்டால் தமிழில் சர்வதேசத் தரத்துக்கு நிகரான படைப்புக்களை அவர் வழங்க முடியுமென் பதை உறுதியாகச் சொல்லமுடியும்.

சொல்லலங்கார உத்தி வித்தைகளைப் புறக் கணித்து தனது வாசகர்களைப் பற்றிய உறுதி யான தீர்மானத்தோடு எழுதுகிற இன்னொருவர் நந்தினி சேவியர். அவரின் 'அயல்கிராமத்தைச் சேர்ந்தவர்கள்' புதிய சிறுகதைத் தொகுதி.

தனது வாழ்வின் அனுபவங்களை, செம்மையாகவும் அழுத்தமான கருத்து நோக்குடனும், மானீட நேயத்துடனும் பதிவு செய்கிறார் சேவியர். எழுபதுகளில் சேவியர் முற்போக்கு வட்டாரத்தில் அறிமுகமான போதே, அவரது




கதைகளில் ஒடுக்கு முறைகளைச் சாடுகின்ற எதிர்க்குரல் முதன்மை பெற்றிருந்தது. சாதாரண மனிதர்களை அவர் எழுத்தில் கொண்டு வந்தார். மிக எளிமையான ஆனால் வலிமையான சித்திரிப்புக் கலையழகோடு.

சேவியருக்கும் இதுவே முதல் தொகுதி. இந்தச் சிறு தொகுதியிலேயே அற்புதமான படைப்பாளியாக நாம் அவரை அடையாளம் காண முடிகின்றது. செறிவான மானீட வாழ்வை அதன் பல தளங்களிலும் கண்டு எழுதுகிற திறன் சேவியரின் தனித்தன்மை. தனது கதையுலகத்தை அப்படியே வாசகரின் முன்னே நிறுத்தி விடுகிற சொல்லாவகம், வெகு எளிமையான உரை நடைத்திறன் சேவியரின் வியக்கத்தக்க சிறப்பு.

இத்தொகுதியிலுள்ள எட்டுக் கதைகளும் முற்றிலும் வெவ்வேறானவை. ஆனால் அவை ஒவ்வொன்றும் ஒன்றோடு ஒன்றாகத் தொடர்பு பட்டு நிற்பவை. வாழ்வின் பல்வேறு கோணங்

களை ஒரு சாதாரண மனிதனின் பண்பட்ட கண்களினூடாகக் காண்பவை போன்றவை.

'வேட்டுமுகம்' என்ற கதைத் தொகுதி, யாழ்ப்பாண மத்திய தரவர்க்சத்தின் பல்வேறு அவலங்கள், மனோநிலைகள், நோக்கங்களை வெளிப்படுத்துகிறது. பதினொரு கதைகளைக் கொண்ட இத்தொகுதியில் ஆசிரியர் இணுவை யூர் சிதம்பர திருச்செந்திநாதனின் சமுதாயத் துக்கெதிரான தார்மீகக் கோபம் பளிச்சென்று தெரிகிறது.

1970ம் ஆண்டுக்குப் பின்னர் யாழ்ப்பாண சமுதாயத்திலுள்ள பல்வேறு முரண்பாடுகள், மாற்றங்கள், அவலங்கள் என்பனவற்றையே சிதம்பர திருச்செந்திநாதன் தன் கதைகளில் கொண்டுவர முயன்றிருக்கிறார். எனவே இக் கதைகளில் சமகால வரலாற்றுப் பதிவுகளையும் துல்லியமாகக் காணமுடிகிறது. அதுவும் கோபம் நிறைந்த எழுத்தாக.

மத்திய தரவர்க்கத்தின் அவல நிலைமைகளைக் காண்பிக்கிற எத்தனத்தோடு வாசகர்களின் முன் இவையெல்லாம் நியாயந்தானா என்ற கேள்வியையும் எழுப்பத் தவறவில்லை ஆசிரியர். இதனால் ஆசிரியர்கதைகளில் தலையிட்டுப் பேசுகிறாரென்பது அர்த்தமல்ல.

மூன்று படைப்பாளிகளிலும் ஒரு சிறப்பம்சம் மேலோங்கித் தெரிவதை இங்கே குறிப்பிட்டாக வேண்டும். இவர்கள் இன்றைக்கு உதிரியாகப் பேசப்படுகிற எந்த இலக்கிய வெற்று வேட்டுத் தனங்களுக்கும் உட்படாதவர்கள். கனவுலகிலோ, FANTASYகளிலோ தம்மைச் சிக்க வைக்காத மானிட நேயம் கொண்ட படைப்பாளிகள். இலக்கியமென்பது பரந்துபட்ட மக்கள் திரளுக்கே படைக்கப்பட வேண்டியது எனநம்புகிற யதார்த்த வாதிகள். அகவுலகின் சகதிகளில் புதைந்து புலம்பாத- சமூகப்பார்வை கொண்ட புறநிலைவாதிகள். இந்தக் காரணத்தினாலேயே இவர்களது எழுத்துக்கள் தனிச்சிறப்போடு நம்மை வசீரிக்கின்றன. ☆

# ஒரு ஜனனத்தின் அஸ்தமனம்

ஆசிரியர்: நீர்கொழும்பூர் முத்துலிங்கம்

ஈழத்துக் கடற்கரை ஓரமாக உள்ள சிற்றூர் ஒன்றிலும் வேறோரு ஊர் ஒன்றிலும் நடமாடும் இந்நாவலின் பாத்திரமான கணபதியா பிள்ளை, விக்டர் ஹியூகோவின் கதையில் வருபவர் போன்று தோற்றம். கணபதியா பிள்ளை மீன் வல் மீன்தான். ஆசிரியர் வெகு நன்றாகப் படம் பிடித்துக் காட்டும் பாத்திரங்கள் முழு அளவில் நிறைந்து காணப்படுகின்றனர். பிரெஞ்சு நாவலைச் சொன்னது ஓர் ஒப்புமைக்காகத் தான். அத்தியாயங்களின் கடைசிப் பகுதியில் அநேகமாக இயற்கையைத் துணைக்கழைத்து அதன் வருணனையைத் தருவது நல்ல உத்தி. வாசகனால் கதை வியாபிக்கிறது. துயரங்கள் அடுக்கடுக்காக சம்பவிப்பதை, காட்சிகள் மீதான பார்வையை மாற்றி இயற்கைபால் திருப்புவது ஆசிரியரின் கை வந்த கலையாகச் சொல்ல வேண்டும். அவ்வாறு சொல்வதன் மூலம் சொல்ல முடியாத சில விஷயங்களை நன்கு சொல்கிறார்.

ஈழத்துக் கிராமத்திற்கும் தமிழகத்திற்கும் என்ன வேற்றுமை இருக்க முடியும்? அத்துவமான இடத்தில் நடு இரவில் பேருந்து விட்டிறங்கி தேநீர்க் கடையின் சிம்னி விளக்கைப் பார்க்கும் அநாதைப் பெண்ணின் நிலை எல்லா இடங்களிலும் அறிந்து கொள்ளப்படுகிற சங்கதி. தாய்மையடையப் போகிற அந்தப் பெண்ணையும் அதே நிலையிலுள்ள வேட்டையாடப்பட்ட முயலும், கடைசி நேரத்தில் மனம் உருகி, ''உன் அம்மா நல்லவள்'' என்று சொல்லும் கந்தசாமியும்...என்று நிறையவே சொல்லலாம்.

ஆசிரியர் முத்துலிங்கத்தை நிறைய நாவல்கள் எழுதச் சொல்லிக் கேட்டுக் கொள்ள வேண்டும்.

—மா. அரங்கநாதன்

# உட்கவரும் மனம்

## —மரியா மாண்டஸாரி

### உ. குழந்தைகளின் தனித்துவத்தைக் காத்து வளர்க்கும் கல்வி

குழந்தை பிறப்பிலிருந்தே வாழ்க்கைக்கான கல்வி துவக்கப்பட வேண்டும் என்கிறோம். இந்தக் கருத்தை விளக்க வேண்டுமானால் ஒவ்வொன்றாக ஆழ்ந்து கவனிக்க வேண்டியது அவசியம்.

> ''கல்வி என்பது வாழ்க்கையோடு ஒட்டியதாயும், வாழ்க்கையை காக்கும் மையக் கருவாகவும் இருக்க வேண்டும்''

என்று மகாத்மா காந்தி கூறியிருக்கிறார். இதற்கு முன் கல்வி பற்றி சமூக சீர்திருத்தத்தில் ஈடுபட்டிருந்தவர்களோ அல்லதுமதத் தலைவர்களோ இப்படியொரு கருத்து வெளியிட்டதில்லை.

அறிவியல் இன்றியமையாதது என்பதை உணர்த்துவதோடு, எல்லா பருவத்துக்கும் கல்வியை விரிவுபடுத்துவது நடைமுறைச் சாத்தியம் என்பது இந்த நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்தே வலியுறுத்தப்பட்டு வருகிறது. ஆயினும் பொதுமக்களுக்கான எந்தத் துறையும் இந்தக் கருத்தை நடைமுறைப் படுத்த முன் வரவில்லை.

இன்றைய கல்வி சிறப்பான முறைகளையும் நோக்கங்களையும், சமூககுறிக்கோள்களையும் கொண்டிருக்கிறது. ஆனால் வாழ்க்கையைப் பற்றிய எந்த கண்ணோட்டத்தையும் அது கொண்டிருக்கவில்லை என்பதையும் சொல்ல வேண்டியிருக்கிறது. பல்வேறுநாடுகளில் வெவ்வேறு விதமான கல்வி முறைகள் அதிகார பூர்வமாகவே பழக்கத்தில் இருந்து வருகிறது. அவற்றில் குழந்தையின் தனித்துவத்தை காத்து அதன் வளர்ச்சிக்கு உதவிபுரிவதற்கு ஒன்றும் இல்லை என்பதே உண்மை. நிஜ வாழ்க்கைக்கும், சமூகத்திற்கும் தொடர்பற்றதாகவே கல்வி உள்ளது. எனவே, கல்வியுலகில் நுழைவோரெல்லாம் சமூகத்துடன் தொடர்பற்றவர்களாகி விடுகின்றனர்.

பல்கலைக்கழக மாணவர்கள் அவர்கள் எந்த கல்லூரியில் பயில்கிறார்களோ அந்தக் கல்லூரியின் சட்டதிட்டங்களுக்கு கீழ்படிந்தே தீர வேண்டும். கல்லூரி நிர்வாகத்தால் வகுக்கப்பட்ட பாடத்திட்டத்தை எல்லோரும் ஒன்றாக பின்பற்ற வேண்டும். ஆனால் அண்மைக்காலம் வரை மாணவர்களின் சமூகப் பின்னணி பற்றியோ, உடல் நிலைப்பற்றியோ பல்கலைக்கழகங்கள் சிறிதளவு அக்கறையும் கொண்டிருப்பதாக தெரியவில்லை. மாணவன் பட்டினி கிடப்பதுபற்றியோ, செவியில் மந்தத் தன்மை கொண்டிருப்பது பற்றியோ கவலைப் படாமல் அவனுக்கு குறைவானமதிப்பெண்கள் தருகிறது.

தற்போது மாணவர்களின் உடல் ஆரோக்கியத்தைப் பற்றி கவனம் செலுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்ற போதிலும் அவை சுகாதாரம் சம்பந்தப்பட்டவையாகவே உள்ளன. உடனே, குறைபாடுகள் நிறைந்த பொருத்தமற்ற கல்வி முறைகளால் மாணவர்களின் அறிவாற்றல் அச்சங்களுக்கு உள்ளாகியோ, பாழ்பட்டு போயிருக்கும் என்றோ எவரும் பயப்பட வேண்டியதில்லை.

கிளெப்பாரீடு (Claparede) என்பவரால் உருவாக்கப்பட்ட ''புதிய கல்வி இயக்கம்'' பாடதிட்டத்தில் உள்ள பாடங்களின் எண்ணிகையை ஆராய்ந்து, மனச்சோர்வை குறைக்க பாடங்களின் எண்ணிக்கையில் சிலவற்றை குறைத்தது. ஆனால் பண்பாட்டின் செல்வங்களை சோர்வடையாமல் ஒரு மாணவன் பெறுவது எப்படி என்பதைப் பற்றி தொட

வில்லை.

அரசின் கட்டுப்பாட்டுக்குட்பட்ட எல்லாக் கல்வி முறைகளிலும், பாடதிட்டத்தை எப்படியாவது முடித்து விடவேண்டும் என்பதே பிரதானமாகும். சமூக கொடுமையை எதிர்த்தோ அல்லது எல்லோரையும் பாதிக்கக் கூடிய தேசீய பிரச்னையில் ஈடுபட்டாலோ கல்லூரியின் ''அதிகாரவர்க்க பாம்பு'' படமெடுக்கிறது மாணவர்களுக்கு சமூக, அரசியல் விஷயங்கள் தேவையில்லை. பிறப்பில்தான் கவனம் என்று கட்டளையிடுகிறது. ஒருவன் பல்கலைக்கழக பாடத்தை முடித்து வெளியே வரும்போது அறிவு சிக்குண்டு போய் விடுகிறது. இதனால் தனித்தன்மையை இழந்து, பிரச்னைகளை சீர்தூக்கி பார்த்து முடிவெடுக்கும் சக்தியற்றவனாகி விடுகிறான்.

கல்வித்துறை ஏற்பாடுகளெல்லாம் சமூக வாழ்க்கையோடு சம்பந்தமில்லாதது என்ற கருத்து நிலவுவதால், பிரச்னைகளெல்லாம் கல்விக்கு அப்பாற்பட்டதாகக் கருதப்படுகின்றன.

---

''நாளுக்கு நாள் பைத்தியக்காரர்களும், குற்றவாளிகளும், அண்டை வீட்டாரால் 'விசித்திர பேர்வழி' என்ற முத்திரை குத்தப்பட்டவர்களுமே பெருகிக் கொண்டு வருகிறார்கள். இந்தத் தீமைகளையெல்லாம் பள்ளிக் கூடங்கள் விலக்க வேண்டும்....''

---

கல்வி உலகம் ஒரு தீவு போல காட்சியளிக்கிறது. வெளியுலகத்திற்கும் அதற்கும் ஒரு தொடர்பும் இல்லை. வெளியுலகத்தை நசுக்கி வைத்து விட்டு வாழ்க்கைக்கு ஆயத்தமாகும் இடம் போலிருக்கிறது.

மாணவன் ஒருவன் எலும்புருக்கி நோயால், பாதிக்கப்பட்டிருக்கிறான் என்று வைத்து கொள்வோம். அது ஆர்வமும், வருத்தமும் நிறைந்த ஒரு செய்தியல்லவா? சமூக



வாழ்க்கையில் இரண்டறக் கலந்திருந்த அவனை நோயுற்ற காலத்தில் கவனிப்பதை விட்டுவிட்டு, அவன் இறந்தபிறகு மயானத்தில் பல்கலைக்கழகத்தின் சார்பில் அனுதாபம் தெரிவிக்கத் தோன்றுவது விந்தையல்லவா?

மாணவர்கள் கல்லூரிப் படிப்பில் தேர்வுப் பெற்று வெளியுலகத்தில் அடியெடுத்து வைக்கும்போது, குடும்பத்தாருக்கும், நண்பர்களுக்கும், ஏன் தமக்கே எந்தவிதத்திலும் பயனற்ற சுமைதான் என அஞ்சுகின்றனர். ஆனால் பல்கலைக்கழகம் இதை கவனிக்க வேண்டுமென்று எதிர்பார்க்கப்படுவதில்லை சட்டப்படி இந்த அதிகாரக் குழுவும் இவற்றிலெல்லாம் தலையிடுவதில்லை. உளவியல் குறைபாடுள்ள மாணவனைப் பற்றி எவ்வித அக்கறையும் எடுத்துக் கொள்வதில்லை. இந்தக்குழு பாடதிட்டத்தை அமைக்கிறது; தேர்வு நடத்துகிறது; தேர்வில் வெற்றி பெற்றவர்களுக்கு பட்டயமோ, அல்லது பட்டமோ வழங்குகிறது அவ்வளவுதான்.

அதே வேளையில், சமூக பிரச்னைகளை ஆராய்ந்த ஆராய்ச்சியாளர்கள் சில உண்மைகளை கண்டுபிடித்தனர். அதாவது பட்டதாரிகளும், பள்ளி ஆசிரியர்களும் வாழ்வதற்கான எந்த தயாரிப்பும் இல்லாமலும், சமூகத்திற்கு பயன்தரும் வகையில் தம்மை ஈடு

படுத்திக் கொள்ளும் சக்தியற்றவர்களாகவுமே இருக்கின்றனர்.

புள்ளி விபரங்கள் எதைக் காட்டுகின்றன? நாளுக்குநாள் பைத்தியக்காரர்களும், குற்றவாளிகளும், அண்டைவீட்டாரால் 'விசித்திர பேர்வழி' என்ற முத்திரை குத்தப்பட்டவர்களுமே பெருகிக் கொண்டு வருகிறார்கள்.

இந்தத் தீமைகளையெல்லாம் பள்ளிக் கூடங்கள் விலக்க வேண்டும் என்று சமூகவியலாளர்கள் கருதுகின்றனர். ஆனால் பள்ளிக் கூடமோ ஒரு தனி உலகம்; இத்தகைய பிரச்னைகளைப் பற்றி கவனம் செலுத்தாத ஒரு ஒரு தனி உலகம்; பள்ளிக்கூடம் என்ற அமைப்பு வழிவழியாய் வந்தது. உள்ளிருந்து அதன் போக்கை மாற்றியமைப்பது என்பது அரிதான ஒன்று. வெளியிலிருந்து உருவாகும் ஒரு பயற்சியே கல்வியின் எல்லா மட்டத்திலும் உள்ள தவறுகளை கண்டுணர்ந்து ஒழுங்குப் படுத்த முடியும்.

பிறப்பிலிருந்து ஆறு-ஏழு வயது வரை நடைபெறுவதென்ன? இந்தப் பருவத்தைப் பற்றி பள்ளிக்கூடம் அக்கறைக் கொள்வதே இல்லை. எனவே இதை முன் பள்ளிக்கூட பருவம் என்று கருதுகின்றனர்.

குழந்தைகளால் பள்ளிக்கூடத்தில் என்ன செய்ய இயலும்? எங்கெல்லாம் முன் பள்ளிக் கூட பருவத்துக்கென்று பள்ளிக்கூடங்கள் தோன்றியிருக்கின்றனவோ, அவர்கள் மத்திய கல்வி நிர்வாகத்தை எதிர்பார்க்கவில்லை. அவர்கள் தாங்களாகவே நிர்வகித்துக் கொண்டனர்.

குழந்தையின் உளவியலை பாதுகாக்க வேண்டும் என்ற அக்கறை சமூகப்பிரச்னை அல்ல என்றும் குழந்தைகளின் வளர்ச்சி முழுக்க வீட்டினுடையது என்றும் அது நாட்டின் பொறுப்பல்ல என்றும் சமூகம் கருதுகிறது.

தற்போது குழந்தையின் முதல் ஆண்டுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. நடைமுறையில் பயன்படுத்த வேண்டிய ஆலோசனைகள் இது தான் என்று இன்னும் வரையறுக்கப் படவில்லை. தாய்மையறிவு பற்றிய பயிற்சி தற்போது அவசியமாகிறது. ஆனால் வீடு பள்ளித் கூடத்தின் ஒரு பகுதி அன்று. அது சமூகத்தைச் சார்ந்தது. ஆதலால் நடைமுறையில் மனித ஆளுமையும், அதன் பாதுகாப்பும் உடைத் தெரியப்படுகிறது.

ஒரு பக்கம் சமூகத்தைச் சார்ந்த வீடு இருக்கிறது. ஆனால் அது சமூகத்தோடு தொடர்பில்லாமல் தனித்து வாழ்கிறது. சமூகமும் இதை கவனிக்காமல் ஒதுக்கி வைத்து விடுகிறது. மற்றொரு பக்கம் இருப்பது பள்ளிக் கூடம். இதுவும் சமூகத்தில் விலகியிருக்கிறது. இறுதியில் பல்கலைக்கழகம் கூட அப்படியே உள்ளது, ஒத்தக்கருத்தோட்டம் [Conception] இல்லை. வாழ்க்கைக்கான சமூக அக்கறையும் இல்லை. ஒன்றை ஒன்று புறக்கணிகும் ஏதோ சில கருத்துக்கள் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றன. இக்கருத்து அதே வடிவிலோ அல்லது மாறுபட்டோ, பள்ளிகளிலும், வீடுகளிலும், பல்கலைக்கழகங்களிலும் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றன.

கல்வி கற்க வேண்டிய பருவத்தின் இறுதிப் பகுதியைக் கொண்டிருக்கிற ஒருவகைப் பள்ளிக்கூடம் என்றே பல்கலைக்கழகமும் கருதப்பட்டு வருகிறது. இவ்வாறு தனிமையாக ஒதுக்கப்படுவதால் ஏற்படும் தீமைகளை ஆராய புதிய சமூக அறிவியல் நூல் முனைந்திருக்கிறது. இந்த புதிய நூலும், பள்ளிக்கூடத்திற்கு வெளியேதான் தம் ஆராய்ச்சியை நடத்துகின்றன. ஆகையால் உண்மையில் வாழ்க்கையின் வளர்ச்சிக்கு உதவி புரியும் முறை ஏதும் இல்லை. இம் மாதிரி கல்விக் கண்ணோட்டம் தேவையென்ற கருத்து விஞ்ஞானத்திற்கு புதிதன்று. ஆனால் இன்னும் இந்தக் கருத்துக்கு உரிய மரியாதை அளிக்கப்படவில்லை. நாகரீகத்தின் அடுத்த படியாக இதைத்தான் முதலில் கவனிக்க வேண்டும். இதற்குத் தேவையான வழிவகைகள் ஏற்கெனவே வகுக்கப்பட்டாகி விட்டது.

(தொடரும்)

தமிழில் : **கே. உமாபதி**

ஈழத்துக் கவிதை :

# கடன் பற்றிய ஒரு மூன்றாமுலகப் பார்வை


என் பாட்டனுடைய வயலை
உன் பாட்டன் பறித்தெடுத்தான்,
என் அப்பனுடைய வீட்டை
உன் அப்பன் திருடினான்,
என் உழைப்பின் பயனை
நீ திருடுகிறாய்.

நான் உன் வயலில் உழைக்கின்ற
உழவு யந்திரம் போல,
உன் கறவை மாடு போல.
யந்திரத்துக்கு எண்ணெய்,
மாட்டுக்குப் பிண்ணாக்கு,
எனக்கு உன் பிச்சைக்காசு.

வயல் வேலை ஒழிந்தால்
யந்திரத்துக்கு ஓய்வு,
அதற்குப் பசிக்காது.
மாட்டுக்கு எப்படியும்
வைக்கலாவது நிச்சயம்
எனக்குக் கூலி இல்லை-எனவே
வயிற்றுக்கும் வேலையில்லை.

பசி என்று வந்தாற்
பட்ட கடனையும்
வளருகிற வட்டியையும்
நினைவூட்டி
முயற்சியின் மேன்மையும்
உழைப்பின் பலனும் பற்றி
உபதேசிப்பாய்,
சேமிப்பின் மேன்மை சொல்வாய்.
என் முயற்சியும் உழைப்பும்
உன் சேமிப்பாயின.

திருநாள் சாவீடு என்று
இடையிடையே
தானமும் செய்வாய்,
உன் வீட்டில் மரணம் என்றால்
என் வயிறு
எதிர்பார்ப்பாற் துள்ளுகிறது.
நீ போடும் சோறு



உன் அப்பனையும் பாட்டனையும்
நாளைக்கு உன்னையும்
மோட்சத்துக்குக் கொண்டு போகும்
என்று நீ நம்பினால்
நான் மறுக்க மாட்டேன்—
ஏனென்றால்
எனக்கு மோட்சத்தைத் தெரியாது
என்றாலும்
நீ போடும் சோற்றுக்கு
என்னிடம்
நன்றியை எதிர்பாராதே.

என் பாட்டன் பறிகொடுத்த வயலும்
என் அப்பன் இழந்த வீடும்
நான் தினமும் களவு கொடுத்த உழைப்பும்
வட்டியும் முதலுமாகக்
கணக்குப் பார்த்த போது
தெரிந்தது—
யார் யாருக்குக் கடனாளியென்று.

—சிவசேகரம்


OORVASI
DETERGENT CAKE
R
MADE IN INDIA
RAJAM INDUSTRIES
MADRAS
ஊர்வசி
டிடர்ஜெண்ட் கேக்

**இலங்கை சிறுகதை:**

# கோசலை

**ரஞ்சகுமார்**

““குலம்!....... மாடுகளுக்குக் கொஞ்சம் வைக்கல் இழுத்துப்போடு மேனே’’

குலம் மல்லாந்து படுத்துக் கிடந்தான். ஓலைப் பாயில் தலையணைகூட இன்றித்தான் இவன் படுப்பான். முதுகு வலிக்குமா, இல்லையா? இவன் ஏன் ஒரு காட்டுப் பிறவிமாதிரி இருக்கிறான்!

அம்மா திண்ணைக் குந்தில் கால் நீட்டி உட்கார்ந்தவாறே திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருந்தாள்.

‘‘கொஞ்சம் வைக்கல் இழுத்துப் போடன் அப்பன்...மாடுகள் கத்துதெல்லே!......’’

குலம் நெற்றியில் முழங்கைகளை அழுந்தப் போட்டவாறு, கால்களை ஆட்டியவாறு படுத்துக் கிடந்தான். அம்மா இவனையே பார்த்துக் கொண்டிருந்தாள். மார்பில் உரோமங்கள் படர்கிற வயது. முரட்டுத்தனமான உடல்வாகு. குரல்கூடக் கட்டைக்குரல், இவனுடைய அப்பா மாதிரி. நெற்றியில் தூக்கிப் போட்டிருந்த கைகளைப் பார்த்தாள். நரம்புகள் புடைத்துக்கொண்டு விம்மித் தெரிந்தன. உள்ளங்கைகள் முதலையின் முதுகு மாதிரி காய்த்துப் போயிருந்தன. விரல்கள் ஒயிலும் கிறீஸும் படிந்து பழுப்புநிறமாகத்தெரிந்தன. நகக் கண்களில் கறுப்பாக ஒயில் அழுக்குப் படிந்திருந்தது.

‘‘குலம்!...... கொஞ்சம் வைக்கல்.......’’

அவசரமாகப் பாய்ந்து இடை வெட்டியவாறு மகன் சிடுசிடுத்தான்.

‘‘நீயே இழுத்துப் போடன்.... எனக்கு ஒரே அலுப்பு.’’

அம்மா சற்றே வேதனையின் சாயல் படியச் சிரித்தாள்.

சீலன் இருந்தால் இப்படியாஎல்லாம் இருக்கும் அம்மா சொல்லாமலே வேலைஎல்லாம் செய்து கொடுப்பான். மாடுகளுக்கு வேளாவேளைக்கு வைக்கோல் இழுத்துப் போடுவான். தண்ணீர் கொண்டுபோய் வைப்பான். கோழிகளைக் கவனித்துக் கூடுகளில் அடைப்பான்.

சமயத்துக்கு தேய்காய் கூட அம்மாவுக்கு துருவிக் கொடுப்பான்.

எவ்வளவு அருமையான மகன்!
அவன் ஏன் அப்படிப் போனான்?

ஊரை நீங்கித் தூரே வயல்வெளிகள் பரந்திருக்கின்றன. இடையிடையே பனங்கூடல்களும் திடல்களும் தனித்துக் கிடக்கின்றன. மாலை நேரங்களில் அம்மா அவ்விடங்களில் புல் செதுக்கிக் கொண்டுவரப் போவாள். சைக்கிள் ஓட்ட முடியாது அவ்விடங்களில். சீலன் சைக்கிளில் சாய்ந்தபடியே ரோட்டில் காத்து நிற்பான். அம்மா புல்லுக் கட்டுடன் திரும்பி வரும் நேரங்களை அவன் நன்கு அறிவான். அம்மாவின் உருவம் மிகத்தூரே மங்கலாகத் தெரியும் போதே ரோட்டை விட்டிறங்கி அம்மாவை நோக்கி விரைந்து போவான். பாரத்தை மாற்றிக்கொண்டு அம்மாவுக்கு முன்னே வீட்டுக்கு சைக்கிளில் பறப்பான்.

அம்மா வழியிலேயே தூரவில் உடம்பைக் கழுவிக்கொள்ள முருகன் கோயில் மணி சிணுங்கி அழைக்கும். அம்மா உருகியவாறு கோயிலுக்குப் போவாள். பூசை முடிய நன்றாக இருள் சூழ்ந்து விடும். உள்ளங்கையில் பொத்தியபடிவிபூதியும், சந்தனமுமாக திரும்பி வரும்போது, சீலன் வீட்டில் 'பளிச்'சென விளக்கேற்றியிருப்பான்.

மேசைக்கு முன்னால் விளக்கொளியில் முகம் விகசித்துத் தெரியும்படிக்கு அவன் உட்கார்ந்திருப்பான். ஏதாவது படித்துக் கொண்டோ, எழுதிக் கொண்டோ இருப்பான். முன்னால் மென்குரலில் இசைத்தபடி ரேடியோ அவனை ரசிக்கும். பக்கத்திலே சைக்கிள் முன்சில்லை ஒயிலாக ஒடித்துச் சாய்த்தபடி அவனைப் பார்த்து பளீரென ஒளிவீசிச் சிரிக்கும்.

மகள் அழகிய மொட்டு. மிகவும் சின்னவள் தான். ஆயினும் குசினியில் தேநீர் தயாரிக்க ஆயத்தமாகிக் கொண்டிருப்பாள். குலத்தை மட்டும் காணக் கிடைக்காது. அவன் வீட்டில் இருக்கும் நேரங்களை அம்மாவுக்கு அறுதியிட்டுக் கூறமுடியாது. அவன் தொழில் அப்படி!

மாடுகள் கழுத்துமணிகள் கிணுகிணுக்க புல்லை அரைக்கின்ற சத்தம் கேட்கும். கூடவே மாடுகள் பலத்து மூசிமூச்சுவிடுவதும் வாலைத் தூக்கி ஈக்களை விவாசி விரட்டுவதும்கேட்கும். சாணியின்மணத்துடன் பசும்புல்லின் வாசனை நாசியில் உறைக்கும். கோழிகள் எல்லாம் ஏற்கனவே கூடுகளில் அடைக்கப்பட்டிருக்கும். குறு குறு வெனக் கொக்கரிக்கும், 'படபட' வெனச் சிறகுகளை உல்லாசமாக அடிப்பது கேட்கும்.

சுடச்சுட ஒரு கோப்பை தேநீர்...... கடுமையான உழைப்புக்குப் பின், தொழுகையின் பின் மோகனமான இரவின் பிறப்பு நேரத்தில்...... அருமையான தனது பிள்ளைகளுடன் அம்மா அருந்துவாள். அதுவல்லவோ வாழ்க்கை!

எல்லாமே சீலனுடன் கூடவே சேர்ந்து அம்மாவிடம் பிரிவு சொல்லாமலே போயினவோ?

அம்மா அலுத்தபடியே வைக்கோல் போரை நோக்கிப் போனாள்.

ஒரே வயிற்றில் உதித்த பிள்ளைகள் ஏனோ இவ்வாறு வேறு வேறு குணம் கொண்டவர்களாய் ஆகிப் போனார்கள்? இரண்டு பேரையும் அம்மா ஒரே மாதிரிதான் சீராட்டினாள். ஒரே மாதிரித்தான் உணவூட்டினாள். ஒரே பள்ளிக்கூடத்திலேதான் கொண்டுபோய்ச் சேர்த்து விட்டாள். புத்தகங்களைத் தூக்கிக்கொண்டு, எண்ணெய் பூசி படியச் சீவிய தலைகளுடன் அவர்கள் பள்ளிக்கூடம் போவதை வாசலில் நின்று பார்த்து ரசித்தாள்.

குலம் மட்டும் படிப்பை ஒரேயடியாகக் குழப்பினான். அண்ணனுடன் நெடுகலும் சண்டை போட்டான். அம்மாவுடன் கோபித்துக் கொண்டு சிலவேளை சாப்பிடாமலே போனான். ஆறாம்வகுப்பிற்கு மேல் அவனால் ஏறவே, முடியவில்லை. அம்மா அறிவாள், அவனது இளையமகன் மிகவும் புத்திசாலி ஆனாலும் ஏன் அவனால் படிக்கமுடியவில்லை என அம்மாவுக்குப் புரியவில்லை.

சீலன் அமைதியாகப் படித்தான். அவன் மிகவும் அமைதியான மகன். இரைந்து

கதைக்கத் தெரியாதவனாக இருந்தான். நடப்பது கூட மிகவும் மென்மை. ஒரு கம்பீரம் இருக்கத்தான் செய்தது. ஆயினும் புல்லுக்குக் கூட நோகாத நடை. கண்கள் பெரிதாக இருந்தன. உள்ளங்கைகள் மென்மையாகவும் குளிர்ச்சியாகவும் இருந்தன. நகங்கள் ரோஸ் நிறமாகவும், நீளமாகவும்........ விரல்கள் கூட மெலிந்து நீளமாக நளினமாக இருந்தன, பெண்களைப் போல.

சீலன் ஒரு மோகனமான மாலை நேரம் பிறந்தான். பறவைகளின் கீச்சொலிகள் அடங்கிய பிறகு, மாடுகள் எல்லாம் மேய்ச்சல் நிலங்களிலிருந்து திரும்பி வந்து விட்ட பிறகு, மென்மஞ்சட் கதிர்களை மண்ணெண்ணெய் விளக்குகள் உமிழ்ந்து கொண்டிருக்கும் நேரத்தில் அம்மாவின் இடது தொடையை சற்றே உரசியபடி ஒரு வளர்பிறை நாளில் சீலன் பிறந்தான். புனர்பூச நட்சத்திரம், 'இவன் பெரிய காரியங்களைச் சாதிக்கப் பிறந்தவன்' என அவனது சாதகம் சொல் லிற்று.

குலம் அத்த நட்சத்திரம். அதுதான் அவனிடம் முரட்டுச் சுபாவங்கள் சேர்ந்து விட்டனவோ? அத்தம், அதமம் என்றார்கள் சாத்திரிமார்.

மத்தியான நேரம் கொடுமையானது. மௌன மானது. காற்றை வெயில் விரட்டிவிடும். ஒழுங்கைகளில் படிந்திருக்கிற புழுதியில் கச்சான் வறுக்கலாம் எனத் தோன்றும். பூவரச மரங்கள் கொடு வெயிலில் வாடித் துவளும். சனங்கள் வெளியில் தலை காட்டவே மாட்டார்கள். சொறி பிடித்த நாய்கள் மட்டும் நாவைத் தொங்கப் போட்ட படி இளைத்தவாறு நிழல் தேடி ஓடித்திரியும். 'கர்ர்ர்' எனக் கடூரமாகக் கத்துகின்ற காக்கைகள் நீர்தேடிப் பறக்கும்.

குலம் ஒரு மத்தியான நேரம் பிறந்தான். பிறந்தவுடன் எட்டு இறாத்தல் நிறை காட்டி னான். அம்மா இராஜவலியில் துவண்டாள். மயக்கம் தீர நெடு நேரமாயிற்று. காய்ச்சல் ஓய சில நாளாயிற்று.

என்னவோ அம்மாவுக்கு குலத்தைவிட சீலனை மிகவும் பிடித்தது. அவன் அவளை விட வளர்ந்து விட்ட பிறகும், மேலுதடு அரும்பிய பிறகும்... அவனது கேசங்களை வருடுவதில் அம்மா இன்புற்றாள். ஒரு குழந்தையினது போல மிகவும் மிருதுவான தலைமயிர்.

குலத்துக்கு, மிகவும் முரட்டுத் தலைமயிர். சுருண்டு சுருண்டு இருக்கும். கண்கள் சிறுத்து உள்வாங்கி இடுங்கி இருந்தன. மேனியில் மண் ணெண்ணெய் நாற்றமும் ஒயில் நாற்றமும், வியர்வை வாடையும் சதாகாலமும் வீசிற்று. அவன் தொழில் அப்படி! குலம் ஒரு மெக் கானிக் ஆகவேண்டி ஆயிற்று, அவனது மாமனைப் போல நேரங்காலமற்ற வேலை. சில நாட்கள் சேர்ந்தாற்போல் வராமல் இருக்க நேர்ந்தது. நேரத்துக்கு உண்ண முடியாமல் போயிற்று. அண்ணன் நிறையப்

''நாயின் கண்களில் நன்றி வழிந்தது. அது சீலன் கொண்டு வந்த நாய். அம்மா அதை உதைப்பாளா? கால் களை மடக்கிக் கொண்டாள்.''

படிக்கவேண்டுமென நினைத்தானோ, என் னவோ? ஒய்வொழிச்சல் இல்லாமல் வேலை வேலை எனப் பறந்தான்.

நினைக்க நினைக்க அம்மாவுக்கு நெஞ்சைப் பிழக்கும்படி நெடு மூச்சு எறிந்தது.

சீலன் ஏன் அப்படிப் போனான்?

அம்மா மெல்ல மெல்ல போரிலிருந்து வைக்கோலைப் பிடுங்கி இழுத்தாள். நாய் அம்மாவிடம் ஓடி வந்தது. கால்களில், 'சில் லென' இருந்த ஈரமூக்கைத் தேய்த்தது. வாலைத் தூக்கி சுழற்றிச் சுழற்றி ஆட்டியது. அம்மா காலால் எட்டி உதைக்க நினைத்தாள்.

நாயின் கண்களில் நன்றி வழிந்தது. அது சீலன் கொண்டு வந்த நாய். அம்மா அதை உதைப் பாளா? கால்களை மடக்கிக் கொண்டாள்.

'சொதசொத'வென்ற மாரி காலத்தின் சோம் பலான ஒருநாளில் சீலன் அதைத் தூக்கிக் கொண்டு வந்தான். வந்தபோது வெள்ளை

நிறமாக இருந்தது. இப்போ பழுப்பு நிறமாக வளர்ந்து விட்டது.

மழைநீர் ஓடிக்கொண்டிருந்த தெருக்களில் மிகவும் நனைந்து போய் அனுங்கிய குரலில் கத்தியபடி நடுங்கிக் கொண்டிருந்தது. யாருக்கும் தோன்றாத இரக்கம் அவனுக்குள் சுரந்தது. தூக்கிக் கொண்டு வந்தான். ஓலைப் பெட்டியால் கவிழ்த்து மூடினான் பெரிய காரியவாதி போன்ற பாவனையுடன் அம்மாவுக்குச் சொன்னான்.

"வளர்ந்தப் பிறகு நல்லது... மரநாய் வராதம்மா....... கோழிகளுக்குக் காவலாயிருக்கும்."

தினமும் செங்காரிப் பசுவில் பால்கறந்து ஊட்டினான். அவனுக்குத் தெரியும், எந்தப் பசுவின் பால் ருசியும், கொழுப்பும் மிக்கதென்று.

அம்மா மாடுகளை நோக்கிப் போனாள். நாய் அம்மாவின் கால்களைத் தடுக்கப் பண்ணி விளையாடியபடி பின்னே ஓடியது.

வாலிபத்தில் துள்ளுகிறது நாய். கொழுப்பேறி உடல் பளபளக்கிறது. நன்றாகத் தான் கொழுத்து விட்டது. சீலன் கூட கொழுகொழு என்றுதான் இருந்தான். திரட்சியான கன்னங்களும், காந்தக் கண்களுமாக...... எவ்வளவு அழகனாக இருந்தான் இந்த அம்மாவின் மகன்!

அமைதியாக இருந்தான். ரேடியோவைக் கூட சத்தமாக முடுக்கி விடமாட்டான். அவனைச் சுற்றி மட்டுமே இசை இருக்கும். இரண்டாம் பேரைத் தொந்தரவு செய்ய அவன் விரும்புவதில்லை. அவன் படிக்கும்போது கூட ரேடியோ முன்னாலிருந்து ஏதாவது முணுமுணுத்துக் கொண்டிருக்கும். சைக்கிளைத் துடைக்கும் போதும் பாடியவாறு பார்த்துக் கொண்டிருக்கும். ஒவ்வொரு நாளும் உதய காலத்தில் 'பளபள' வென மின்னுமாறு சைக்கிளைத் துடைப்பான். காற்று இருக்கிறதா எனக் கவனித்து திருப்தியுடன் தலையைக் குலுக்குவான். எதிலும் ஒரு ஒழுங்கு அவனிடம் இருந்தது.

அவன் போன பிறகு எல்லாமே ஒழுங்கற்றுப் போயிற்று. ரேடியோ அநேகமாக மௌனித்து விட்டது. அந்த வீடே ஜீவனற்றுப் போயிற்று. சைக்கிள் சீந்துவாரற்று தூசி படிந்து போய், டயர்கள் காற்று இறங்கி மெலிந்துவிட, சுவரோடு சாய்த்து வைக்கப்பட்டு விட்டது.

குலத்துக்கு சைக்கிள் அவசியமென்றில்லை. அவனுக்கு நேரத்துக்கு ஒரு வாகனம். காரோ, வானோ, மோட்டார் பைக்கோ... காற்றைக் கிழித்துக்கொண்டு வருபவனென வந்து நிற்பான்.

சீலன் போன பிறகு இந்த வீட்டில் முரட்டுத்தனமும், மௌனமும், அம்மாவின் ஏக்கப் பெருமூச்சுகளும் மட்டுமே மிஞ்சி நிற்கின்றன மகளோவெனில் மிகவும் சின்னவள். புரியாத பேதை. அழகிய சிறு மொட்டு.

★

சீலன் ஏன் வீட்டை விட்டுப் போனான்?

அம்மா நன்றாகவே கவனித்தாள். சில நாட்களாக சீலன் சரியாகவே இல்லை. பரீட்சை வேறு நெருங்கிக் கொண்டிருந்தது.

எதையோ குறித்து தீவிரமாகச் சிந்தித்துக் கொண்டிருப்பதாகத் தோன்றியது; எதையோ குறித்து மிகவும் கவலை கொள்பவனாகவும் தெரிந்தது.

பரீட்சையை நினைத்துக் கலவரப் படுகிறானோ? ஏன், நன்றாகத்தானே படித்தான்!

பிடிப்பில்லாதவன் போலக் காணப்பட்டான். அம்மாவை நிமிர்ந்து பார்ப்பதைத் தவிர்த்தான். வாய்க்குள் ஏதோ முனகிக் கொள்பவனாய் தலையை அடிக்கடி குலுக்கினான். இரவு நேரங்களில் நித்திரையைத் தொலைத்து விட்டான். புரண்டு புரண்டு படுக்கின்ற அரவங்கள் கேட்டன. காலை நேரங்களில் அவன் சைக்கிளைத் துடைப்பதில்லை. ரேடியோவை

மீட்டுவதில்லை. ஆம்! ரேடியோவை அவன் மீட்டுவதாகத் தான் அம்மா இவ்வளவு காலமும் எண்ணினாள், ரேடியோவில் இருந்து அவனது இனிய சாரீரமே மிதந்து வருகிறது போல.... உலகின் இனிய வஸ்துகள் யாவும் அவனுக்காகவே படைக்கப்பட்டிருப்பதென அவன் தொட்டதெல்லாம் துலங்கும் என.... அவனுக்காக எங்கோ ஒரு அரிய நங்கை வளர்ந்து வருகிறாள் என....... அவர்கள் அம்மாவுக்கு அழகிய, மதலை குதம்பும் பேரக் குழந்தைகளைப் பெற்றுத் தருவார்கள் என....

சீலனோ எனில், சில நாட்களாக ஏனோ தானோ என மாறி விட்டான். பரீட்சை எழுதப் போனான். மற்றப் பையன்களிடம் காணப்பட்ட ஆர்வமோ பரபரப்போ அவனிடம் காணப்படவில்லை. அம்மா அவனை ஏதும் கேட்கவில்லை. அவனது இனிய குழந்தையைத் தொந்தரவு செய்ய அவள் விரும்பவில்லை. எங்காவது காதல், கீதல்...... என்று ஏதாவது?... அவனாகவே சொல்லட்டும் என விட்டுவிட்டாள்.

பரீட்சை நடந்து கொண்டிருந்தது. சீலன் வர வர மிக வெளிறினான். முகத்தில் ததும்புகிற ஜீவகளை எங்கே போயிற்று? அம்மாவுக்கு ஒன்றுமே புரியவில்லை.

சீலன் அன்று வெகு சீக்கிரமே எழுந்தான். மிக நீண்ட நேரம் எங்கோ கவனமாக பல் துலக்கினான். தன்னுணர்வற்றவன் போல உலவினான் பளிச்சென அம்மா பெருக்கி விட்டிருந்த முற்றத்தில் அவனது சீரான காலடிகள் படிந்தன. அம்மா மிகவும் அதிசயப்பட்டாள்.

''நேரமாகுதெல்லே மேனே...''

சரியாகச் சாப்பிடத்தானும் இல்லை. சைக்கிளில் ஏறி உட்கார்ந்தான். வழமை போல் ஓரே தாவலில் ஏறிப் பறந்து விடவில்லை. மிக நிதானமாக ஏறி உட்கார்ந்தான். காற்றை அளப்பவனைப் போல சுற்றிலும் சைக்கிளை ஓட்டினான்.

''போயிட்டு வாறன் அம்மா....''

''வடிவாக் கடவுளை நேர்ந்து கொண்டு போ...''

பிறகும் ஏன் நிற்கிறான்?

''நேரமாகுதெல்லே...''

''நான் போறன்...'' மொட்டையாக முணுமுணுத்தான்.

மெல்ல மெல்ல ஒரு கிழவனைப் போல உழக்கிக்கொண்டு போனான். அம்மா அவன் பின்னாலேயே போனாள். தெருவில் இறங்கி நின்றுகொண்டு அவன் போவதைப் பார்த்தாள். முடுக்கால் திரும்பி மறையுமுன் 'சட்' என ஒருதரம் திரும்பிப் பார்த்தான்.

அம்மா உள்ளே வந்தாள். சற்று நேரம் திண்ணையில் உட்கார்ந்தாள். பிறகு தலைக்கு எண்ணெய் பூசி சீவி முடிந்து கொள்ள நினைத்து எண்ணெய்ப் போத்தலைத் தேடினாள்.

வாசலில் யாரோ சைக்கிளில் வந்து நிற்பதைப் போல உணர்ந்தாள். எட்டிப் பார்த்தாள்.

சீலன்!

என்னவாயிற்று இன்று இவனுக்கு?

மீண்டும் சீலன்உள்ளே வந்தான். எதையாவது மறந்துபோய் விட்டுவிட்டுப் போனானோ?

திண்ணையில் ஏறி அமர்ந்தான். முகம் செத்துப்போய் இருந்தது.

''ஏன் மேனே தலையிடிக்குதோ.......''

''சாச் சாய்...''

குனிந்து நிலத்தைக் கிறவாரம்பித்தான்.

''இரு கோப்பி போட்டுத் தாறன்...''

''.... .... ....?''

''இண்டைக்குப் பாடம் உனக்கு ஓடாதோ?'' அசிரத்தையாகத் தலையைக் குலுக்கினான்.

''அப்ப ஏன் ஒரு மாதிரியாய் இருக்கிறாய்?''

''.... ......''

''காசு.... கீசு...... ஏதாவது வேணுமோ?''

சிரித்தான். இந்த அம்மா எவ்வளவு அப்பாவி!

அம்மா அவசரமாகக் கோப்பி கொண்டு வந்து கொடுத்தாள். வாங்கினான். இல்லை, பறித்தான்! அவனது ஆவலும் பரபரப்பும் அம்மாவை வியப்பிலாழ்த்தின. வாங்கும் போது அம்மாவின் கைகளை அவன் விரல்கள் தீண்டின. என்றுமில்லாத அழுத்தம் அவ்விரல்களில் இருந்தது. உள்ளங்கைகள் பிசுபிசுத்து வியர்த்திருந்தன.

''தங்கச்சி எங்கை அம்மா......?''

''ப்ச்...உங்கை தான் எங்கையாவது போயிருப்பள்.''

''............''

''ஏன்?''

'சும்மா தான்''


''அவளைப் பார்த்துக் கொண்டு நில்லாமல் வெளிக்கிடு... நேரம் போகுது....''.

ஏதோ ஒரு உறுதியுடன் விருட்டென எழுந்தான். விறைத்து நின்று கொண்டான் சிறு நேரம். ஒரு நொடி அம்மாவின் கண்களைக் கூர்ந்து பார்த்தான். அவளது கண்களுக்குள் எதையோ தேடினான் போலும்!

''நான்.... போ—ற—ன்.... அம்மா!''

வெடுக்கெனத் திரும்பிச் சைக்கிளில் பாய்ந்து ஏறினான். வெகு வேகமாகப் போனான். ஏதோ ஒரு இனம் புரியாத சக்தி அவனை அம்மாவிடமிருந்து பிரித்து இழுத்துச் செல்கிறதென....

அம்மா கலவரத்துடன் தெருவுக்கு விரைந்தாள். சீலன் முடுக்கால் திரும்பி மறைந்து கொண்டிருந்தான். ஒரு தரம் திரும்பிப் பார்ப்பான் என எதிர்பார்த்தாள். அவன் பார்க்கவில்லை. ஆனால் ஹாண்டிலில் ஒரு சிறு பொலித்தீன் பாய்க் தொங்கிக் கொண்டிருப்பதை அம்மா அப்போதுதான் கவனித்தாள். சைக்கிள் சில்லு தெருநீளத்துக்கு பாம்பு ஊர்ந்து போன சுவடாகத் தடம் பதித்துத் தெரிந்தது.



(படம் : ரஞ்சகுமார் சிறுகதைத் தொகுப்பிலிருந்து )

அம்மாவுக்கு ஒன்றுமே புரியவில்லை, புருவங்களைச் சுருக்கினாள்.

மாலையில் யாவும் புரிந்தன. தயங்கித் தயங்கி ஒரு பையன் சிலனின் சைக்கிளைத் தள்ளிக் கொண்டு வந்தான். தலையைக் குனிந்து கொண்டே போய்ச் சுவருடன் சைக்கிளைச் சாத்தினான். அவனை எங்கோ பார்த்த ஞாபகம் காட்டிற்று அம்மாவுக்கு. அம்மாவின் முகத்தைப் பாராமல் எங்கோ வேண்டுமென்றே பார்வையைத் திருப்பினான்.

வெகு ஆயத்தமாக தொண்டையைச் செருமிச் சரி பண்ணிக் கொண்டான்.

''சீலன்.... இதை.... இஞ்சை கொண்டு வந்து விடச் சொன்னவர்....''

''ஆங்!.... சீலன் எங்கையப்பு...''

''......''

''ஐயோ! என்ரை பிள்ளை...''

அந்தக் குரலின் அவலம் பையனைத் துரத்தியது. தலையைக் குனிந்தவனாய் விடுவிடென விரைந்து போனான்.

அம்மா பதைத்தாள் கிரீச்சிட்டாள்.

''சீலன் எங்கையப்பு...''

பையன் பின்னே தட்டுத்தடுமாறி ஓடியபடி அம்மா கேட்டாள். அவன் பதில் சொல்ல முடியாமல் ஓடத் தொடங்கினான்.

''சீலன் எங்கையப்பு...''

இலேசாக குளிர்ந்துபோய் தன்னைக் கடந்து போன காற்றை, அம்மா கேட்டாள், அது மௌனமாகப் போனது.

இவ்வாறான எத்தனை அன்னைகளின் சோகங்களை அது பார்த்திருக்கிறது. அது பேசாமல் போனது.

''ஐயோ, என்ரை சீலன் எங்கை...''

சிவந்து மின்னிக் கொண்டிருந்த அந்திவானை அம்மா கேட்டாள்.

இவ்வாறான எத்தனை சீலன்கள் அதன் கீழ் உள்ளனர். அது பேசாமல் கண்ணை மூடிற்று.

''சீலன் எங்கை?''

அவளுக்கு திருப்தியான பதிலைத்தர ஒருவரும் இல்லை.

''சீலன் எங்கை?''

அம்மாவின் பரிதாபமான அக்கேள்வி ஊர் மேல் ஓங்கி அடித்தது. அம்மாவைச் சுற்றி ஊர்ப் பெண்கள் ஒவ்வொருவராகக் கூடத் தொடங்கினார்கள்.

அவர்களுக்குப் புரிந்தது சீலன் எங்கே போனான் என்று! இவ்வாறான எத்தனை கதைகளை அவர்கள் அறிந்திருக்கின்றனர். அம்மாவை ஆதரவாக உள்ளே கூட்டிப் போயினர்.

பிறகு,

அந்த எளிமையான சிறிய வீட்டின் ஆனந்த வாழ்வும் அவனுடன் கூடப் போய்விட்ட தாய்....

வெறுமை.

★

மாலை நேரங்களில் அம்மா ஊரை நீங்கித் தூரே இருக்கின்ற வயல்வெளிகளிலும், பனங் கூடல்களுக்குள் தனித்துக் கிடக்கின்ற திடல் களிலும் புல் செதுக்கிக் கொண்டு வரப் போவாள். முழுத் தூரமும் இளைத்து, இளைத்து முதுகொடியச் சுமந்து வந்தாள்.

அவள் பாரத்தை மாற்றிக் கொள்ள யாரும் இல்லை,

அவள் பாதி வழியில் வரும்போதே முருகன் கோயில் மணி சிணுங்கிக் கேட்கும். அவளால் வேளா வேளைக்குப் பூசை காணப் போக முடியவில்லை. அவள் போகும்போது கோயில் நிசப்தமாக இருளில் மூழ்கி இருக்கும். பூசை முடிந்து போனதின் தடங்களாக, சிந்திக் கிடக்கின்ற சில மலர்களும்... மெல்ல மெல்லக் காற்றில் கரைந்து கொண்டிருக்கிற கற்பூர வாசனையும்... முணுக்கென எரிகின்ற ஒரு சிறு தூண்டாமணி விளக்கும்... இழுத்துப் பூட்டப்பட்டிருக்கிற சித்திர வேலைப்பாட்டுடன் கூடிய கனத்த கதவும்....

அம்மா வாசலில் நின்று தனியே தொழுதாள் தனது அருமையான புதல்வனின் நலத்துக்காக அம்மா தினமும் தனியே நின்று உருகினாள்.

வீட்டுக்குத் திரும்பிவரும் நேரங்களில் மாடுகள் பின்புறத்தில் ஒன்றையொன்று கொம்புகளால் குத்தி விரட்டியபடி துள்ளித் திரியும். கண்ட இடத்திலெல்லாம் குழம்புகளால் உழக்கிய அடையாளங்களும்... சாணியும்...

அம்மாவே ஒவ்வொன்றாக இழுத்து வந்து கட்டைகளில் கட்ட வேண்டியிருந்தது.

கோழிகள் பூவரச மரங்களில் குடி புகப் பழகின. அம்மா கற்களை எடுத்து வீசுவாள்.

''சூ'' என விரட்டுவாள். நிசப்தமான முன்னிரவு அவற்றின் கொக்கரிப்புக்களாலும், சிறகடிப்புக்களாலும் நிம்மதி இழந்து தவிக்கும்.

அம்மாவே தனியாக, அவற்றைக் கூடுகளில் அடைக்க வேண்டி இருந்தது.

புகை படிந்துபோய் மங்கிய ஒளி சிந்தும் ஒரு சிறு விளக்கு. மேசையின் மீது சீலனின் புத்தகங்கள். ஒரு சைக்கிள். மௌனமாகிவிட்ட ஒரு ரேடியோ. அருகிலே மகள் அமர்ந்திருப்பாள், அழகிய சிறு மொட்டு. வயதுக்கு மீறிய குருட்டு யோசனைகள், கொட்டக் கொட்ட விழித்தபடி தனிமையில் உட்கார்ந்திருப்பாள். பாவம்!

அந்த அருமையான மாலைநேரத் தேநீர் அம்மாவுக்குப் பிறகு கிடைக்கவேயில்லை.

அம்மா வரவர மெலிந்தாள். கண்களைச் சுற்றிக் கருவளையங்கள் தோன்றின. நடை வரவரத் தளர்ந்தாள். முன்புபோல உற்சாகமாக வேலை செய்ய முடியவில்லை. அம்மா வயோதிகத்தை நோக்கி மெல்ல மெல்ல போய்க் கொண்டிருந்தாள்!

இரவு நேரங்களில் நித்திரையின்றி வாடுவாள். புரண்டு புரண்டு படுப்பாள். அலுத்துப்போய் எழுந்து உட்கார்வாள். ஏதேதோ விபரீத உண்ணங்கள் தோன்ற பெருமூச்சுகள் விடுவாள்.

குலத்தைப் பற்றியும் அம்மாவுக்கு வரவர ஒன்றும் புரியவில்லை. எப்போதாவது மூன்று நான்கு நாட்களுக்கொரு முறை வருவான். அம்மா அரைத் தூக்கத்தில் அவஸ்தையுடன் புரளும்போது கனவேகத்தில் வந்த ஒரு வாகனம் நின்று ஒரு தரம் உறுமி ஓயும். குலம் 'திமுதிமு'வென உள்ளே வருவான். அம்மாவுடன் ஒரு வார்த்தை கூடப் பேசாமலே... அம்மா முகத்தைச் சரியாக ஏறிட்டுக் கூடப் பார்க்காமலே.... கைகளில் பணத்தைத் திணிப்பான். சேட்டைக் கழற்றிக் கண்ட இடத்தில் எறிவான். ஓலைப்பாயை விரித்து, தலையணைகூட இன்றிப் படுப்பான். வலிய கரங்களை நெற்றியின் மீது அழுத்தப் போட்டபடி.... கால்களை ஆட்டியபடி.... மயிரரும்பும் மார்புகள் விம்மித் தணிய ஒரு நொடியில் தூங்கிப் போவான்.

இப்போ தூங்கிக் கொண்டிருக்கிறானே, அது மாதிரி! ஒரு காட்டுப் பிறவி!

---

**"அந்த வயல்வெளிகளிலே, பனங் கூடல்களுக்குள், தனித்துக் கிடக்கும் திடல்களிலே 'பொடியன்கள்' குண்டு வெடிக்க வைத்துப் பழகுகின்றார்கள்"**

---

இப்போ,

குண்டுச் சத்தங்கள் அடிக்கடி கேட்கின்றன. குண்டுச் சத்தங்களைக் கேட்டவுடன் அம்மா நடுங்குவாள். கண்கள் பீதியால் விரியும். அடிவயிறு குலுங்கும்.

'அவர்கள்' அடிக்கடி ஊர்களைச் சுற்றி வளைத்தனர். கனரக வாகனங்களின் உறுமலைக் கேட்டவுடன் அம்மா பாதி உயிரற்றுப் போவாள். நீட்டிய துப்பாக்கிகளுடன் ''மகன் எங்கே?'' என உலுக்கியபடி அவர்கள் வரும் போது—துப்பாக்கிச் சனியன்களில் குத்திக் கொண்டு போகும் பாவனையில் பிள்ளைகளை அவர்கள் வளைத்துக் கூட்டிச் செல்லும் போது — அம்மா படும் சஞ்சலம் சொல்லி மாளாது.

''கடவுளே!... நான் சாக முதல் என்ரை பிள்ளையை ஒருக்கால் கண்ணிலை காட்டு....''

ஊரில் தினமும் இரவு நேரங்களில் குண்டுச் சத்தங்கள் கேட்கின்றன. அம்மாவின் காதுச் சவ்வுகள் கிழிந்து விடுமாற்போல் 'கிண்' என வலிக்கின்றன. நெஞ்சு நீரற்று வரண்டு போய் விடுகின்றது.

ஓ! இந்த இரவுகள் மிகவும் கொடியன.

அம்மாவுக்கு மிகவும் பரிச்சயமான அந்த வயல் வெளிகளிலே, பனங் கூடல்களுக்குள் தனித்துக் கிடக்கும் திடல்களிலே 'பொடியன்கள்'

குண்டு வெடிக்க வைத்துப் பழகுகின்றார்கள் என ஊர்ப் பெண்கள் அம்மாவிடம் சொல்லினர்.

சீலனும் அவர்களுள் ஒருவனாக இருக்கலாமோ? அம்மா பெரும் பீதியுடன் எண்ணினாள். ஆனால் சீலனைக் கண்டதாக ஒரு நாய்கூட அம்மாவிடம் சொல்லவில்லை.

அவன் எந்த ஊரில் குண்டு வெடிக்கவைத்துப் பழகுகிறானோ? அம்மா பிற ஊர்களை அதிகம் அறியாள். இந்தச் சிறு குடிசை வீடும்.... முருகன் கோயிலும்... புழுதி பறக்கின்ற ஒழுங்கைகளும்... பனங்கூடல்களும்.... திடல்களும்.... மாடுகளும்.... கோழிகளும் தான் அம்மாவின் உலகம். அவளது பிள்ளைகளே அவளீட்டிய ஈடற்ற செல்வம்.

## 2

இன்று அடிக்கடி குண்டு சத்தங்கள் கேட்கின்றன. ஒவ்வொரு சத்தத்திற்கும் சீலனின் நினைவு அம்மாவுக்குள் கனதியாக ஏறிற்று.

குலம் கூட நாலைந்து நாட்களாக வீட்டுக்கு வரவில்லை. இன்றாவது அவன் வருவான் என அம்மா மிகவும் ஆசைப்பட்டாள்.

இவன் என்ன பிள்ளை? வீட்டுக்கு வருவதே குறைவு. வந்தவுடன் விழுந்து படுக்கிறான்.

''அம்மா பசிக்கிது'' என ஒரு வார்த்தை! ம் ஹூம்.

பசி என ஒரு பிள்ளை கேட்டாலே தாயின் வயிறு நிறைந்து விடுமே. இதுகூடப் புரியாத ஒரு காட்டுப் பிறவி.

எங்கேதான் இவன் சாப்பிடுகிறானோ?

இன்று குலம் கட்டாயம் வருவான் என எண்ணினாள் அம்மா. தூங்காமல் விழித்திருந்தாள் திண்ணைக் குந்தில் கால் நீட்டி உட்கார்ந்தாள்

இன்று மங்கிய நிலவு வெளிச்சம் இருக்கிறது. சந்திரனின் முகம் ஒரு அழகிய பெண்ணின் நெற்றி போலத் தெரிகிறது. வெள்ளை மேகங்கள் வேகமாக வானில் திரிவதை அம்மா பார்த்துக்கொண்டிருந்தாள். பூவரசமிலைகள் மங்கிய நிலவொளியில் பளபளத்துத் தெரிகின்றன.

அம்மா மட்டும் தனித்திருந்தாள். விளக்கின் சிம்னி புகைபடிந்திருந்தது. மகள் அமைதியாக தூங்கிக் கொண்டிருந்தாள். மாடுகள் மூச்சு விடும் சத்தத்தை, கோழிகள் குறுகுறுப்பதை, நாய் மூச்சுவாங்க அங்கும் இங்கும் ஓடுவதை, நிலத்தைப் பிராண்டுவதை........ அம்மா பார்த்துக் கொண்டிருந்தாள்.

சிள்வண்டு ஒன்று கிரீச்சென‌குரலெடுத்து அலற ஆரம்பித்தது. நாய் காரணமற்றுப் பலமுறை குரைத்தது. நிலவைக் கண்டு அது குரைப்பதாக எண்ணினாள்.

செங்காரிப்பசு வேதனையான குரலில் கதறியது. எதுவோ அதைத் துன்புறுத்துவதாகத் தோன்றியது. அம்மாவால் எழுந்து பின்புறம் போக முடியவில்லை. ஆடாமல் அசையாமல் உட்கார்ந்திருந்தாள்.

நடுநிசியின் மணத்தையும், உருவத்தையும், சத்தத்தையும் அம்மா உன்னிப்பாகக்கவனித்தாள் எங்கோ புல்லாந்தி மலர்ந்திருக்க வேண்டும். குரக்கன் பிட்டு வாசனை மூக்கைக் கமறச் செய்கிறது. புடையன் பாம்பு இரையெடுக்கின்ற போதும் இதே வாசனை! வேலி சரசரத்தது. உடலெங்கும் கபடான அழகுமிக்க முத்திரைகளைப் போர்த்தியபடி கொடிய விஷமுடைய புடையன் பாம்பு, வழுவி வழுவி வேலிக்குள் ஊர்கிறதோ!... அம்மாவுக்கு ஒரே பயம்!

குலம் எப்போது வருவான்? அவன் கட்டாயம் வரவேண்டும் என அம்மா முருகனை அடிக்கடி வேண்டினாள்.

அடிக்கடி குண்டுச் சத்தங்கள் கேட்கின்றன. நிலமும், காற்றும் வானும் அதிர்கின்றன. அடி வயிறு குலுங்குகிறது.

சிறுவயதில், இருளைக் கண்டு பயந்து அம்மாக்கள் பக்கத்திலேயே ஒட்டியபடி படுத்திருந்த

புதல்வர்கள் யாருமற்ற வயல்வெளிகளிலே, பிசாசுகளும் உலவத் தயங்கும் நடுநிசி வேளை களிலே இவ்வாறு திரிய எப்படிப் பழகினர்? இந்தப் பயங்கர சத்தங்களை எவ்வாறு தாங் கிக் கொள்கின்றனர்? இந்த ஆபத்துக்களை எவ்வாறு சிரிப்புடன் ஏற்றுக் கொள்கின்றனர். இவ்வளவு வேகத்தையும் வெஞ்சினத்தையும் அவர்களின் மனங்களில் விதைத்தது யார்?

''கடவுளே!... எவளெவள் பெத்த பிள்ளை யளோ, இப்பிடி வாய்க்கு வயித்துக்கில் லாமல்....''

குண்டு ஒன்று பிசிறடித்த சத்தத்துடன் வெடிக் கின்றது. கேட்டுப் பழக்கமில்லாத வித்தியாச மான வெடிப்பு. மிகவும் வெறுக்கத்தக்க, அரு வருப்பான-சத்தம் அரைகுறையில் பிரசவமான ஒரு உயிரற்ற முண்டத்தைப் போல,

அம்மாவுக்கு உடல் 'பட்'டென வியர்த்தது. ஏதோ கெட்ட விஷயம் நடத்தேறியதாக உள் ளுணர்வு சொல்லிற்று.

எழுந்து மேசையை நோக்கிப் போனாள். நடுங்கும் கரங்களால் விளக்கைத்தூண்டினாள். இறங்கி முற்றத்துக்கு வந்தாள். சேலையை இழுத்துப் போர்த்திக்கொண்டு குண்டுச்சத்தம் வந்த திசையில் பார்த்தாள். நாய் அம்மாவின் காலடியில் நின்றது. வாலைக் கால்களுக் கிடையில் நேராகத் தொங்கப் போட்டபடி செவிகளை வானோக்கி உயர்த்தி எதையோ உற்றுக் கேட்டது. மெல்ல உறுமிற்று. பிறகு வேதனையான குரலில் ஊளையிட்டது. வீட்டைச் சுற்றிச்சுற்றி வேகமாக ஓடியது. அம்மாவின் காலடியில் நிற்பதும்........ பிறகு ஓடுவதும்...... கெட்ட சேதியொன்றை அம்மா வுக்கு உணர்த்த அது துடித்தது போலும்!

செங்காரிப் பசு மீண்டும் மீண்டும் கதறியது. சிள்வண்டின் பிலாக்கண ஓசை மிகைபடக் கேட்கலாயிற்று. குரக்கன் பிட்டு வாசனை எங்கும் நீக்கமற நிறைந்தது.

அம்மா சோர்ந்துபோய், துடிக்கும் நெஞ்சுடன் முற்றத்தில் உட்கார்ந்தாள். நெஞ்சு மிக வரண்டு விட்டது. தொண்டைக் குழிக்குள் கனமான வஸ்து ஒன்று அடைத்துவிட்டது போலத் திமிறித்திமிறி மூச்சுவிட்டாள்.

சீலனை நினைத்து நினைத்து ஏங்கினாள். குலம் இன்றாவது வருவான் என்ற நம்பிக்கை யும் பொய்த்தது. இரவு மிகவும் முற்றி அம்மாவைச் சுற்றிக் கனமாகப் படிந்தது. துன்பம் தரும் குரலில் ஏதோ சொல்லிற்று.

சற்றுத் தூரே போகும் ரோட்டில் ஒரு வாக னம் விரைந்து போகும் சத்தம். ஆபத்தான நோயாளியை யாரோ சிலர் அவசர அவசர மாகச் சுமந்து கொண்டு காப்பாற்ற ஓடிக் கொண்டிருப்பதாக......

எங்கோ ஏதோ பிசகு நடந்துவிட்டது.

---

''சீலன் தலையைக் கவிழ்ந்தபடி இருக் கிறான். கண்களிலிருந்து இரத்தம் தாரை தாரையாகக் கொட்டுகிறது; மழை நீரில் கலக்கிறது, வீடெங்கும் இரத்தம், நாய் இரத்தத்தை நக்கிக் குடிக் கிறது''

---

கோழி ஒன்று பரிதாபமாகக் குழறுகிறது, மரநாய் பிடித்திருக்க வேண்டும். தீனமான அந்தச் சத்தம் மெல்ல மெல்லத் தேய்ந்து தேய்ந்து தூரேப்போய் மறைகிறது. நாய் துரத்திக் கொண்டே ஓடிப்போய் இயலாமை யுடன் திரும்பி வருகிறது.

விழிகள் திறந்தபடியே இருக்க அம்மா கனவு கண்டாள்.

வயல் வெளியில் அம்மா நிற்கிறாள். சூரியன் பயங்கரமாகக் காய்ச்சுகிறான். மழையும் பெய்கிறது. வெம்மையாக அம்மா உடலைப் பொசுக்கிற்று மழைநீர். அம்மா ஓடுகிறாள், இழைத்து இழைத்து ஊருக்குள் நுழைகிறாள். ஒழுங்கைகளில் வெள்ளம் பாய்கிறது ஒரு சிவப்பு நூல் போல இரத்த ஓடை ஒன்று வெள்ளத்தில் கலக்கிறது. அம்மா அதன் வழி போனாள். வெகு தூரம்... வெ-கு-தூ-ர-ம்.... கடைசியில் வந்து சேர்ந்தாள். வீட்டு வாசலில் சீலன் தலையைக் கவிழ்ந்தபடி இருக்கிறான்.

கண்களிலிருந்து இரத்தம் தாரை தாரையாகக் கொட்டுகிறது; மழைநீரில் கலக்கிறது,வீடெங் கும் இரத்தம், நாய் இரத்தத்தை நக்கிக் குடிக் கிறது.

கனவில் இரத்தத்தைக் காண்பது கூடாது! அம்மா வீரிட நினைத்தாள். இயலாமல் போயிற்று.

குலம் அன்று வரவேயில்லை. அம்மா முழு இரவு தூங்காமல் விழித்திருந்தாள், அந்தக் கொடிய இரவின் ஒவ்வொரு வினாடியையும் வேதனையுடன் அனுபவித்தாள்.

கிழக்கு வானிலே விடிவெள்ளி காலித்தது. சந் திரனை அது மேற்கு நோக்கி விரட்டிற்று. காகங்கள் துன்பம் நிரம்பிய குரலில், விடிந்து கொண்டிருப்பதைப் பூமிக்குச் சொல்லின. கோழிகள் சிறகடித்துக் கொக்கரித்தன,கூவின. முதல் நாள் இரவில் பறிபோன தங்களது தோழனுக்காக அவை அஞ்சலி செலுத்தின. மாடுகள் மடிநிறையப் பால் சுரந்து கனக்கின்ற வேதனை தாளாமல் கன்றுகளை அழைத்தன. செத்த வீட்டிற்கு தலையைக் குனிந்து கொண்டு வரும் ஒருவனைப் போல, சூரியன் மெல்ல மெல்ல உதயமாகினான்.

புரியாத பேதையான மகள் சோம்பல் முறி யடித்தபடி எழுந்து வந்தாள். முற்றத்தில் நாடியில் கையூன்றி உறைந்து போய்விட்ட அம்மாவைப் புரியாத பார்வையால் அளந் தாள். அம்மாவின் ஜீவன் எங்கோ ஓடி ஒளிந்து விட்டது. சிறு காற்றுக்கூட அம்மாவின் பல கீனமான தேகத்தைப் பூமியில் புரட்டி விடும்.

மெல்ல எழுந்து திண்ணையில் கால் நீட்டி உட் கார்ந்தாள். யாராவது ஒரு வேலையற்ற பெண் அம்மாவைத் தேடி வரமாட்டாளா? கேவும் குரலில் அவளிடம் தன் துன்பங்களைக் கொட்டி அம்மா ஒரு பாட்டம் அழுது ஓயமாட் டாளா?

ஒருவரும் வரவில்லை. பதிலாக மகள் பள்ளிக் கூடம் போக வேண்டியிருந்தது. மாடுகளை அவிழ்த்து மேய்ச்சலுக்குத் துரத்த வேண்டி யிருந்தது. கோழிகளைக் கவனித்துக் கொள்ள வேண்டியிருந்தது.

அம்மா யந்திரகதியில் அவற்றைச் செய்தாள். மூளை வேலை செய்து மரத்துப் போயிற்று, கண்கள் காந்தின அம்மாவுக்கு உட்காய்ச்சல் கண்டுவிட்டது. டுநருப்புக் காற்றுப் போல உஷ்ணமான மூச்சுக்கள் உதடுகளைப் பொசுக் கின. காரணமற்று சில தப்படிகள் நடப்பதும் பிறகு நெடுநேரம் ஒரேயிடத்தில் உட்கார் வதும்... தூரே அர்த்தமற்றுப் பார்வை பதித்து பெருமூச்சுக்கள் எறிவதும்......

சூரியன் யாருக்கும் பிரிவு சொல்லாமல் மறைந்து போனது. இருளுடன் போரிட்டுத் தோற்றுப்போய் அழுது வடிகிறது நிலவு. காற்று சோர்வாக நடந்து போய்க் கொண்டி ருந்தது. அம்மாவால் இவற்றைக் கவனிக்க முடியவில்லை.

சீலன் என்ன ஆனான்?

குலம் ஏன் நாலைந்து நாட்களாக வரவில்லை?

அம்மா மனதில் கேள்விகள் மாறிமாறி எழுந் தன; ஒன்றை ஒன்று துரத்தின.

தொடர்ந்து மூன்று நாட்களாகக் குண்டு சத் தங்கள் கேட்கவில்லை. அச்சமூட்டும் பேர மைதி ஊர்மேல் கவிழ்ந்தது. மூன்று நாட்களும் அம்மாவால் ஒரு வாய்கூட உண்ணமுடிய வில்லை. ஒரே விக்கல்!

நாலாவது இரவு வேகமாக வந்தது.

ஓ! இந்த இரவுகள் மிகவும் கொடியன.

அம்மா திண்ணைக் குந்தியில் கால் நீட்டி உட் கார்ந்திருந்தாள். மர இலைகள் நடுநடுங்கிக் கொண்டிருக்க, காற்று அவற்றைச் சீண்டி விட்டுப் போய்க் கொண்டிருந்தது. நிலவு மேகங்களுக்குள் பயந்துபோய் ஒளித்துக் கொண்டு அடிக்கொருதரம் எட்டிப்பார்த்து 'சடக்' எனத் தலையை உள்ளிழுத்துக் கொண் டிருந்தது. ஒழுங்கையில் யாரோ சுருட்டுப் பிடித்துக்கொண்டு போனான் போலும். 'குப்'பென சுருட்டின் நாற்றம் வீசிற்று. நாய் சுருண்டுபோய் அம்மா பக்கத்தில் படுத்திருந் தது.

வாகனம் ஒன்று வருவதை அம்மா உணர்ந்

தாள். அளவான வேகம். கண்களைக் கூசச் செய்யும் ஒளி வெள்ளத்தை உமிழ்ந்தபடி வாசலில் நின்றது. 'ஹோர்ன்' ஐ ஒலித்தது, வந்து விட்டதாகச் சேதி சொல்லிற்று.

அம்மா ஆரவாரப் பெருமூச்சு விட்டாள்.

கடவுளுக்கு நன்றி! குலம் இன்று வீட்டுக்கு வந்திருக்கிறான்.

கதவுகளைத் திறந்து அறையுஞ் சத்தம். குலம் மட்டுமல்ல வேறும் சிலர் வந்திருக்கவேண்டும். குசுகுசுவென கதைக்கின்ற சத்தம். படலையை மெல்லத் தள்ளித் திறந்தனர். கூட்டமாக வந்தனர்.

யாரோ ஒருவனைக் கைத்தாங்கலில் கூட்டிக் கொண்டு வந்தனர். அம்மா பயந்தவளாய் விருட்டென எழுந்தாள். விளக்கைத் தூக்கி உயரப்பிடித்தாள்.

''கையிலே வெடிச்சிடுத்தாம்....' ஒருத்தி பீதி கவ்விய குரலில் மற்றவளிடம் குசுகுசுத்ததை அம்மா கனவில் கேட்பதைப் போலக் கேட்டாள்''.

குலம் சோர்ந்துபோய் வந்துகொண்டிருந்தான். அவனைத் தாங்கி அழைத்து வருகின்றனர். வலது கையை ஒருவன் மென்மையாகப் பற்றியபடி வந்தான். மணிக்கட்டுக்குக் கீழே இரத்தம் ஊறிப்போன ஒரு துணிப் பந்து!

ஐயோ! இந்த அம்மாவின் முரட்டுக் குழந்தைக்கு என்னவாயிற்று?

அம்மா அலற நினைத்தாள், முடியவில்லை. நாக்கு மேலண்ணத்தில் ஒட்டிக்கொண்டது.

அம்மா அசைய நினைத்தாள், முடியவில்லை. பாதங்களை யாரோ ஆணியால் தரையுடன் சேர்த்து அறைந்தது மாதிரி.

அவர்கள் ஓலைப்பாயை விரித்தனர். தலையணைகளைப் போட்டனர். குலம் பொறுக்க முடியாமல் முனகியபடி சரிந்தான். முகம் மிக வெளிறியிருந்தது. உதடுகள் காய்ந்து தோலுரிந்திருந்தன மிகவும் தாகமாக இருந்தான். நாவால் உதடுகளை நீவினான்.

''அம்மா....''

தீனக்குரல் அம்மாவை அழைக்கிறது, அம்மாவால் பதில் சொல்ல முடியவில்லை.

மகன் தாகத்தால் தவிக்கிறான், அம்மாவால் அசைய முடியவில்லை.

அவர்கள் கிட்ட வந்தனர். தலையைக் குனிந்தபடி அம்மாவைச் சூழ நின்றனர். ஒருவன் அம்மாவைத் தொட்டசைத்தான். அம்மா இமைக்க மறுக்கும் விழிகளால் அவர்களைப் பார்த்தாள்.

அவர்களை அம்மா அடையாளங் கண்டாள்! நடு நிசிகளில்— யாருமற்ற வெளிகளில்....... திரிகின்ற புதல்வர்கள்!

ஓ! குலமுமா இந்த அப்பாவி அம்மாவை இவ்வளவு காலமும் ஏமாற்றித் திரிந்தான்?

''கோப்பி வச்சுச் குடுங்கோ....''

அம்மாவின் தோள்களைக் குலுக்கியபடி ஒருவன் சொன்னான்.

அவளுடைய முரட்டு மகன், புரியமுடியாத புதல்வன் கையைக் காவு கொடுத்து வந்திருக்கிறான்! தாகத்தால் தவிக்கிறான்!!

கடவுளே! அம்மாவுக்கு கொஞ்சம் பலமளிக்க மாட்டாயோ?

அம்மா எதுவோகேட்க உன்னினாள். அர்த்தம் கலைந்த பலகீனமான ஒரு முனகல் மட்டுமே வந்தது.

அம்மா அசைய முயற்சித்தாள். பெரும் பிரயாசையுடன் கால்களைப் பெயர்த்தாள். உடல் முழுவதும் மரண வேதனை போலும் நோவெடுத்தது. ஓரடி எடுத்து வைத்தாள். 'மொளக்' கென ஏதோ சுளுக்கிக் கொண்டது. அம்மா பிருஷ்டம் அடிபட மல்லாந்து விழுந்தாள்.

அவர்கள் அம்மாவைத் தூக்கினர். ஓலைப் பாயை விரித்தனர். தலையணைகளைப் போட்டனர். பாயில் அம்மாவை மெல்லச் சரித்தனர்.

ஊருக்குள் எப்படித்தான் விஷயம் பரவிற்றோ?

அவசர அவசரமாக மண்ணெண்ணெய் விளக்குகள் மீண்டும் ஏற்றப்பட்டன. ஒவ்வொருவராக ஊர்ப் பெண்கள் அம்மாவின் வீட்டு முற்றத்தில் கூடத் தொடங்கினர்.

''கையிலையே வெடிச்சிடுத்தாம்....'' ஒருத்தி பீதி கவ்விய. குரலில் மற்றவளிடம் குசுகுசுத்ததை, அம்மா கனவிற் கேட்பதைப் போலக் கேட்டாள்.

குலத்தைத் திரும்பிப் பார்த்தாள். அரை மயக்கத்தில் கிடந்தான். சொட்டுச் சொட்டாகக் கருஞ்சிவப்பு இரத்தம் தலையணையில் சிந்திக் கொண்டிருந்தது.

முத்து முத்தாக சூடான கண்ணீர் அம்மாவின் கன்னங்களை நனைத்தபடி சிந்தத் தொடங்கிற்று.

## 3

மூதுகுப் பிடிப்புடன் ஒரு முதியபெண். அவள் வெகு வேகமாகக் கிழவியாகிக் கொண்டிருந்தாள். ஊரில் ஒருவருடனும் அவள் இப்போ பேசிச் சிரிப்பதில்லை.

ஒரு அழகிய சிறு மொட்டு. புரியாத பேதை. வாடிக்கொண்டிருக்கும் பூமரம். அவளது வயதுக்கு மீறின குருட்டு யோசனைகள். கவலைகள் ஏக்கங்கள். தாயின் வேலையில் பாதிக்கு மேல் இதன் பிஞ்சுத் தோள்களில் பலவந்தமாக இறக்கி வைக்கப்பட்டது. பள்ளிக்கூடத்துக்கு ஒழுங்காகப் போவதில்லை. போகும் நாட்களிலும் பிந்தித்தான் போகும். ஒரு அழுக்கு யூனிபோமுடன், கலைந்த வேசத்துடன், வாடிய முகத்துடன், 'கண்களில் பிந்திவிட்டதின் கலவரமும் பயமும் தெறிக்க, மார்பில் புத்தகக் கட்டுகளை அணைத்தபடி, புழுதி பறக்கும் ஒழுங்கைகள் வழியே ஓட்டமும் நடையுமாக விரையும்.

ஒரு முரட்டு இளைஞன். மணிக்கட்டுக்குக் கீழே அவனது ஒரு கரத்தைத் துணித்து விட்டார்கள். அவனிடம் அடிக்கடி அவன் தோழர்கள் வருகின்றனர். அவன் ஒரு அருமையான மெக்கானிக். மிகவும் மூளைசாமி. அவசியமானவன், ஒற்றைக் கையால் கடுமையாக உழைக்கக்கூடிய அசகாய சூரன். நாலைந்து நாட்களுக்கொரு முறை நடுநிசி நேரம் வீட்டுக்கு வருவான். அவன் முகத்தில் காணப்படும் கடுமையும், ஏதோ ஒரு வெறியும் காண்போரைப் பிரமிக்கச் செய்யும். அவன் ஒரு முசுடு. அதிகம் பேசமாட்டான். வீட்டுக்கு வந்தவுடன் அம்மாவுக்குப் பணம் கொடுப்பான். உடனே ஓலைப் பாயை விரித்தபடி தலையணைகூட இன்றித் தூங்கிப்போவான்.

---

**''சீலன் புனர்பூச நட்சத்திரம்! ராமன் கூடப் புனர்பூச நட்சத்திரம்!! அவனும் காடுகளில் வசிக்க நேர்ந்தது! கடலைக் கடக்க நேர்ந்தது! அதர்மங்களுடன் நெடுகிலும் போரிட்டுக் கொள்ள நேர்ந்தது, வெல்ல முடியாது என்று இறுமாப்பில் தென்னிலங்கையில் மமதை கொண்டிருந்தவர்களை அவனும் வென்றான். சாபத்தால் பீடிக்கப்பட்டவர்களுக்கு அவனும் விமோசனமளித்தான்....ஓ! ஆயினும்....''**

---

வீடு மிகவும் பழையது. ஒரு சிறு குடிசை. கூரை மிகவும் உக்கிப் பொய்விட்டது. முற்றத்தில் எங்கணும் பூவரசமிலைகள் சருகாக குப்பையாகச் சேர்ந்திருக்கும்.

ஒரு நாய். அதைக் கவனிப்பாரில்லை, எலும்பெடுத்துத் தெரிய மெலிந்துவிட்டது. சொறி பிடித்துவிட்டது. காதுகளில் உண்ணிகள் படையாகப் பெருகிவிட்டன. காதுகள் கீழ் நோக்கி வளைந்து பாரத்தால் தொங்கி விட்டன. வளவின் ஒரு மூலையில் மண்ணைத் தோண்டிவிட்டுச் சோம்பிப் படுத்திருக்கும். அது குரைப்பதோ, ஓடுவதோ கிடையாது. விரைவில் இறந்துவிடும்.

அடிக்கடி இந்த வீட்டுக்கு மாட்டுத் தரகர்கள் வருகின்றனர். கதறக் கதற ஒரு பசுவையோ, கன்றையோ இழுத்துப் போகின்றனர். கால்களைப் பரப்பிக் கொண்டு போக மறுத்து அது கதறும். உதவிக்கு அம்மாவை அழைக்கும் தன் இனத்தை அழைக்கும். பரிதாபமான குரலில் மாடுகள் எல்லாம் சேர்ந்து அழும்.

இரவு நேரங்களில் அடிக்கடி குண்டுச் சத்தங்கள் கேட்கும். மரநாய்கள் கோழிகளைக் குழறக் குழற தொண்டையில் திருகியபடி இழுத்துப்போகும். உயிரை வாட்டும் அத்தீனமான ஓலம் மெல்ல மெல்லத் தேய்ந்து தூரே போய் மறையும்.

அம்மா இப்போ குண்டுச் சத்தங்களைச் சட்டை செய்வதில்லை. அவள் துன்பங்களுக்கும் இழப்புக்களுக்கும் பழக்கப்பட்டவள்.

குலத்தினதும் சீலனினதும் ஜாதகங்களைத் தூக்கிக்கொண்டு பெயர் பெற்ற சாத்திரிமார்களைத் தேடிப் போகிறாள்.

சீலன் புனர்பூச நட்சத்திரம்! ராமன் கூடப் புனர்பூச நட்சத்திரம்!!

அவனும் காடுகளில் வசிக்க நேர்ந்தது! கடலைக் கடக்க நேர்ந்தது! அதர்மங்களுடன் நெடுகலும் போரிட்டுக் கொள்ள நேர்ந்தது.

வெல்ல முடியாது என்ற இறுமாப்பில் தென்னிலங்கையில் மமதை கொண்டிருந்தவர்களை அவனும் வென்றான்!

சாபத்தால் பீடிக்கப்பட்டவர்களுக்கு அவனும் விமோசனம் அளித்தான்!

அவனும் பேதங்களைக் கடந்தவன், குரங்கும் வேடனும் அவனது தோழர்கள்.

ஓ! ஆயினும் ராமன் பேரில் அன்பு கொண்டவர்கள் அவன் பிரிவால் துன்புற நேர்ந்தது.

தசரதன்!....... கோசலை!.......சீதை!

குலம் அத்த நட்சத்திரம். அத்தம் அதமம் என்றார்கள் சாத்திரிமார்.

அவன் ராஜத்துரோகமான காரியங்களில் ஈடுபடுவான் என்றும் .

மிகப் பெரிய கண்டங்களில் மாட்டிக்கொள்ள நேரும் என்றும்....

மறியல் வீட்டுக்குப் போகின்ற பலன் கூட அவனுக்கு உண்டென்றும்...

கிரகங்கள் யாவும் நீசதிசை அடைந்திருக்கின்றனவென்றும்.... ●

('தேசிய கலை இலக்கியப் பேரவை'—'சவுத் ஏசியன் புக்ஸ்' இணைந்து வெளியிட இருக்கும் சிறுகதைத் தொகுப்பிலிருந்து....)

---


## இலங்கையில் 'சாரதா' கிடைக்குமிடம் :

**VASANTHAM (Pvt.) Ltd.,**

S-44, 3rd Floor,

Central Super Market Complex,

COLOMBO - 11.


---


ஒரு லட்சம் வீடுகள்
கட்டித்தரும் உன்னத பணியின்
இலக்கை நோக்கி வெற்றிநடை போடுகிறது
வி ஜி பி நிறுவனம்.
சென்னை நகரில் அல்லது குளு குளு கொடைக்கானலில் அல்லது மீனாட்சி யம்மன் கொலு வீற்றிருக்கும் மதுரை மாநகரில் உள்ளம் மகிழும் இல்லம் அமைத்திட எண்ணம் கொண்டிருக் கிறீர்களா? உங்கள் எண்ணத்தைத் திண்ணமாக்க - கனவை நனவாக்க வி ஜி பி வழங்கும் அதி உன்னத அரிய வாய்ப்பு.
விஜிபி என்பது ஒவ்வொரு மக்களின் உள்ளத்திலும் பதிந்திருக்கும் நம்பிக் கை, தரத்தின் சின்னம். பல வருடங் களாக தவணை முறையில் வீட்டுப் பொருட்கள், வீட்டு மனைகள், வீடுகள் ஆகியவற்றை பல அற்புதத் திட்டங்கள் மூலம் எண்ணற்ற மக்கள் இலகுவாக வாங்கிட வழி செய்து வரும் தமிழகத்தின் மாபெரும் நிறுவனம்.
விஜிபி இன்றுவரை 60-க்கும் மேற் பட்ட குடியிருப்பு அபிவிருத்தி காலனிகளை உருவாக்கியிருப்பவர் கள். சென்னை புறநகரில் பல்வேறு பகுதிகளில் வாழ்க்கையை இன்புற்று வாழ பல வசதிகள் கூடிய பெரும் பெரும் நகர்களை அமைத்துத் தந்தி ருப்பவர்கள். உலகம் முழுவதிலும் இருந்து பல ஆயிரக்கணக்கான வாடிக்கையாளர்கள் விஜிபி வீட்டு மனைத் திட்டத்தில் நிலமும், வீடும் பெற்று மன நிறைவுடன் நல்லா தரவை வழங்கி வருவதே விஜிபி வீட்டு மனைத் திட்ட சிறப்பிற்குச் சான்றாகும்.
வி ஜி பி ஹவுஸிங்
பிரைவேட் லிமிடெட்
சைதாப்பேட்டை, சென்னை-600 015

# முகில் நேர்காணல்

(சென்ற இதழ் தொடர்ச்சி)

● உங்களின் 'ஞானம்புதுசு' நாவல் தலித் இலக்கியத்தைச் சார்ந்தது என்றொரு பொதுவான அபிப்ராயம் இருக்கிறது. இப்படியான தலித் இலக்கியத்தை இடதுசாரி எழுத்தாளர்கள் நிறையச் செய்வதாகக் கூறுகிறார்கள். தலித் இன எழுத்தாளர்களின் எழுத்துக்கள் மட்டுமே தலித் இலக்கியம் என்றும் பேசப்படுகிறது. உங்கள் கருத்து என்ன?

○ தலித்இலக்கியம் என்பது தமிழ்நாட்டிற்கு தெரிய வந்ததே 'சுபமங்களா'வில் ராஜ் கௌதமன் எழுதிய பிறகுதான் என்று நான் கருதுகிறேன். மகாராஷ்டிராவில் பலர் தலித் இலக்கியம்படைத்துள்ளதாக பேசப்படுகிறது. ஆனால், இன்னமும் இதுதான் தலித் இலக்கியம் என்ற குறைந்த பட்ச புரிதல்கூட தமிழில் ஏற்படவில்லை. அது தொடர்ந்து விவாதத்தில் இருக்கிறது. 'ஞானம் புதுசு' நாவலை பொன்னீலன் கூட தலித் இலக்கியம் என்ற புரிதலோடு பேசினார். தாழ்த்தப்பட்ட மக்களின் பிரச்னையைச் சொல்வதால் அது தலித் இலக்கியம் என்று அவர் சொல்கிறார். ஆனால், அதை நான் தலித் இலக்கியம் என்று நினைத்து எழுதவில்லை.

எனக்குள் ரொம்பகாலமாக இருந்தகருத்தைத் தான் நான் அதிலே கொண்டு வந்தேன். தாழ்த்தப்பட்ட மக்களை இன்றைக்கும் உணர்ச்சிபூர்வமாக விசயத்தைப் பார்க்க வைத்து விடுகிறார்கள். தாழ்த்தப்பட்ட மக்கள், எங்களுக்கு சலுகை அளிக்கவில்லை; எங்களைக் கவனிக்கவில்லை என்று சொல்கிறார்களா? சரி, இந்தாங்க அம்பேத்காருக்கு ஒரு சிலை. இல்லாவிட்டால் மணி மண்டபமே வைத்துக் கொள்ளுங்கள். அல்லது பஸ்ஸிலே சிலவற்றில் அம்பேத்கார் பெயரைப் போட்டுக் கொள்ளுங்கள். இப்படி உணர்ச்சிபூர்வமாக அவர்களை சமாதானப்படுத்துவது என்ற ரீதியிலே அது போகிறது. தீண்டாமை ஒழிப்பு மாநாடு போடுகிறார்கள். மாநாட்டோடு பிரச்னை தீர்ந்து விட்டதாக அவர்களும் நினைத்து விடுகிறார்கள். ஏன் படித்தவர்கள் கூட நம்மைப் பற்றி இவர்கள் பேசுகிறார்கள். ஆகவே இவர்கள்தான் நம்மீது அக்கறை கொண்டவர்கள் என்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், உண்மையிலேயே தீண்டாமைஒழிப்பு என்பது இன்னும் ஆழமாக போய் பார்க்க வேண்டிய விசயம் என்று எனக்குத் தோன்றி ரொம்ப காலமாக ஊறின கருத்தைத்தான் நான் 'ஞானம் புதுசு' நாவலில் கொண்டு வந்தேன். அதை தலித் என்கிறார்கள். தலித்துகளுக்கு நிறைய பிரச்சனைகள் இருக்கின்றன. அவை அனைத்தும் சொல்லப்பட வேண்டும். அது அடித்தட்டு மக்களின் வாழ்க்கை முறையைப் பற்றிய இலக்கியமாகத்தான் பார்க்கப்பட வேண்டுமே தவிர, தலித் என்ற பெயரால் அழைக்கப்பட வேண்டும் என்பதில் எனக்கு உடன்பாடு இல்லை.

● உங்கள் நாவலில், தீண்டாமை ஒழிப்பு என்பது நிலத்தோடும், நிலவுடைமையோடும் சம்பந்தப்பட்டது. நிலத்துக்கான போராட்டத்தின் வெற்றியில்தான்

தீண்டாமைஒழிப்பின் வெற்றியும் அடங்கியுள்ளது என்று கூறுகிறீர்கள். அத்துடன், சீர்திருத்த வழிமுறைகளால் தீண்டாமையை முற்றாக ஒழிக்க முடியாது என்றும் சொல்கிறீர்கள். அது பற்றி விளக்க முடியுமா?

○ தீண்டாமைக்கு எதிராக குரல் கொடுத்தவர்களில் முக்கியமாக பெரியாரைச் சொல்ல வேண்டும். அம்பேத்கார், சிங்காரவேலன், பிறகு, கம்யூனிஸ்ட் இயக்கங்களைச் சார்ந்த தலைவர்கள். ஆனால், பொதுவாக திராவிட இயக்கம் அதனுடைய வளர்ச்சியில் வந்த திமுக அ.தி.மு.க போன்ற இயக்கத்தவர்கள்தான் தீண்டாமைக்கு எதிராக நிற்கிறார்கள் என்ற கருத்து பரவலாக இருக்கிறது. அது குறிப்பாக படித்த தாழ்த்தப்பட்ட மக்களிடமே இருக்கிறது. ஏனென்றால், தீண்டாமையை எதிர்த்து பிரசுரம் வெளியிடுவது, மாநாடு போடுவது, பொதுவான இடஒதுக்கீடு கேட்டு போராட்டம் நடத்துவது போன்ற விசயங்களை இந்த இயக்கங்கள் பலகாலம் செய்ததாலே இப்படியொரு கருத்து உண்டாகி இருக்கிறது. தாழ்த்தப்பட்ட மக்கள் வாழ வேண்டுமானால், அவர்களுக்கு அடிப்படையில் நிலம் வேண்டும், வேலைவேண்டும், நியாயகூலி வேண்டும். இதை ஒரு மையப் பிரச்னையாக எடுத்துக் கொண்டு இவர்கள் இயக்கம் நடத்தியதாகக் கூற முடியாது. இதெல்லாம் செய்யாமலே மேலோட்டமாக உணர்ச்சி ரீதியாக அவர்களை திருப்திப் படுத்துகிற - சாந்தப் படுத்துகிற விசயங்களை மட்டும் இவர்கள் சொல்கிறார்கள். சில பேர் தப்பு அடிக்கக் கூடாது, செத்த மாட்டைத் தூக்கக் கூடாது என்ற நிலை யெடுத்தால் மனோரீதியாக துணிச்சல் வரும். அதன் மூலமாக விடுதலை கிடைக்கும் என்றெல்லாம் பேசுகிறார்கள். தலித் இயக்கம் அல்லது தாழ்த்தப்பட்ட மக்களுக்காக இயங்குகிற இயக்கம், இளைஞர் அமைப்பு போன்ற இயக்கத்தினர்கூட இது போன்ற விசயத்துக்குத்தான் அதிக அழுத்தம் கொடுக்கின்றனர். ஆனால், நிலம் தாழ்த்தப் பட்டவர்கள் கையில்கிடைத்து அவர்கள் மேல் தட்டைச் சேர்ந்தவர்களை சாராமல் சுயமாக மாற வேண்டும். அப்போதுதான் தீண்டாமை ஒழியும்.

● இடதுசாரி அமைப்புகளின், தீண்டாமைக்கு எதிரான செயல்பாடுகளாக எதைக் கருதுகிறீர்கள்?

○ ஒன்று, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு நிலம் பெற்றுத் தருவது. இரண்டு, அவர்களுக்கு நியாயக் கூலி கிடைக்கச் செய்வது. மூன்று, சமூக ஒடுக்குமுறையிலிருந்து அவர்களைக் காப்பாற்றுவது.

ஒரு முறை உமாநாத் பேசும்போது, பொதுவாக தொழிலாளர்கள் ஒரு ஒடுக்குமுறையைத்தான் சந்திக்கிறார்கள். ஆனால் தாழ்த்தப்பட்டவர்கள் இரண்டு ஒடுக்கு முறைகளை சந்திக்கிறார்கள் என்று ஆரம்பித்து சமூகரீதியாக எப்படியெல்லாம் ஒடுக்கப்படுகிறார்கள்; நிலத்தோடு எவ்வளவு தூரம் அவர்கள் விலக்கி வைக்கப் பட்டிருக்கிறார்கள், அவர்களுக்கு நிலம் கிடைக்க வேண்டியது எவ்வளவு அவசியம், அதற்கு ஒட்டுமொத்தமான தொழிலாளி இயக்கம் குரல் கொடுக்க வேண்டியது எவ்வளவு முக்கியம் என்பதை எல்லாம் பேசிக் கேட்டிருக்கிறேன்.

மேற்கு வங்க இடதுசாரி அரசு உபரி நிலத்தை எடுத்து நிலமற்ற ஏழைகளுக்கு வழங்குகிறது. நிலமற்றவர்களில் பெரும்பகுதி தாழ்த்தப் பட்டவர்கள். ஆக, இயல்பாகவே அவர்கள் கூடுதல் பயன் அடைகிறார்கள். ஆனால் மேற்கு வங்க இடதுசாரி அரசு தாழ்த்தப் பட்டவர்களுக்கு நிலம் கொடுத்திருக்கிறோம் என்று உரத்துக் குரல் கொடுப்பதில்லை. அம்பேத்காருக்கு சிலைவைப்பது, தீண்டாமை எதிர்ப்பு மாநாடு போடுவது போன்ற ரீதியில் இயங்காமல், அடிப்படையில் என்ன செய்ய வேண்டுமோ அது செய்யப்படுகிறது.

● திராவிட இயக்கங்கள் தாழ்த்தப்பட்ட மக்கள் பிரச்னையை எப்படி அணுகுகிறது என்று நினைக்கிறீர்கள்?

○ ஒரு சம்பவத்தைசொல்கிறேன். ஒருமுறை இடஒதுக்கீடுக்கான போராட்டத்தை நடத்தப்போவதாக கி. வீரமணி அறிவித்து, அது தொடர்பாக ஆலோசனைக் கூட்டம்நடந்தது நான் பார்வையாளனாகப் போயிருந்தேன். தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட மக்கள்

சார்பாக பிரதிநிதிகள் அங்கே இருந்தார்கள். தாழ்த்தப்பட்டவர்களின் பிரதிநிதிகள், "பிற்பட்ட மக்களுக்கு இடஒதுக்கீடு பிரச்னை என்று வந்தவுடனே பெரிய அளவிலே போராட்டம் எடுக்கிறீர்கள். தாழ்த்தப்பட்ட மக்களுக்கான 'ரிஸர்வேஷன்' எண்ணிக்கை உயரவேண்டும். தனியார் நிறுவனங்களிலும் இடஒதுக்கீடு அமல்படுத்த வேண்டும் என்று நீங்கள் எந்த இயக்கமும் நடத்தவில்லையே'' என்று வீரமணியைக் கேட்டார்கள். அதற்கு அவரால் "பிரச்சனை வரும்போதெல்லாம் அதைக் கையிலெடுக்கிறோம்'' என்றுதான் பதில் பேச முடிந்ததே தவிர, இல்லை நாங்கள் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு சலுகைகள் பெற்றுத் தருவதில் உறுதியாக இருக்கிறோம். அதற்காக போராட்டம் நடத்த இருக்கிறோம் என்று சொல்ல முடியவில்லை. அதோடு அந்தப் பிரதிநிதிகள் "தாழ்த்தப்பட்ட மக்கள்மீது தாக்குதல் தொடுப்பவர்களெல்லாம் பிற்படுத்தப்பட்ட மக்களாகத்தான் இருக்கிறார்கள். அனுபவம் அப்படித்தான் சொல்கிறது. பிராமணர்கள் தான் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எதிரானவர்கள் என்பது உண்மையல்ல'' என்றும் சொன்னார்கள்.

● பெண் விடுதலை குறித்து இருவேறு விதமான கருத்தோட்டம் நிலவுகிறது. ஒன்று பெண்கள் திருமணம் செய்துகொண்டு தங்கள் சுதந்திரத்தை நிலைநிறுத்துவது. மற்றொன்று, திருமண முறை என்பதே போலித்தனமானது. அது கூடாது என்பது. இதில் நீங்கள் விரும்புகிற பெண் விடுதலை எத்தகையது?

○ பெண்களுக்கு தங்களால் சுயமாக வாழ முடியும் என்ற நம்பிக்கை வர வேண்டும். ஆண்களால்தான் அனைத்தும் முடியும். கணவன் இல்லாவிட்டால் தன்னால் வாழ முடியாது என்கிற மனோபாவம் பெண் விடுதலைக்கு உகந்தது அல்ல; அந்த மனோபாவத்தை உடைக்க வேண்டும். கணவன் இல்லாவிட்டாலும் பெண்களால் குடும்பத்தைத் திறமையாக நடத்த முடியும் என்கிற நம்பிக்கை வர வேண்டும்.



பாலியல் ரீதியான விசயங்கள், அதை ஒட்டி சாட்டப்படுகிற குற்றச்சாட்டுகள் இவற்றால் அவர்கள் குன்றிப் போய் விடுகிறார்கள். அது கூடாது.

கணவனோடு விசயங்களை பரிமாறிக் கொள்வது இரண்டு தளங்களில் நடைபெறுகிறது. ஒன்று, வேலை செய்யும் பெண்களின் கருத்துப் பரிமாற்றம்; இரண்டாவது வீட்டிலேயே இருக்கும் பெண்களின் கருத்துப் பரிமாற்றம்.

வேலைக்கு செல்லும் பெண்கள் 'என்னதான் வேலைக்குப் போனாலும் நாம் பொம்பளை தானே. ஆம்பளையிடம் எதற்கு பிரச்னை' என்று தன் கருத்தை வலுவாக வைக்காமல் கணவன் கருத்தோடு ஒத்துப் போகிறார்கள். வேலைக்கு போகாமல் வீட்டிலேயே இருக்கும் பெண்களோ, தங்களுக்கு ஒரு கருத்து இருப்பதாகவோ, அதைக் கணவரிடம் வலியுறுத்த வேண்டும் என்கிற நினைவோ இல்லாமல் இருக்கிறார்கள்.

சில நடுத்தர வர்க்கத்துக் குடும்பப் பெண்கள், மாதர் இயக்கங்களில் இருப்பார்கள். விடுதலைக் குறித்த கருத்துகளெல்லாம் பேசுவார்கள். பெண்கள் படிக்க வேண்டும், வேலைக்குப் போக வேண்டும் அதுதான் பெண் விடுதலைக்கு அடிப்படை என்றெல்லாம் கூறுவார்கள். அதோடு, பெண்ணுக்கு ஏதாவது சேர்த்து வைக்க வேண்டும் என்றும் சொல்

வார்கள். பெண் விடுதலை பற்றி யோசிப்பவர்கள், அதற்காக படிப்பவர்கள், பேசுபவர்கள், எழுதுபவர்கள் தங்கள் நடைமுறை வாழ்க்கையில் இது எதையும் அறியாதவர்கள் போலவே நடந்து கொள்கிறார்கள்.

பெண்ணுக்குநகையோ பணமோசேர்த்து வைப்பதைவிட பெண்ணைபடிக்கவைத்துவேலைக்கு அனுப்புவதுதான் என் கடமை. அதை நான் செய்கிறேன். அதன் பிறகு அவள் வாழ்ந்து கொள்வாள் என்ற புரிதலுக்கு வரவேண்டும்.

● **பெண்களுக்கு கலாச்சார ரீதியிலான விடுதலை வேண்டும் என்று நீங்கள் சொல்கிறீர்கள். அதை ஒட்டிய புதிய சிந்தனை மரபை மக்கள் பெற வேண்டும் என்று நினைக்கிறீர்களா?**

○ சனங்களிடம் ஒருவிசயத்தை தெளிவாக புரிந்து கொள்ள வேண்டும் என்ற பழக்கம் வர வேண்டும் என்று நான் நினைக்கிறேன். ஏனென்றால், எப்போதுமே விருப்பு, வெறுப்பு இல்லாமல் ஒரு வசயத்தை அணுகுவது. சாதக பாதகங்களைப் பார்த்துவிட்டு ஒரு கணிப்புக்கு வருவது என்ற பழக்கம் வந்து விட்டதென்றால், பல விசயங்களுக்கு தீர்வு எளிதில் கிடைக்கும். அத்தகையக்கலாச்சாரம் (தன்மை) குறைவாக இருக்கிறது. உதாரணமாக, ''உடல் மண்ணுக்கு உயிர் தமிழுக்கு'' என்று சொல்கிறார்கள். அப்படிச் சொல்லிவிட்டாலே தமிழுக்காக பயங்கரமாகச் செய்து விட்டார்கள் என்று நினைக்கிற மனோபாவம் மக்களிடம் இருக்கிறது. என்னைப் பொருத்தவரை அப்படி சொல்பவர்கள் தமிழ் வளர்ச்சிக்கு என்ன செய்கிறார்கள் என்பதையும் பார்த்துவிட்டு ஆக்கபூர்வமாக ஒன்றும் செய்யவில்லை என்றால், உடல் மண்ணுக்கு உயிர் தமிழுக்கு என்று சொன்னது வெறும் முழக்கம் தான் என்று ஜனங்கள் புரிந்து கொள்ள வேண்டும். அதே போல, ஒருவரை தலைவராக ஏற்றுக்கொண்டால், அவர் சொல்வதெல்லாம் சரி, அவர் எதையும் தவறாகச் சொல்ல மாட்டார். அதை அப்படியே நாம் கடைபிடிக்க வேண்டும்-இப்படி நினைக்கிறதன்மை தமிழ் நாட்டில் கூடுதலாக இருப்பதாக நான் நினைக்கிறேன். இதனாலேயே தனி நபரை மேலான நிலைக்கு உயர்த்தி விடுகிற தன்மையையும் காணமுடிகிறது. எத்தனை இயக்கங்கள் புதிது புதிதாக வந்தாலும் இந்தத் தன்மையோடுதான் வருவதாக நான் பார்க்கிறேன். நான் அண்மையில் ரொம்ப யோசித்த, வருத்தப்பட்ட ஒரு விசயம்—நம் முதலமைச்சர், அவ்வப்போது, ''நான் பெண்ணாக இருப்பதால் எனக்குத் தொல்லை கொடுக்கிறார்கள்'' என்று கூறுகிறார்கள். அவரை தலைவியாகக் கொண்டவர்களெல்லாம் 'ஆமாம் அதுசரிதான்' என்று கருதி விடுகிறார்கள். ஆனால் மக்கள்; உண்மையிலேயே முதல்வர் பெண் என்பதனால்தான் இந்தப் பிரச்சினையா? எதிர்ப்பா? அல்லது அவர்கள் எடுக்கிற நடவடிக்கைகளில் அல்லது ஆட்சியில் இருக்கிற கோளாறுகளால் வருகிற பிரச்னையா என்று அறிந்து ஒரு முடிவுக்கு வரவேண்டும். கலைஞர்கூட அப்படித்தான் பல நேரங்களில், ''நான் சூத்திரன் என்பதால் எனக்கு இப்படி தொல்லைக் கொடுக்கிறார்கள்'' என்று சொல்கிறார். ஆனால், அந்தப் பிரச்னை சூத்திரன் என்பதால் வந்திருக்காது.

இந்த மாதிரியான தன்மைகளிலிருந்தெல்லாம் மாறுபட்டு, விவரங்களின் அடிப்படையில் விசயத்தை முடிவு செய்வது, அதிலிருந்து ஒரு கணிப்புக்கு வருவது என்கிற ஒரு கலாச்சாரம் தமிழ் மண்ணிலே வரவேண்டும் என்று நான் கருதுகிறேன். அதற்கு கலையும், இலக்கியமும் உதவவேண்டும் என்பது என்னுடைய அக்கறை.

● **பல துறைகளில் உங்கள் செயல்பாடு இருந்தாலும், இப்போது ஏதோ ஒன்றில் ஆழ்ந்து போயிருப்பீர்கள். அது குறித்த யோசனை சற்று தூக்கலாகவே இருக்கக் கூடும். அப்படியாயின் அது என்னவென்று கூறுங்களேன்?**

○ அப்படி நான் யோசிப்பதில் ஒன்று, பெண்களின் சமூக அந்தஸ்த்தில் அவர்களின் இன்றைய நிலைமை- அவர்கள் அதில் ஒரு உடைப்பை ஏற்படுத்திக் கொண்டு மேலே போவது-அதில் உள்ள பிரச்னைகள்—அதை எப்படி சமூகம் பார்க்க வேண்டும் என்ற ரீதியில் உள்ள விஷயங்களை ஒரு நல்ல நாவலில்

## திரைகளின் பின்னால்



இரவின் மடியில்
இருளின் இராச்சியம்.

உயிருள்ள ஜீவன் நான்.
ஓரமாய் உட்கார்ந்து
ஒன்றுமே அற்று
சும்மா இருக்க முடியாது.

சென்று மறையும் இக்கணங்களில்
கனன்று உழலும் நெஞ்சக் குமுறல்கள்
நெஞ்சக் கணப்பை
மேலும் அதிகமாக்கும்.
திரைகளின் மூடல்
ஒன்றன் மேல் ஒன்றாய்
எத்தனை எத்தனை?
அதற்கு மேலும்,
இதுவும் ஒன்றா?
எல்லாவற்றையும் தன்னுள்
மறைக்கும் இந்தத் திரைக்குள்,
எங்ஙனம் இருப்போம்?
இறந்தவரல்லர் நாம்,
இதயம் துடிக்கும் ஏழைப் பெண்கள்;
மண்ணின் குழந்தைகள்;
மானிடப் பெண்கள் நாம்;
இனியும் சகியோம்
இருளின் ஆட்சியை.

எதற்கும் அஞ்சோம்
துன்பம் ஏற்றிடோம்.
துயர் மிகக் கொள்ளோம்.
வென்று இவ்வுலகில்
நிலைத்திட வந்தோம்
இன்று பிறந்தோம்
இன்று பிறந்தோம்
வென்று வாழ்ந்திட
இன்று பிறந்தோம்.

—சுபீகால்
(ஈழத்து பெண்கவி)

---

கொண்டு வரவேண்டும். இன்னொன்று, நாட்டுப்புற ஆட்டக் கலைகளை மையமாக வைத்து, அல்லது அதன் சாரங்களை அதிகமாக உள்வாங்கிக் கொண்டு ஒரு புதிய ஆடல் நிகழ்ச்சியை அல்லது பாடல் நிகழ்ச்சியை தயார் செய்ய வேண்டும். அதன் மூலம் ஒரு புது வடிவத்தை (Form) கொடுக்க வேண்டும். இந்த இரண்டு விசயங்கள்தான் இன்றைக்குத் தூக்கலாக எனக்குள் இருக்கிறது.

● உங்களின் கலை, இலக்கிய வாழ்வுக்கு உங்கள் குடும்பத்தின் ஆதரவு அல்லது பங்களிப்பு எந்த விதத்தில் உள்ளது?

○ என்னுடைய படைப்பு முயற்சிகளுக்கு எனது துணைவியார் ஜோதிமணி உறுதுணையாகவும் உற்சாக மூட்டுபவராகவும் இருக்கிறார். நாடகக் குழுக்களிலும், கலை நிகழ்ச்சிகளிலும் பங்கேற்றுள்ளார். அறிவொளி இயக்கம் நடத்திய கலைப்பயணங்களிலும் கலந்து கொண்டிருக்கிறார். மாதர் இயக்கப் பணிகளிலும் ஈடுபடுகிறார், இது போன்ற ஈடுபாடு என்னுடைய பணிகளை சரியான கோணத்தில் புரிந்து கொண்டு உதவ வைத்திருக்கிறது என்றும் பார்க்கலாம்.

சந்திப்பு
சூரியசந்திரன்
கலைச்செல்வன்

புத்தக மதிப்புரை
வல்லிக்கண்ணன்

# வெள்ளிப் பாதசரம்

(இந்த நூற்றாண்டின் ஈழத்துச் சிறுகதைகள்)

தொகுப்பாசிரியர்கள் : **யோ. சுந்தரலட்சுமி, செ. யோகநாதன்**

வெளியீடு : சத்தியபாரதி பதிப்பகம், கோடம்பாக்கம், சென்னை-24.

விற்பனை உரிமை : காந்தளகம், 4, முதல் மாடி, ரகிசா கட்டிடம்,
814, அண்ணாசாலை, சென்னை-2.

விலை : எண்பது ரூபாய். பக்கங்கள் : VIII + 488


தமிழ் இலக்கிய வளத்துக்கும் வளர்ச்சிக்கும் ஈழத்து எழுத்தாளர்களும் கணிசமான பங்களிப்பை செய்திருக்கிறார்கள்; இப்பவும் செய்து வருகிறார்கள். தமிழ் சிறுகதை, நாவல், இலக்கிய விமர்சனம், கவிதை முதலிய பல துறைகளிலும் ஈழத்து எழுத்தாளர்கள் சிறப்பாகக் குறிப்பிடப்பட வேண்டிய அளவுக்கு சாதனைகள் புரிந்துள்ளனர்.

ஆயினும், ஈழத்து எழுத்தாளர்களின் சாதனைகள் தமிழ்நாட்டில் ரசிகர்களாலும், இலக்கிய விமர்சகர்கள் என்று சொல்லிக் கொள்கிறவர்களாலும் சரியாக கவனிக்கப்படுவதில்லை. இது பெரும் குறையே ஆகும்.

ஈழத்துப் படைப்புகள் உரிய முறையில் தமிழ்நாட்டில் அறிமுகம் செய்யப்படவில்லை; புகழ் பெற்ற ஈழத்துப் படைப்பாளிகளின் சீரிய எழுத்துக்கள் இங்கு சரிவரக் கிடைப்பதில்லை என்பது போன்ற காரணங்கள் கூறப்படலாம்.

'ஈழத்து இலக்கியம் பற்றி பரவலாக இன்று பேசப்படுகின்றது. ஆனாலும் அதன் உண்மையான வளர்ச்சித்தன்மை பற்றி ஒரே பார்வையில் அறிந்து கொள்வதற்கு - படைப்பிலக்கியத்தைப் பொறுத்தவரை முழுமையான ஒரு தொகுதி இதுவரை உருவாக்கப்படவில்லை' என்று செ. யோகநாதன் கூறுவது சரியே.

சிறு கதையைப் பொறுத்தவரை இந்தக் குறையைத் தீர்ப்பதற்கு ஒரு திட்டம் வகுத்து




செ. யோகநாதன், யோ. சுந்தரலட்சுமி இருவரும் 'இந்த நூற்றாண்டின் ஈழத்துச் சிறுகதை'களைத் தொகுத்து வெளியிட முற்பட்டிருக்கிறார்கள். இப் பொதுத் தலைப்பில், ஐந்து தொகுதிகளை வெளியிட அவர்கள் தீர்மானித்து, முதல் தொகுதியாக 'வெள்ளிப் பாதசரம்' என்ற, 488 பக்கங்கள் கொண்ட புத்தகத்தை உருவாக்கியிருக்கிறார்கள்.

'வெள்ளிப் பாதசரம்' என்பது புகழ்பெற்ற ஈழத்து எழுத்தாளர் இலங்கையர்கோன் எழுதிய பிரசித்தி பெற்ற கதையாகும். 1930கள் 40களில் சி. வைத்தியலிங்கம், சம்பந்தன், இலங்கையர்கோன் போன்ற சிறுகதைப் படைப்பாளிகளின் கதைகள் தமிழ்நாட்டில் நன்கு வரவேற்றுப் பாராட்டப்பட்டன.

சி. வைத்தியலிங்கத்தின் சிறந்த படைப்புகளில் ஒன்றான 'கங்கா கீதம்' இத்தொகுப்பில் இடம் பெற்றுள்ளது.

கால ஓட்டத்தையும் எதிர்த்து நின்று நிலையான புகழ்சேர்த்துள்ள தோணி (வ.அ.இராசரத்தினம்), பாதுகை (டொமினிக் ஜீவா), தேர் (எஸ். பொன்னுத்துரை), கணிதவியலாளன் (அழகு சுப்பிரமணியம்) ஆகிய கதைகளும் இதில் உள்ளன.

கற்பு என்பதற்கு காலத்தோடு ஒட்டிய, சமூக நிகழ்வுகள் சந்தர்ப்பங்களின் பாதிப்புகளுக்கு ஏற்ற, பரந்த நோக்குடன் பொருள் கொள்ள வேண்டும்; பாதிக்கப்பட்டவர்களை அன்புடனும் மனித நேயத்துடனும் கவனிக்க வேண்டும் என்று நேரிய சிந்தனையை வலியுறுத்தும் வரதரின் கதை 'கற்பு',

அவசரத் தேவைகளுக்கு அனுசரித்துக் கொண்டு, முக்கிய சந்தர்ப்பத்தில் தாழ்த்தி விலக்கி சகமனிதனை தண்டனைக்கு உள்ளாக்கத்தயங்காத சமூகப் பெரிய மனிதர்களின் போலித் தன்மையை சுவையாகச் சித்திரிக்கும் சிற்பியின் 'கோவில்பூனை'

பருவப் பெண் விழிப்புடன் நடந்து தன்னைத் தற்காத்துக் கொள்ள வேண்டிய அவசியத்தை தன் பேத்திக்குக் கதை போல் எடுத்துக்கூறிய 'பாட்டி சொன்ன கதை' (தெளிவத்தை ஜோசப்),

செங்கை ஆழியானின் 'அறுவடை' போன்ற கதைகள் ஈழத்து எழுத்துக்களின் வலிவையும் வனப்பையும் காட்டக் கூடியவை.

ஈழமக்களின் வாழ்க்கை நெருக்கடிகளையும், அகதிகள் என்ற பெயர் ஏற்று அலைய நேரிட்டுள்ள அவர்கள் பல்வேறு இடங்களில் அனுபவிக்கிற அவலங்களையும் பல கதைகள் யதார்த்தமாக, உணர்ச்சிச் சித்திரங்களாக எடுத்துச் சொல்கின்றன.

விவசாய மக்கள் எதிர்கொள்கிற சிக்கல்களையும் சிரமங்களையும், பெண்கள் வீட்டிலும் சமூகத்திலும் அனுபவிக்க நேர்கிற நிகழ்ச்சிகளையும்- அவை அவர்களுள் எழுப்புகிற உணர்வுகளையும், கால வேகத்தில் விழிப்புணர்வு பெற்ற பெண்களின் புதுமைச் சிந்தனைகளையும் அடிப்படையாகக் கொண்டு பல எழுத்தாளர்கள் நல்ல கதைகளைப் படைத்திருக்கிறார்கள்.

மூத்த தலைமுறை எழுத்தாளர்கள் முதல், காலம் தோறும் தோன்றித் தங்கள் திறமையை நிரூபித்துள்ள படைப்பாளிகளுடன், சமீப நாட்களில் எழுத ஆரம்பித்து கவனிப்புப் பெற்றுள்ள இளைய படைப்பாளிகள் வரை ஆற்றல் காட்டியுள்ள பலரது கதைகளையும் தொகுத்து, நல்ல கதைக் கோவையாக உருவாக்கியுள்ள தொகுப்பாசிரியர்களின் முயற்சியும் உழைப்பும் வெகுவாகப் பாராட்டப்பட வேண்டியவை.

ஈழத்து இலக்கியம் பற்றிய அறிமுகமாக அமைந்துள்ள அருமையான ஆய்வுரை அவ்இலக்கியத்தின் ஆழத்தையும் சிறப்பையும் புரிந்து கொள்ள நன்கு உதவும்.

யாழ்ப்பாணப் பிரதேசத்தின் அடையாளங்களை போட்டோக் கவிதையாய் பதிவு செய்துள்ள பாலு மகேந்திராவின் கலை சிருஷ்டி அட்டைப்படமாக இத்தொகுப்பை அழகு படுத்துகிறது.

---

**ஆண்டு சந்தா : ரூ.50**
(சிறப்பிதழ்கள் உட்பட)
☆ ☆ ☆
**'நூல் விமர்சனம்' பகுதிக்கு இரண்டு பிரதிகள் அனுப்பி வைக்க வேண்டும்.**

நூல் விமர்சனம் :

# சமூக மாற்றத்துக்கான அரங்கு

**க. சிதம்பரநாதன்**

வெளியீடு : தேசிய கலை இலக்கியப் பேரவையுடன் இணைந்து
சவுத் ஏசியன் புக்ஸ்
6/1, தாயார் சாகிப் 2-வது சந்து, சென்னை-2
விலை: ரூ. 18.

எந்த ஒரு உண்மையான கலையும் மனிதனுக்கு மகிழ்ச்சியையும், அவன் தன்னுடைய சுதந்திரத்தின் எல்லைகளை விரிவுபடுத்துவதற்கான சாத்தியங்களையும் அளிக்கிறது. அந்தத் தாக்கத்தின் உத்வேகத்தில் அவன் தன்னுள் உறைந்துகிடைக்கும் செயலூக்கம் தூண்டப்படுவதை உணர்கிறான். அடிமைப்பட்டு பல்வேறு துன்பங்களில் சிக்கித் தவிக்கும் ஒரு ஆதிவாசிக் கும்பலின் முன்னால் ஒரு கழைக் கூத்தாடி மெல்லிய குரலில் பறையொலியைத் தட்டி எழுப்புகிறான். அந்த ஒலி அவர்களுக்குள் உறைந்து கிடக்கும் துயரங்களைத் தட்டி எழுப்புகிறது. தங்கள் அவல நிலை குறித்து அவர்கள் கண்களில் கண்ணீர் பெருக்கெடுத்து ஓடுகிறது. அவர்கள் தங்கள் நிலையை உணர்கிறார்கள். அரங்கம் இதுபோன்ற பல சாத்தியங்களைக் கொண்டுள்ளது.

'மக்கள் தமது குரலை, பேசும் சக்தியை இழந்து விட்டார்கள். ஒரு மௌனப் பண்பாட்டில் கிடந்து வருந்துகிறார்கள். நமது நியமமான கல்வி முறையும், ஒடுக்கு முறைச் சூழலும் அவர்களை இத்தகைய மூடமான நிலைக்குத் தள்ளிவிட்டது. இத்தகைய நிலையிலிருந்து மௌனப் பண்பாட்டிலிருந்து அவர்களைத் தளை நீக்கி தமது கருத்துகளை சுதந்திரமாக வெளியிடவும், செயற்படவுமான ஒரு நிலைக்கு எழுச்சியடையச் செய்வதற்கான ஒரு மாற்று ஏற்பாடாக அரங்கை நாம் சிந்திக்கிறோம்' என்று கருதும் சிதம்பரநாதன் ஒரு அரங்க செயற்பாட்டாளர். யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் அரங்கம் கற்பிப்பவர். அவருடைய வார்த்தைகளிலேயே சொல்வதானால் 'மானுடப் பண்பற்றதாகி விட்ட நமது ஒடுக்குமுறைப் பண்பாட்டை மானுடப் படுத்துகின்ற பணியை ஊக்குவிக்கும் ஒரு கருவியாக அரங்கைப் பயன்படுத்த முடியுமா என்ற சிந்திப்பின் விளைவே 'சமூக மாற்றத்துக்கான அரங்கு 'என்ற இந்த ஆய்வாகும்'. அரங்கும் உண்மையான சமூக விடுதலையும், அரங்கின் அச்சாணி அம்சங்கள். சர்வதேச மட்டத்தில் சமூக மாற்றத்துக்கான அரங்கின் வளர்ச்சியும், பண்புகளும், இன்று நம் மத்தியில் நிலவுகின்ற அரங்குகளின் தன்மைகள், குறைபாடுகள், நமக்கு தேவைப்படும் அரங்கு என்ற பல்வேறு தலைப்புகளில் ஆய்வுக்கட்டுரைகளைக் கொண்டுள்ள இந்த தொகுப்பு ஈழத்தமிழ் நாடக அரங்கில் செயல்படும் கருத்தாக்கங்கள் பற்றிய ஒரு கணிப்பை முன் வைக்கிறது.

ஆசிரியர், அகஸ்டோ போவலின் பின்வரும் அரங்கக் கோட்பாட்டினால் பெரிதும் கவரப்பட்டவராக இருக்கிறார். 'பாத்திரம் தனக்காகச் சிந்திக்கவும் செயற்படவும் கூடிய வகையில் பார்வையாளன் நாடக பாத்திரத்திற்கு அதிகாரத்தைக் கையளித்து விடும் ஒரு கவிதையியலை அரிஸ்டாட்டில் முன்மொழிகிறார். பிரெக்ட் முன்மொழியும் கவிதையியலில்பாத்திரம் தனது இடத்தில் நின்று செயலாற்ற அதிகாரம் வழங்கப்படுகிறது. ஆயினும் பார்வையாளன் தனக்குத்தானே சிந்திக்கும் உரிமையைத் தன்னுடன் வைத்துக் கொள்கிறான். முதலாவதில் 'உணர்ச்சி வெளிக் கொணர்கை' சம்பவிக்கிறது. இரண்டாவதில் விமர்சனப் பாங்கான உணர்வு விழிப்புநிலை எழுகிறது. ஆனால் ஒடுக்கப்பட்டோரின் கவிதையியல் செயலிலேயே கவனத்தைக் குறிக்கிறது. தனக்குப் பதிலாக செயலாற்றவோ, சிந்திக்கவோ பாத்திரத்துக்குப் பார்வையாளன் அதிகாரம் வழங்குவதில்லை. அதற்கு மாறாகத் தானே முதன்மைப் பாகத்தை ஏற்றுக் கொள்கிறான். நாடகச் செயலை மாற்றியமைக்கிறான். தீர்வுகளை பயன்

# நூல் ஆய்வு

—சி. சிவசேகரம்

## அமைப்பியல் வாதமும் தமிழ் இலக்கியமும்

**தமிழவன்**

வெளியீடு: காவ்யா, பெங்களூர்.
பக்கம் : 151 + 18
விலை : இந்திய ரூபா முப்பது.

**பு**த்தகத்தைப் பற்றி எழுதுமுன் இரண்டு கதைகளைச் சொல்லலாமென்று நினைக்கிறேன். முதலாவது, ராமகிருஷ்ணர் சொன்ன ஒரு கதையின் மாற்று வடிவம்:

ஒரு ஊரிலே ஒரு குரு. அவருக்கு ஒரு சீடர். குருவுடன் இருந்து எதையுமே சாதிக்கவில்லையே என்ற விரக்தி அவருக்கு. திடீரென ஒரு நாள் எங்கோ போய் விட்டார். வெகு காலம் கழித்து வெகு உற்சாகமாகத் திரும்பி வந்தார்.

பழைய குருவைக் காணப் போன போது குரு தியானத்தில்இருந்தார். தியானம் முடிந்த குரு சீடரைப் பார்த்து வாய் திறக்கு முன்னே ''கண்டு பிடித்து விட்டேன்! கண்டு பிடித்து விட்டேன்!'' என்று சீடர் கூவினார். குரு நிதானமாக ''எதை?'' என்று கேட்டார். கேட்ட குருவின் கையைச் சீடர் பற்றித் தர தரவென்று இழுத்துக்கொண்டு ஆற்றங் கரைக்குப் போனார். குருவைக் கரையில் நிறுத்தி விட்டு ஆற்று நீர் மேல் நடந்து அக்கரைக்குப் போனார். பிறகு, நீர் மேல் நடந்து திரும்பி வந்து குருவிடம் ''இதைத் தான் கண்டு பிடித்து விட்டேன்'' என்று மிகுந்த பெருமையுடன் சொன்னார். குரு புன்முறுவலுடன் ''இதற்காகவா நீ இவ்வளவு காலத்தையும் செலவிட்டாய்? படகோட்டியிடம் அரை அணா கொடுத்தால் அவனே உன்னைக் கொண்டுபோய்க் கொண்டு வந்திருப்பானே!'' என்றார்.

இரண்டாவது நிசமாக நடந்தது. பேர்களைக் குறிப்பிட அவசியமில்லை.

''என்னுடைய சகபாடிகளில் ஒருவர். புதிதாக மாக்ஸியத்தால் ஈர்க்கப்பட்டு இயங்கியல் பற்றி நிறைய வாசித்தார். தேனீர் அருந்தப் போனாலும் இயங்கியல் பற்றியே பேசுவார். படம் பார்க்கப் போனாலும் சாப்பிடப் போனாலும் இயங்கியலே பேச்சாக இருந்தது. வெகு சிரமப்பட்டுக் கதையை மாற்றுவோம். ஒரு நாள் ஒரு இளம் பட்டதாரி மாணவர் எங்களைப் பார்த்துப் போக வந்திருந்தார். அவர் முன்னிலையிலும் இயங்கியல் பற்றிய பேச்சு எழுந்தது. மிகவும் மரியாதையாக ''இயங்கியல் என்றால் என்ன என்று சொல்ல முடியுமா?'' என்று கேட்டார். தோழர் பெருமையுடன் ''அதையெல்லாம் லேசாக விளக்க முடியாது. நிறைய வாசிக்க வேண்டும்'' என்றார். பழைய மாணவர் ஒருவித சலனமுமின்றி ''இயங்கியலைக் கொண்டு என்ன செய்ய முடியும் என்றாவது சொல்ல

முடியுமா?'' என்றார். தோழர் மிகவும் உற்சாகமாக ''எதை வேண்டுமானாலும் செய்ய முடியும்'' என்றார். அதற்கு மாணவர் ''என்னுடைய பாலுணர்வை எப்படி இயங்கியல் மூலம் கட்டுப்படுத்தலாம் என்று சொல்வீர்களா?'' என்று சிரிக்காமலே கேட்டார். அதற்குப் பிறகு நம்மிடையே இயங்கியலுக்குச் சிறிது ஓய்வு கிடைத்தது.

சீடர் நீர் மேல் நடக்கக் கற்றது போலவும் தோழர் இயங்கியல் பற்றிக் கற்றது போலவும் தமிழவன் அமைப்பியல் பற்றிக் கற்றிருக்கக் கூடுமோ என்னவோ! தமிழில் அமைப்பியல் வாதத்தைப் பற்றி முதலில் வெளிவந்த நூல் 1982 மட்டில் வெளியான ''ஸ்ரக்சுரலிஸம்''. தமிழவன் எழுதியது. அதை வாசித்து விளங்குவதற்கு ஒருவர் எடுக்க வேண்டிய சிரமம் அதிகம். அதற்குப் பதிலாக, அவர் ஆங்கிலமோ பிரெஞ்சு மொழியோ கற்று அந்த மொழியில் ஏதாவது நல்ல புத்தகத்தை வாசித்து விஷயத்தை அறிய அதைவிட அதிகம் சிரமம் தேவைப்பட்டிருக்குமோ தெரியாது.

## தமிழ்ப் புத்திஜீவிகளும் இஸங்களும்

தமிழ் நாட்டிலே புதிய 'இஸங்'களுக்கும் 'லாஜி'களுக்கும் எப்போதுமே மவுசு உண்டு. யாருமே முன்பு அறிந்திராத ஒரு இஸத்தையோ லாஜியையோ கண்டுபிடித்த ஒருவர், மா வெந்து உருகி ஆவியாகும் வரை அரை அரையென்று அரைத்துத் தள்ளலாம். அந்த இஸமோ லாஜியோ அவர்களது பேட்டை. அதற்குள் அயலார் கால் வைத்தால் வந்தது தகராறு.

'புதுமை புதுமைக்காகவே' என்ற போக்கைப் பற்றிய எனது சொற்கள் புதிதாகத் தமிழுக்கு எதையும் கொண்டு வருகிறவர்களை ஏளனம் செய்ய முனையவில்லை. எல்லாமறிந்த விதமாக நடக்கிற பம்மாத்துக்களை மட்டுமே கடுமையாக விமர்சிக்கிறேன். ஒருவர் புதிதாகக் கொண்டு வரும் இஸமோ லாஜியோ புதிய விஷயங்களையும் புதிய அணுகுமுறைகளையும் நமக்குக் காட்டுகிற அளவில் அவரது பங்களிப்பு முக்கியமானது. அதன் நிறைகுறைகளை அவர் நிதானமாக ஆராய்ந்து விளக்குவாரானால் அது போற்றத்தக்கது. அதன் மூலம் மட்டுமே சில காரியங்கள் சாத்தியம் என்று அவர் நம்பினால் அதை அவர் அவ்வாறு பிரயோகித்துக் காட்ட வேண்டும். தமிழவன் அமைப்பியல்வாதத்தின் மூலம் செய்து காட்ட முனைவதைக்கேள்விக்கு உட்படுத்தஎவருக்கும் உரிமை உண்டு. நான் என்னுடைய உரிமையை இங்கு பிரயோகிக்கிறேன். என்னுடைய அமைப்பியல் அறிவின் அளவோ ஆழமோ இங்கு முக்கியமானவை அல்ல. என் கைம்மண்ணளவுக்குள் அமைப்பியல்வாதம் அடங்கவில்லை. ஆயினும் தமிழவனது புதிய நூலின் தன்மையை அளவிட அது தடையாக இல்லை.

அமைப்பியல் அணுகுமுறையைப் பாவித்து விஷயங்களை ஆராய்வதன் மூலம் எதைச் சாதிக்கலாம் என்பதல்ல இங்குள்ளபிரச்சனை தமிழவன்இந்த நூலில் எதைச்சாதித்துள்ளார் என்பதே நமது கவனத்துக்குரியது. முன்னுரை தவிர எட்டுக் கட்டுரைகள் உள்ள இத்தொகுப்பில் அமைப்பியலின் பிரயோகம் பற்றி நேரடியான விளக்கம் உள்ள ஒரு கட்டுரை ''அமைப்பியல் திறனாய்வும் தமிழும்''. மற்றையவற்றில் அமைப்பியல் பற்றிய தமிழவனது புரிதல் வேறுபடும் அளவுகளிற் புலனாகிறது.

விஞ்ஞானம் பற்றித் தமிழவன் வைத்திருக்கும் பார்வையும் தமிழ் மாக்ஸிய விமர்சகர்கள் பற்றிய அவரது கணிப்பீட்டின் விளைவுகளும் பெரும்பாலான கட்டுரைகளில் வெளிப்படுகின்றன. அவரது தாக்குதலுக்குப் பிரதான இலக்காக இருப்பவர் கைலாசபதி. அவரது பார்வையில் மாக்ஸிய இலக்கியவிமர்சனத்தின் சகல குறைபாடுகட்கும் காரணி Positivism எனப்படும் பொருண்மைவாதம் (?) மேலைய (முக்கியமாக பிரித்தானிய) மாக்ஸியவாதிகளின் வழிகாட்டல், பண்டித மாக்ஸியம் (அப்படி ஒன்று இருக்குமாயின் அது எது?) என்ற விதமாக, அதன் குறைபாடுகட்கு ஆதாரங்களாகச் செயற்பட்டவற்றின் பட்டியல் நீளுகிறது. பிறகு, சர்வரோக நிவாரணியாகத் தமிழவனுடைய அமைப்பியல் வந்து தமிழ் இலக்கிய விமர்சனத்தின் உயிரைக் காக்கிறது. தமிழவனின் அமைப்பியல் நோக்கு ஆக்க

எழுத்தாளன் தன்படைப்பினுள் விமர்சகனாகு வதை எதிர்க்கும் (ப.95)ஆய்வறிவாளன் விமர் சகனாவதற்குக் கண்டனம் தெரிவிக்கும்(ப.35) அங்கே கே. டானியலின் சாதிய உணர்வு (!) கைலாசபதியின் விமர்சனக் குறைபாடுகள் எல்லாவற்றுக்கும் ஆதாரபூர்வமான விளக்கங் கள் இருக்கும். இலங்கையின் தேசியவாதத் தலைமையான தமிழரசுக்கட்சி (தமிழ வனுக்கு பெடரல் கட்சி) இடதுசாரி இயக்கம் பற்றிய மதிப்பீடுகள் தமிழகத்தில் திமுக, கம்யூனிஸ்டு கட்சி என்பன பற்றிய தமிழவனது மதிப்பீடுகளின் அடிப்படையில் கண்மூடித் தனமாக மேற்கொள்ளப்படும். இந்தியாவிலும் இலங்கையிலும் பரவிய மாக்ஸியம் இவ்விரு நாடுகளின் காலனீயாதிக்க எஜமானர் களாயிருந்த பிரிட்டிஷ்காரர்கள் வழியாகத் தான் வந்தது என்பதைக் கவனிக்கவேண்டும்'' (பக் 25) என்று தமிழவன் எழுதுவதில் உள்ள பிசகு கவனயீனத்தின் விளைவுதான். ஆனாலும் இலங்கையில் எவ்வாறு ட்ரொட்ஸ் கியம் அதிமுக்கிய இடதுசாரிக் கட்சிக்கு வழி காட்ட நேர்ந்தது என்பதற்குத் தமிழ வனுடைய விளக்கம் என்னவென்று தெரிய வில்லை. கைலாசபதி மீது அவர் சுமத்துகிற குற்றத்தை விடப் பாரிய குற்றங்கள் அவரது எழுத்தில் உள்ளன.

### டானியலைக் கூறுபோட்டுக் கண்டது

கதை சொல்லியின் அரசியல் என்ற கட்டுரை டானியலின் ''கானல்'' பற்றிய விமர்சனம். இது யதார்த்த பாணி நாவலைப் பற்றிய கண் டனமுங்கூட. தமிழவனின் அபிப்பிராயத்தில் யதார்த்தபாணி நாவல்உண்மைச்சொல்வதாக வேஷம் போடும். அதைத் தோலுரித்துக் காட்டி அப்பாவி வாசகனை ரட்சிப்பது விமர் சகனது கடமை. மிகையான கூற்றுத்தான். ஆனாலும் அதுநியாயமானஒருஅடிப்படையில் எழுகிறது. டானியலின் நாவலைத் தோலுரித் துத் தமிழவன் கண்டுபிடித்தது என்ன என்று பார்ப்போமா? கதை சொல்லியின் குரல் கிறிஸ்தவ மதச் சாய்வும் உயர்சாதி மீதான சாய்வையும்காட்டுகிறதாம்! பாவம் டானியல் இரு பாகங்களில் வந்த பஞ்சம் நாவலில் உயர் சாதியார் மீது துவேஷத்துடன் எழுதியதாகக் கண்டிக்கப்பட்ட மனிதர். இன்னொரு அபார

காவயா

# அமைப்பியல வாதமும் தமிழ் இலக்கியமும்



தமிழவன்

மான போடு போடுகிறார் தமிழவன். ''கதை சொல்லி நாவலின் மொழியின் குரல். மொழியை அது என்று கூறலாம் தானே. 'அவள்' என்று ஏன் கூறக்கூடாது என்று பெண்மைவாதிகள் கேட்பார்கள், கதை சொல்லி 'அவள்' என்று பார்த்தால் ஒரு பெண்ணிய விமர்சனம் கிடைக்கும். இப்போது என் நோக்கம் அதுவல்ல.'' (ப.105) தமிழவன் தமாஷ் பண்ணுகிறாரென நம்புகிறேன். அல்லாது போனால் அவரது அமைப்பியல் வாதம் எவ்வளவு எளிதாக ஒரு பெண்ணியப் பார்வையைச் சாத்தியமாக்கி விடுகிறது என்று நாம் அசந்து போக வேண்டும். டானியலின் விமர்சகரின் பிரச்சனை என்ன வென்றால், டானியல் சித்தரிக்க முனையும் சமுதாயச் சூழலையே அறியாமல், எட்ட இருந்து உதிர்க்கும் ஊகங்களுக்கும் அமைப் பியல் வர்ணம் பூசி அவற்றை உண்மையாக் கும் அவஸ்தைதான்.

### பாரதிதாசனிற் தெரியாமற் போனது

பாரதிதாசன் பற்றிய ஆய்வில் பாரதிதாசனின்

ஒரு அம்சம் வெகு கவனமாக மூடிக் கட்டப்பட்டுள்ளது. ''பாரதிதாசனின் தமிழுணர்வு. நாணயமானது. பொருள் செறிந்தது அதனைக் குறை கூற முடியாது. ஏனெனில், தமிழ் என்ற குரலின் மூலம் அவர் வலியுறுத்தியது வேறு சிந்தனைகளையாகும்'' (ப. 132). பாரதிதாசனுக்குள் இருந்த ஒரு முரண்பாடு பழமையை எதிர்க்கும் பகுத்தறிவு வாதப் பார்வைக்கும் 'தமிழின் பழம் மேன்மைக்கு' மீளும் அகச்சார்பான ஆவலுக்குமிடையிலான மோதல். இதை அவராற் தீர்க்க முடியவில்லை. இது முழுத் திராவிட இயக்கத்துள்ளும் இருந்த பிரச்சனை. இதைக் கவனமாக ஒதுக்கி வைப்பதன் மூலம் பாரதிதாசனது தமிழுணர்வு பற்றிய புரிதலைப் பலவீனப்படுத்த மட்டுமே முடியும். வடமொழியைத் தமிழுக்கு எதிரி என்று காட்டித் தமிழுக்கு நிசமான ஆபத்தாக வந்த ஆங்கில மோகத்தை (முக்கியமாகத் தமிழ்நாட்டுப்புத்திஜீவிகளது ஆங்கிலத் தமிழ் நடை போன்ற வெளிப்பாடுகளை) முற்றாகவே தவற விட்டவர்களுள் பாரதிதாசனும் ஒருவர் தான். பாரதிதாசனின் சமூகப் பிரக்ஞையின் வலிய அம்சங்கள் பலவீனப்படுவதும் இந்தக் குறுகிய பார்வையின் விளைவுதான். எனக்கு இந்த ஆய்வின் நோக்கம் என்னவென்று தெரியாது. அது எதுவானாலும், மற்றவர்களுடைய எழுத்துக்களில் இல்லாத முரண்பாடுகளை எல்லாம் தேடியறிய வல்ல கட்டுரையாளர், பாரதிதாசனுக்குள் உள்ள அடிப்படையான முரண்பாடுகளை மட்டும் அழகாக ஒதுக்கி விட்டு ''பாரதிதாசனில் தமிழ் எனும் அர்த்த பரிமாணத்தை'' அலசுகிறார்.

### ஈழத்துப் புதுக்கவிதையா, அதென்ன?

தமிழ்ப் புதுக்கவிதை பற்றிய ஒரு கட்டுரை. அங்கே ஈழத்துக் கவிதை பற்றி ஒரு சொல் கிடையாது. ''எண்பதுகளில் புதுக்கவிதை: தமிழனின் இரண்டாம் எதார்த்தம்'' என்று கட்டுரைத் தலைப்பு. பசுவய்யா என்கிற சுந்தர ராமசாமி, பிரம்மராஜன் போன்றவர்களது தத்துவ விசாரங்களை எல்லாம் விழுந்து விழுந்து ரசித்துப் போதாக் குறைக்குத் தன்னுடைய வியாக்கியானங்களையும் சேர்த்து அவர் காணும் இரண்டாம் யதார்த்தம் பற்றிய விளக்கம் இது:

''எண்பதுகளில் கவிஞன் முற்றாய் உள் முகமாகி விட்டான்.... ஆனால் உள்முகமாய் போகும் பொருள் முதல்வாதி மொழியின் பயங்கர உள் தர்க்கத்தின் வீச்சால் ஆகர்ஷிக்கப்படுவது நடக்கும். எண்பதுகளில் புதுக் கவிதையில் அதுதான் நடந்துள்ளது. புறப் போராட்டத்தைப் புதுக்கவிஞர்கள் இப்படி நடத்தியுள்ளனர். இது அவர்களைச் சமூகப் பொறுப்பற்றவர்களாக்கி விடாது. புதுக் கவிதையின் சமூகப் பொறுப்பு வடிவம்தான் இதுவும். உள்வயமாக, அதாவது, மொழிவயமாகிப் புறவயமாகக் கொடுமையைக் கண்ட பாணி இது. இதில் ஆத்மாநாம் மட்டும் புற உலகக் கொடுமையையும் சேர்த்து உள்வயமாக்கும் கவிஞராகக் கிடைக்கிறார்...

''இந்த இரண்டாம் எதார்த்தமென்பது இவ்வகையில் பார்த்தால் முதல் எதார்த்தத்தின் சாயை. அதாவது முதல் எதார்த்தமே ஒரு சாயை என்கையில் இரண்டாம் எதார்த்தம் அதன் இரண்டாம் சாயை... முதல் எதார்த்தம் ஒரு நிழல் என்பதை இரண்டாம் எதார்த்தம் நிரூபிக்கிறது.... மொழி வாய்ப்பட்ட முதல் எதார்த்தம் தத்துவமாய், சித்தாந்தமாய் எதார்த்தத்தை ஒரு சட்டகத்துள் அடக்குகையில் இரண்டாம் எதார்த்தம் முளைக்கிறது.... வறுமை, சுரண்டல் பற்றி ஆயிரமாயிரம் வரிகள் கவிதையாய், கட்டுரையாய், வேறு பல வடிவங்களாய் எழுதப்பட்ட போது உண்மையை நுட்ப உணர்வால் கண்டு எழுதப்பட்ட இரண்டாம் யதார்த்தமொழியே இரண்டாம் எதார்த்தக் கவிதைகள்''.

தமிழ் நாட்டுப் புதுக்கவிதையின் அவலத்தை, சமுதாய உணர்வினின்று ஒதுங்கிய சோகை பிடித்த நிலைமையை அழகுபடுத்த வேண்டுமானால், நிச்சயமாக அதற்கான ஆட்கள் இருக்கிறார்கள். தமிழ்நாட்டுப் புதுக்கவிதைகளை ஈழத்துக் கவிதைகளுடன் ஒப்பிட்டால், இந்த இரண்டாம் யதார்த்தம் என்ற கவிதைப் போக்கின் வறுமை விளங்கி விடும். தமிழவன் இதை அறியாதவரல்ல என ஊகிக்கிறேன்.

தமிழவன் போற்றும் தமிழ் நாட்டுப் புதுக் கவிதை சமுதாய யதார்த்தத்தினின்று தப்பி ஓட முனைகிறது. அதற்கு என்ன பேர் வைத்தாலென்ன.

### ராஜாவின் துணி அலுமாரி

இந்த இடத்தில், தமிழவன் 1983 அளவில் சுந்தர ராமசாமியின் ஜே. ஜே. சில குறிப்புக்கள் பற்றி எழுதிய நீண்ட விமர்சனம் பற்றிக் குறிப்பிடுவது பயனுள்ளது. மையத்தைத் தகர்க்கும் நாவல் என்று ஏதோ சொன்னதோடு, இடதுசாரிகள் மீது ராமசாமியின் ஒட்டு மொத்தமான தாக்குதல் பற்றிக் குறிப்பிட்ட விமர்சனங்களை எல்லாம் தட்டிக் கழித்தும் எழுதியிருந்தார். ராமசாமியின் எழுத்தின் நேர்மையீனம் பற்றி ''அலை''யில் வந்த சுருக்கமான எனது விமர்சனத்தில் எழுதியிருந்தேன். அவரது பாத்திரப் படைப்பின் குளறுபடிகள் பற்றியும் நாவலுடைய யதார்த்தப் பண்பை அதிகப்படுத்தும் முனைப்பிலான சில பம்மாத்துக்களைப் பற்றியும் எழுதியிருந்தேன். சில ஆண்டுகள் முன் ஞானி இந்த நாவல் பற்றி எழுதியதை அண்மையிற் காணக் கிடைத்தது. அது எனக்குப் பல விஷயங்களில் மிகவும் உடன்பாடாக இருந்தது. தமிழவனுடைய அமைப்பியற் பார்வை, அப்பட்டமாகத் தெரியும் உண்மைகளை அலட்சியம் செய்கிறது. ஏனெனில் ராஜாவின் புதிய ஆடைகளை வர்ணிக்கும் ஆற்றல் உள்ள ஒருவருக்குத்தான் சாமான்யரின் கண்களுக்குத் தெரியாத சிறப்புக்களெல்லாம் தெரியும்.

### கைலாசபதிக்கு அடிக்க

### எந்தத் தடியானாலென்ன

கைலாசபதி Positivism என்கிற பொருண்மைவாதத்தாலேயே வழி நடத்தப்பட்டார் என்று மிகவுஞ் சிரமப்பட்டு விளக்க முயல்கிற தமிழவன் அதற்குப் புறநடையாகக் கைலாசபதியின் ஆய்வுகள் அமையும் போது அதற்கு வேறு விளக்கங்களைத் தந்து கொண்டு போகிறார். கைலாசபதி அன்றைய தமிழ்ப் புதுக்கவிதையை நிராகரித்தமை, ஜேம்ஸ் ஜொய்ஸ் முதலான நாவலாசிரியர்களது தனி மனிதவாத முனைப்பை விமர்சித்தமை, அதிலும் முக்கியமாக, மு. தளையசிங்கம், க. நா. சுப்பிரமணியம் போன்றோர் மீது கடுமையான தாக்குதல்கள் தொடுத்தமை போன்ற விஷயங்கள் தமிழவனது கண்ணில் முக்கிய குற்றங்கள். அதை விட, 'விஞ்ஞானம் அகவயப் பார்வைகளை ஏற்பதில்லை, கருத்துக்களிலிருந்து சமுதாயம் தோன்றுவதில்லை, புறவயமானது அகவயமானதை நிர்ணயிக்கிறது; மொழியும் மதமும் கலாச்சாரமும் பொருளாதார அடிப்படையிலே அமைந்துள்ளன என்பன போன்ற கருத்துக்களை மிகவும் கொச்சையாகவே விளங்கிக் கொண்ட தமிழவன், அந்தக் கொச்சைத் தனத்தைப் பிறர் மீதும் சுமத்துகிறார் என்றே தெரிகிறது. இயங்கியல் பற்றிய விஷயத்திற் தமிழவன் காட்டும் அசட்டை அமைப்பியல் வாதத்தினுள் புகுந்துள்ள ஒரு மாறா நிலையியற் போக்கின் விளைவுதானோ தெரியவில்லை. விஞ்ஞானமும் மாயவித்தையும் ஒரு வகையில் ஒன்றேதான் என்று ஜோஸப் நீடம் (Joseph Needham) கூறுவதன் சாரம் தமிழவனுக்கு விளங்காததில் அதிசயமில்லை. தமிழவனைப் பொறுத்தவரை, விஞ்ஞானமென்பது அவர் அறிந்த ரஸாயனம், பௌதிகம் என்பன போன்ற திட்டவட்டமான விதிகளாலானது. இந்த நிலைமை இன்று வெகுவாக மாறிவிட்டதை அவர் அறியார். டாவினின் ஆய்வுமுறை முற்றிலும் அகவயமானது என்றவாறான தமிழவனின் கருத்தும் விஞ்ஞான முறை பற்றி அவரது குழப்பமான கருத்தின் பிரதிபலிப்புத்தான். விஞ்ஞானம் எப்போதுமே மாதிரியுருக்களைக் கட்டி அவற்றின் அடிப்படையில் நடைமுறை—கொள்கை—நடைமுறை என்ற சுற்றிலேயே வளர்ந்து வந்துள்ளது. இந்த மாதிரியுருக்களை விஞ்ஞான ரீதியானவையாக்குவது அவற்றின் ''பொய்ப்பிக்கப்படக் கூடியமை'' என்று காள் பொப்பர் (Karl Popper) விளக்கியுள்ளார்.

### விஞ்ஞானமும் அகச்சார்பும்

கருத்துக்களிலிருந்து சமுதாயம் தோன்றுவதில்லை என்பது சமுதாய மாற்றத்துக்குரிய கருத்துக்களும் சமுதாய நடை முறையின்

விளைவுகளே என்பதையும் சமுதாயத்திற்குப் புறம்பாகக் கருத்துக்கள் தோன்றிப் புதிய ஒரு சமுதாயத்தை உருவாக்க முடியாது என்பதையும் குறிக்கிறது. அதாவது, நடைமுறையே அடிப்படையானது என்று கூறுகிறது. (''சரியான கருத்துக்கள் எங்கிருந்து வருகின்றன?'' என்று மாஓ சேதுங் கட்டுரையைப் பார்க்கவும்). விஞ்ஞானம் அகவயப் பார்வைகளை ஏற்பதில்லை என்பதன் சாராம்ஸம், விஞ்ஞான உண்மைகள் ஒருவரது விருப்பு வெறுப்புக்களால் நிர்ணயமாவதில்லை என்பதே. விஞ்ஞான உண்மைகள் மனிதர் உலகில் மனித வியாக்கியானங்களாக உள்ளன. விஞ்ஞானத்தின் முனைப்பிலும் நடைமுறையிலும் மனிதரது அகச்சார்பு பங்களித்தே வந்துள்ளது. ஆயினும் எவ்வளவு சிக்கலான விஞ்ஞானமாயினும் அதன் விதிகள் (மனிதர் அறிந்தாலும் அறியாவிட்டாலும்) மனிதரது ஆளுமைக்கு வெளியில் நின்றே இயங்குவன. அவற்றை அறிவதன் மூலம் மனிதர் தமது சூழலுடனான தமது உறவையும் நமது இருப்பின் மீது தமது ஆளுமையையும், வரையறைக்கு உட்பட்டு, நிர்ணயிக்க முடியும். ஆனால் அடிப்படையான விதிகளை அவர்கள் ஒருவேளை அறியலாமேயொழிய மாற்ற முடியாது.

மொழியும் மதமும் பண்பாடும் பொருளாதாரத் தளத்தின் மீது அமைத்து இருப்பதால் அவை எளிமையான சூத்திரங்களால் பொருளாதாரத்துடன் உறவுபடுத்தப்படுமென்றோ சமுதாய அமைப்பின் மீது அவற்றுக்கு ஒரு விதமான தாக்குதலுமில்லையோ என்று கருத வேண்டுமா? இங்கே வலியுறுத்தப்படும் விஷயம் பொருளாதாரமே, அதாவது சமுதாய உற்பத்தியும் உற்பத்தி உறவுகளுமே அடிப்படையாக நிற்கின்றன. பிரதான முரண்பாடு என்று ஒன்று இருப்பதால் மற்றைய முரண்பாடுகள் இல்லாமலோ தம் முக்கியத்துவத்தை இழந்தோ போக அவசியமில்லை.

### கைலாசபதியும் க.நா.சு.வகையறாக்களும்

கைலாசபதி போன்றோர் பிரதான முரண்பாடுகளை வலியுறுத்திய சூழல் பற்றித் தமிழவன் அறியாமலிருக்க முடியாது. க. நா. சு., கும்பல் கலாசாரத்தைப் பற்றி முன்கூட்டியே எச்சரித்த காரணத்தால், அவர் பற்றிக் கைலாசபதி கொண்டிருந்த கருத்துத் தவறாகி விடுமா? க.நா.சு. எந்த நிலைப்பாட்டிலிருந்து இலக்கியத்தை நோக்கினாரென்றும் அவரது வாரிசுகள் எந்தத் திசையிற் போகிறார்களென்றும் தமிழவன் தனது கட்டுரையின் சிறிது கூடிய கவனங்காட்டியிருக்கலாம். ஈனொக் பவெல் (Enoch Powell)என்ற தீவிர வலதுசாரிப் பிரமுகர் அணு ஆயுதக் கொள்கை, கல்வி, சுற்றாடல், ஐரோப்பிய பொதுச் சந்தை போன்ற பல விஷயங்களில் பிரித்தானிய இடது சாரிகள் பலருடன் உடன்படுகிறார். ஆனால் அவரது அணுகுமுறை என்ன? க. நா. சு., கும்பல் கலாச்சாரத்தை எந்தக் கோணத்திலிருந்து அணுகினார் என்பது தமிழவனுக்கு முக்கியமில்லாதிருக்கலாம். கைலாசபதிக்கு அது முக்கியமானது.

மு. த. விஷயத்திலும் தமிழவன் மிகவும் மேலோட்டமாகவே மு. த. வின் எதிர்ப்புப் பற்றிய கோட்பாட்டையிட்டுப் பாராட்டுகிறார். இந்த விஷயத்தில் மு. த.வின் குழப்பமான சிந்தனை பற்றியும் அதன் தோற்றுவாய் பற்றியும் சிறிது கவனங் காட்டியிருக்கலாம். மு. த. பஜனை மடமொன்று சிறிதாக இலங்கையில் இருக்கிறது. தமிழ் நாட்டிலும் பக்தர்கள் சிலர் இருக்கிறார்கள். இவர்கள் என்ன சொல்கிறார்கள் என்பதனையும் நாங்கள் கவனிப்பது நல்லது. ஏழாண்டு இலக்கிய வளர்ச்சியில் மு. த. உதிர்த்த முத்துக்களில் ஒன்று: தாழ்த்தப்பட்ட சாதி எழுத்தாளன் சாதியத்திற் கெதிராகப் போர்க் கொடி உயர்த்துவது பயனற்றது என்ற விதமான கருத்து. (இதை நியாயப்படுத்த முயன்று சு. ராமசாமி கனடாவில் கொஞ்சம் சிரமப்பட்டுப் போனார்) மு. த. மாக்ஸியத்தை எவ்வளவு தெளிவாக ஆய்ந்து தாண்டிச் செல்ல முயன்றார் என்று தமிழவன் கவனித்திரா விட்டால் அது பற்றிய எளிமையான ஒரு கட்டுரை சி. சிவசேகரத்தின் ''மரபும் மாக்ஸியமும்'' என்ற கட்டுரைத் தொகுப்பில் உள்ளது.

தனி மனிதத்துவத்திற்கும் தனி மனித வாதத்திற்குமிடையிலான வேறுபாடு பாரியது. தனி மனித வாதத்தை

கைலாசபதி சுட்டிக்காட்ட வேண்டிய தேவையும் வாய்ப்பும் நாவல் தொடர்பாக இருந்த காரணத்தாலேயே அதை அவர் செய்தார். அகச்சார்பிற்கும் புறவயமான நடுநிலைப் பார்வைக்குமிடையே தமிழவன் காணுகிற முரண்பாட்டைப்பற்றி இங்கே சிறிது கூற வேண்டும். நமது அகச்சார்பான தேவைகளை நிறைவு செய்ய நாம் அகச்சார்பான ஆய்வுகளை மட்டுமே மேற்கொள்ள முடியாது. புறவயமான உண்மைகளை நம்அகச்சார்பான பார்வை கவனிக்கத் தவறலாம். நமது விருப்பம் நிறைவேறக்கூடியதா என்பதைக் கூட அந்த விருப்பத்தின் அடிப்படையில் நாம் முடிவு செய்ய இயலாது. கைலாசபதி ஊக்குவித்த யதார்த்தபாணியானதும் சமூகப் பிரக்ஞையுடையதுமான எழுத்துக்கள் அவர் காண விரும்பிய சமுதாயமாற்றம்தொடர்பானவை. புதுக்கவிதையைப் பொறுத்தளவிலும் கைலாசபதியின் மதிப்பீடு அன்றைய புதுக் கவிதையின் முனைப்பாலேயே தீர்மானிக்கப் பட்டது. உண்மையிற் தமிழிற்புதுக்கவிதையின் வருகை தமிழ்க் கவிதை மரபின் நெருக்கடியின் நேரடியான விளைவாக அமையவில்லை. சமுதாய நெருக்கடியுடன் புதுக்கவிதை உறவு கொண்ட பின்பே உயிருள்ள கவிதைகள் எழுந்தன.

## தமிழவனின் அமைப்பியற் பிரயோகம்

''அமைப்பியல் திறனாய்வும் தமிழும்'' என்ற கட்டுரையிற் தமிழவன் எப்படி அமைப்பியல் முறையைத் தமிழ் இலக்கியப் பரப்பில் உள்ள திறனாய்வு முறைகளில் பயன்படுத்தலாம் என்று விளக்க முயன்றுள்ளார். இனி இதை பற்றிச் சிறிது கவனிப்போம். மாக்ஸிய யதார்த்தவியல் பற்றித் தனது இறுக்கமான பார்வையை இங்கும் தளர்த்தாமலே தமிழவன் எழுதுகிறார். தமிழவனைப் பொறுத்த வரை மாக்ஸிய இலக்கியப் பார்வையின் விருத்தி (அவரது அமைப்பியலின் ஆசியில்லாமல்) விறைப்பான ஒரு சட்ட வரம்புக்குள்ளேயே நடந்து வந்துள்ளது. Brecht (ப்ரெஷ்ற்) ஒருபுறமிருக்க, லூஷுன், மாக்ஸிய வட்டாரங்களிற் போற்றப்படுகிறார் அவரது படைப்புகளும் இத்தகைய 'உள்ளதை உள்ளபடியே கூறும்' கதைப் பாங்கில் அமைந்தவையா? அவரது யதார்த்தம் எத்தகையது என்ற கேள்விகளைத் தமிழவன் தன்னையே கேட்டுக் கொண்டாரா?

சில இடங்களில் தமிழவனின் மொழியாற்றலின் குறைபாடா அல்லது விறைப்பான பார்வையா என்று விளங்காத விதமாக வாக்கியங்கள் அமைகின்றன. உதாரணமாகக் கீழ் வரும் வாக்கியம்:

''இலக்கியக் குழு ஆகட்டும், மாக்ஸியத் திறனாய்வாளர்களாகட்டும், இவர்களெல்லோரும் பெரும்பாலும் ஆசிரியனின் சிந்தனையிலிருந்து வருவதுதான் படைப்பு என்றேகருதுகிறார்கள் இதற்கு எதிராக, வாசகர்களின் வெளிப்பாடு தான் படைப்பு என்ற கருத்து மேற்கத்திய இலக்கிய உலகத்திற் தோன்றியுள்ளது.''

இதன் அபத்தத்தை நான் விளக்க அவசியமில்லை. எந்த ஒரு கருத்துப் பரிமாற்றத்திலும் சொல்பவர் குறிப்பதும் கேட்பவர் உணர்வதும் வேறுபடுகிறது. எழுத்தைப் பொறுத்தவரை 'கேட்பவர்' சொல்பவரது குறுக்கீடின்றி தன் பாட்டிலேயே வாசிப்பதற்கு அர்த்தம் கற்பித்துக் கொள்கிறார். இது உண்மை. அப்படியானால் ''காகம் கறுப்பு'' என்ற வாக்கியத்தை வாசிப்பவர் ''எனக்கு நித்திரை வருகிறதே!' என்ற விதமாக விளங்கிக் கொள்ள முடியுமா? அது முடியாததல்ல. ஏனென்றால் வாசிப்பவர் அத்தகைய உள்ளத்தை மனதிற் கொண்டிருப்பவரானால் ''கடல் நீலம்'' என்ற வாக்கியத்திற்கும் ''எனக்கு நித்திரை வருகிறது'' என்றே அர்த்தம் கூற அவருக்கு முடியும். யதார்த்தம் (மன்னிக்கவும்!) சற்று வித்தியாசமானது. ஏனெனில்மொழி சமுதாயத்தன்மையுடையது.

சமுதாயத்தின் இயக்கம் தெளிவான கருத்துப் பரிமாறலிற் தங்கியுள்ளது. எனவே மேற் கூறியவாறான மாறுபாடான விளக்கம் விசேஷமான சூழ்நிலைக்குரியது. கவிதையில் அதற்கான வாய்ப்பு அதிகம். சிறுகதைகள் நாவல்களிலும் இது சாத்தியம். ஒரு குறிப்பிட்ட காலச் சமுதாயம் சூழலுக்கு வெளியே ஒரு படைப்பை விளக்கிக் கொள்வது சிரமமானதுதான். ஒரு படைப்பு அடிப்படையில்

படைப்பாளி தனது சமுதாயச் சூழலினின்று பெற்றவற்றின் விளைவான வெளிப்பாடு. அங்கே படைப்பாளியின் மொழியாற்றலின் குறைபாடுகள் கருத்தை விகாரப்படுத்த இடமுண்டு. வாசிப்பவரது மொழியறிவும் உலகநோக்கும் அவர் அதை விளங்கிக் கொள்ளும் முறையை நிர்ணயிப்பன. எழுத்தாளனுக்கும் வாசகனுக்குமிடையே ஒரு பொதுவான மொழியும் அணுகுமுறையும் இல்லாதளவில் இரண்டு செவிடர்களின் தொலைபேசி உரையாடல் மாதிரியேதான் கருத்துப் பரிமாறல் இருக்கும். ஒரு பொது மொழியைக் கண்டறிவதன் மூலமே நாம் நமக்கு அயலான சூழலுக்கும் காலத்துக்கும் உரிய விஷயங்களை அரிய முடியும். ''ஆசிரியன் இறந்து விட்டான்'' என்ற அமைப்பியல் வாதக்கூற்றை அப்படியே ஏற்றுக் கொண்டால், எவரும் எதையும் எவ்விதமாகவும் விளங்கிக் கொள்ள முடியும். அதற்குமேல், கைலாசபதியை தமிழவன் விளங்கிக் கொள்வதுகூடத் தமிழவனுடைய சொந்தக்கருத்தின் வெளிப்பாடு என்று ஆகிவிடும். இங்கே தான், மொட்டையான ஸ்லோகங்கள் பற்றி நாம் கவனமாக இருக்க வேண்டும். ''ஆசிரியன் இறந்து விட்டான்'' என்ற நியதி வெறுமனே ஆக்க இலக்கியத்திற்கு மட்டுமுரியதல்ல. அது கொஞ்சம் கூர்மையான கத்தி. கவனப்பிசகாயிருந்தால் பாவிக்கும் கையையே பதம் பார்த்து விடும்.

இந்தக் கட்டுரையில் அமைப்பியல் பற்றிய சில பயனுள்ள குறிப்புக்கள் இருந்தாலும் அமைப்பியலை வெவ்வேறு அணுகுமுறை விமர்சனங்களில் எவ்வாறு பிரயோகிப்பது என்று விளக்க முனையும் உதாரணங்களிற் தமிழவன் செய்வதெல்லாம் மிகவும் அகச்சார்பாக, அவர் தெரிந்தெடுத்த அணுகுமுறைகட்குப் பரிச்சயமான சொற்றொடர்களைத் தூவி, ஏதோ பாவனை செய்வதுதான். தமிழவன் முன்வைக்கும் அமைப்பியல் அணுகுமுறை மூலம் எந்த விதமான பேத்தலுக்கும் அர்த்தம் கண்டு ஆஹா, ஓஹோ என்று வியந்து கொண்டாடும் பாக்கியம் நமக்குக் கிட்டும்.

முடிவாக, அமைப்பியல் என்பது மொழியியல் மானுடவியல் போன்ற துறைகளிற் பயன்பட்ட ஒரு அணுகுமுறை. அதன் பிரயோகத்தின் மூலம் புதிய பார்வைகளை நாம் பெற முடியுமாயின் நல்லது. ஆயினும் தமிழவன் காட்டும் அமைப்பியல் அணுகுமுறை மூலம் அவர் இந்த நூலிற் சாதித்தவைகளைப் பார்க்கும் போது- ஏமாற்றமாகத்தான் இருக்கிறது. மாக்ஸிய விமர்சனப் பார்வையில் ஏற்பட்ட குறைபாடு கட்கெல்லாம் மிகையாக எளிமைப்படுத்தப்பட்ட விளக்கங்களைத் தந்துகொண்டே போகிற தமிழவன், குறைபாடுடைய 'விஞ்ஞானப் பார்வை', 'அலசல் பார்வை', Positivism எனும் பொருண்மைவாதம், empiricism எனும் பரிசோதனாவாதம் போன்றவற்றைப் பாவிப்போரை விட மோசமாக இடறிவிழுவதற்குக் காரணம் அமைப்பியலில் உள்ள கோளாறாகத் தெரியவில்லை. அமைப்பியலைக் கொண்டு தன் அகச்சார்பான அணுகலை நியாயப்படுத்தும் போக்காக இருக்குமோ? நிச்சயமாகத் தமிழவன் இன்னும் நீர் மேல் நடந்து காட்டவில்லை.

[பி.கு: தமிழவனின் ஆங்கில-தமிழ்க் கலைச்சொல் மொழி பெயர்ப்பு சிறிது கவலைக்குரியது. folk Tale என்பது தேவதைக் கதையல்ல; value-free என்பது வெறுமனே நடுநிலையல்ல; objective என்பதும் நடுநிலை நோக்கல்ல. இது போலவே பேர்கள் பற்றியும் சிறிதுகவனமாக இருக்கலாம். Arnold Toynbee ஆர்னால்ட் தாயன்பி அல்ல டொய்ன்பி (டொய்ன்B) குழப்பத்தைத் தவிர்க்கப் பேர்களையெல்லாம் ஒருஅட்டவணையிலாவது ரோமன் எழுத்துக்களில் தந்திருக்கலாம்]

★

# கடிதங்கள்

## அசோகமித்திரன்

சுமார் 25 ஆண்டுகளுக்கு முன்பு 'முருகு' என்றொரு பத்திரிகைக்கு ஆசிரியராகச் செயல்பட்ட கோவி. மணிசேகரன் நடிகை பத்மினியை இலக்கியப் பேட்டி கண்டு அவரிடம் கேட்ட அறுபது கேள்விகளில் ஒன்று: ''சோகமித்திரன், அசோகபுத்திரன் என்றெல்லாம் பெயர் வைத்துக் கொண்டு புரியாதபடி எழுதுபவர் பற்றித் தங்கள் அபிப்ராயம் என்ன?''

பதில் சுருக்கமானது ''நீங்கள் கேட்பது புரியவில்லையே?''

பிரபஞ்சன் என்னைப் பெயர் சொல்லித் தாக்குவதை மணிசேகரன் பாராட்டுவதில் வியப்பில்லை. எதிரியின் எதிரி நண்பன். எதிரியின் எதிரி எதிரியாயிருந்தால்கூட. ஆனால், நான் மணிசேகரனை எதிரியாகக் கருதவில்லை

'இந்தியா டுடே' தொகுப்பு பற்றி ஒரு சிறுகதைத் தொகுப்பு மூலம் அதிகபட்சம் ரூ. 3000 கிடைக்கலாம். அதைப் பதிப்பாசிரியர்களான மாலனோ, பாலகுமாரனோ அவர்களாகவே சுப்ரமண்யராஜுவின் குடும்பத்துக்குக் கொடுத்திருக்கலாம். ராஜுவின் வலது கை உதவியது இடது கை அறியாது. அப்படிப்பட்ட மனிதரின் குடும்பத்துக்குத் தருவதாகத் திட்டமிட்ட சிறிய தொகைக்குப் பிரகடனம் எதற்கு? பிரகடனம், விளம்பரம் இல்லாமல் தரக்கூடாதா?

'கனவு' பத்திரிகையில் ஒரு கட்டுரையாளர் சுஜாதா பற்றி வெளியிட்ட அபிப்பிராயத்துக்காகக் 'கணையாழி' பத்திரிகை என் மீது பாய்ந்தது. 'கணையாழி' தொடங்கப்படுவதற்குப் பல ஆண்டுகளுக்கு முன்னரே நான் தமிழிலும், ஆங்கிலத்திலும் பலர் அறிந்த எழுத்தாளன். 'கணையாழி' உரிமையாளர் கூற்றுப்படி என்னை அறிமுகப்படுத்தியது 'கணையாழி'தான்! நான் அமெரிக்கா சென்றது எழுத்தாளர்களுக்கானதொரு திட்டத்தில். பொதுவாகப் பரிசுகள், வெளிநாடுகள் செல்வது பற்றி நான் பெரிதுபடுத்திக் கொண்டது கிடையாது. (எனக்குப் பிறகு அதே திட்டத்தில் அமெரிக்கா சென்றவர்கள் சிவசங்கரியும், உஷா சுப்பிரமணியனும்!) 'கணையாழி'யில் நான் பணிபுரிந்த 23 ஆண்டுகளில் பல மாதம் ஊதியம் ரூ. 100; பல மாதங்கள் 50; பல மாதங்கள் 150; சில மாதங்கள் 200. கடைசிச் சில மாதங்கள் ஒன்றுமே கிடையாது. அப்பத்திரிகையிலிருந்து ஓய்வு பெற்று ஐந்து ஆண்டுகளுக்கு மேலாகின்றன. இன்னும் கணக்கு தீர்க்கப்பட்ட பாடில்லை. இது 23 ஆண்டுப் பணிக்குப் பிறகு!

'குங்குமம்' 'குமுதம்' 'ஆனந்தவிகடன்' போன்ற பத்திரிகைகளில் பணிபுரிந்த பிரபஞ்சன் அவசியம் என்னைக் காட்டிலும் அதிக ஊதியம் பெற்றிருக்கக் கூடும். அப்பத்திரிகைகள் பால் அவர் விசுவாசம் நன்றி கணிசமானதாக இருக்க வேண்டும்.

அனைத்து மனிதர்களும் கலைஞர்கள் என்று, நம்புபவன் நான். ஆதலால், நான் தனியாக எதற்கும் பெருமைப்பட்டுக் கொண்டது கிடையாது. என்னை அறிந்தவர்கள் இதை நன்கு அறிவார்கள்.

சோகபுத்திரர்கள் பட்டியல் பெரிது. என்னிடம் முன்னுரை கேட்டுப் பெற்றவர்களில் சிலர்: நகுலன், சுப்ரமணியராஜு, ஜெயந்தன், மா. அரங்கநாதன், கோபிகிருஷ்ணன், திலகவதி, விக்கிரமன், விக்ரமாதித்யன், டாக்டர் ருத்ரன், இரா. முருகன், ராஜரங்கன், பிரசன்னா, உத்திராபதி (பார்வையற்றோர் பட்டதாரிகள் சங்க நிர்வாகி)...இந்த நேரத்தில் என்னால் இவ்வளவுதான் நினைவுபடுத்திக் கொள்ள முடிந்தது.

எலி, பெருச்சாளி, கடப்பாரை, சோகபுத்திரன், சோரபுத்திரன்—இதெல்லாம் குரோதத்தில் பிரபஞ்சன் கூறுபவை. என்னிடம் குரோதம் கொள்ளக் காரணமே இல்லை. அயோத்தி, பிஜேபி இதெல்லாம் மிக மிக மிக மிக எட்டத்தில் இருப்பவை. ''தண்ணீரை நீ கலக்காவிட்டால் என்ன உன் அப்பன் கலக்கியிருப்பான்'' என்று ஆட்டுக்குட்டி மீது பாய்ந்த ஓநாய்க் கதைதான் இது.

இனியும் விளக்கங்கள் கூறிக் கொண்டிருப்ப தாக எண்ணமில்லை. துவேஷம் கொண்ட மனம் ஆறுதல் பெறுவது மிகவும் கடினம்.

**மா. அரங்கநாதன்**

திரு. கோவி. மணிசேகரன் அவர்கள் அப்படி எல்லாம் மறுத்துப் பேசக்கூடாது. எனது கதை களை அவரால் விமர்சிக்க முடியவில்லையென் றால் என் கதி என்னவாகும்? அவரால் பாராட்டப்பட்டு பரிசும் வாங்க முடியவில்லை யாயின் நான் தற்கொலை செய்து கொள் வேன்.

**தி. க. சி.**

ஏப்ரல் 94 இதழை முற்றிலும் படித்தேன். ஜோதிபா புலே முதல், நோம் சோம்ஸ்கி (சினிமா டாக்குமெண்டரி) வரை, பல வகை யான, பல சுவையான அருமையான விஷயங் களைத் தந்திருக்கிறீர்கள். நாதின் கார்திமர் பற்றிய சிரிஷாவின் கட்டுரையும், 'நோம் சோம்ஸ்கி' பற்றிய சிவகுமார் கட்டுரையும் மிகவும் குறிப்பிடத் தக்கன. முகில் நேர் காணல் இவ்விதழின் தனிச்சிறப்பு அம்சம். 'மரியா மாண்டிசோரி'யைப் பலரும் மறந்து விட்ட நிலையில் அவரது பங்களிப்பை நினைவு கூர்ந்து கட்டுரை வெளியிட்டிருப்பது மிகவும் பாராட்டத்தக்கது. அண்மையில், சென்னை யில் த.மு.எ.ச. வின் 'தமிழ் வளர்ச்சி பண் பாட்டுப் பாதுகாப்பு மாநாட்டில்' (ஏப். 24,1994) நிறைவேற்றப்பட்ட தீர்மானங் களும், அறிஞர்களின் கருத்துரைகளும் தோழர் ந. அரணமுறுவலுக்கு மன நிறைவு தந்திருக்கும் என நம்பலாம்.

**வல்லிக்கண்ணன்**

'சித்திரைச் சிறப்பிதழ்' ஆழ்ந்த கன மான விஷயங்களை கொண்டிருக்கிறது. மாண்டஸாரி அம்மையாரின் குழந்தைகள் மனவளம் சார்ந்த கல்வித் திட்டம் பற்றிய கட்டுரை, நாதின் கார்திமரின் உள்-புற மன வெளிப்பாடு சம்பந்தமான படைப்புகள் பற் றிய கட்டுரை ஜோதிபா புலே பற்றிய அறி முகம், நோம் சோம்ஸ்கி பற்றிய கட்டுரை, 'இந்தித் திணிப்புக்கு எதிராக' ஒரு மீள் பார்வை - இப்படி எல்லாமே 'ஸீரியஸ்' விஷ யங்கள். மிருத்யுவின் 'உயிர்' கதை நன்று. வாழ்க்கையில் போராடத் தெம்பு இன்றி சாவைத் தழுவும் ஒருவனையும், வாழ்க்கை யில் போராடிப் பெற வேண்டியிருப்பதை படிப் படியாக உணர்ந்து போராட முயலும் ஒரு புதிய குழந்தையையும் சம்பந்தப்படுத்தி நல்ல முறையில் கதை எழுதப்பட்டிருப்பது பாராட் டப்பட வேண்டியதாகும்.

**முகில்**

ஜோதிபா புலேயை அம்பேத்காரின் ஆசான் என்று குறிப்பிட்டிருப்பது.... பொருத்தமானது. அம்பேத்காரைப் பற்றியும் பெரியாரைப் பற்றி யும் தெரிந்த அளவில் ஒரு சதவீதம் கூட புலே பற்றிதமிழர்களுக்கு தெரியாது. அந்தவகையில் இக்கட்டுரை மிகவும் முக்கியத்துவம் பெறு கிறது. மிருத்யுவின் சிறுகதை ஒரு புது வடி வத்தையே அறிமுகப்படுத்துகிறது. 'தீர்த்தக் காவடி' பலகாலம் பேசப்படுகிற கதையாக இருக்கும். உட்கவரும் மனம், நாதின் கார்தி மரும் உள்புற மனவெளிப்பாடும், நோம் சோம்ஸ்கி ஒரு முழு நீள டாக்குமெண்டரி ஆகியவற்றைப் படித்து விட்டு, இவ்வளவு விசயங்கள் இருக்கிறதா? என்று சிலர் ஆச்சர் யப்பட்டார்கள்.


**நந்தா**, வேலூர்.

இதுநாள் வரை யாருமே கவனம் செலுத்தியி ராத கட்டுரைகளான 'அம்பேத்கரின் ஆசான் ஜோதிபாபுலே', 'உட்கவரும் மனம்', நாதின் கார்திமரும் உள் புற மன வெளிப்பாடும், 'நோம் சோம்ஸ்கி' போன்ற அபூர்வமான கட்டுரைகள் சமூக விரும்பிகள் அவசியம் படிக்க வேண்டியவை. முகிலின் நேர்காணல் மிகவும் அழகுணர்ச்சி மிக்கதாய் அமைந்திருந் தது. கவிதைகள், சிறுகதை பகுதியில் 'தீர்த் தக்காவடி' தவிர மற்ற வகைகளில் எளிமைப் படுத்தப் படுவது அவசியம். கலைநயமிக்க படங்கள் இதழுக்கு தனிச்சிறப்பு.

SARADA TAMIL MONTHLY **MAY** 94 REGD.NO:TNMS(S) 588; RNI NO 53767/93 R.D.S.NO.1690/93

**சவுத் ஏசியன் புக்ஸ்,**
6/1 தாயார் சாகிப் 2வது சந்து.
சென்னை - 600 002

**SOUTH ASIAN BOOKS**



## நாவல் – சிறுகதைகள்

❑ இழைகள் பின்னி இணைவதனால்... - கலை இரவு 94 சிறுகதை தொகுதி 15.00, ❑ பச்சை மோட்டார்கார் - கே.ஏ. அப்பாஸ் 16.00, ❑ வெட்டுமுகம் - இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன் 20.00, ❑ அயல் கிராமத்தைச் சேர்ந்தவர்கள் - நந்தினி சேவியர் 12.00, ❑ மேற்கிலிருந்தும் உதயம் - சிறுகதை தொகுதி 15.00, ❑ மூங்கிற் பள்ளம் - வியத்நாமிய சிறுகதைகள் தமிழில் கே. கணேஷ் 8.00, ❑ நீலக்கனவு - உதயஷங்கர் 18.00, ❑ நீளும் றெக்கை - வேல. இராமமூர்த்தி 16.00, ❑ உடலும் உணர்வும் : ஒரு மந்தையோட்டியின் கதை - ஷாங் சியான் லியாங் தமிழில் கே. கணேஷ் 16.00, ❑ பனித்துளி - ஆர். சண்முகசுந்தரம் 10.00, ❑ கொக்குகள் பறந்து போய்விட்டன ஜி.காசிராஜன் 16.00, ❑ நினைவுகள் அழிவதில்லை - நிரஞ்சனா 35.00, ❑ கல்லில் தீப்பொறிகள் - டி.கே. இராமகிருஷ்ணன் 22.00, ❑ காம்ரேட் - யஷ்பால் 10.00, ❑ கூனற்பிறை - லாவ் ஷ 10.00, ❑ இளைஞன் எர்கையின் திருமணம் - ஜௌ சூ லி 10.00, ❑ பிணந்தின்னிகள் - சி.ஆர். 10.00, ❑ ஊர்க்கூட்டம் - மு. சுயம்புலிங்கம் 25.00, ❑ ஏழு தலைமுறைகள் - அலெக்ஸ் ஹேலி 50.00

## திறனாய்வு – இலக்கியம் – பொது நூல்

❑ மலேசியா எங்கே என் பங்கு? - தோட்டத் தொழிலாளர்களின் தொடரும் பிரச்சினைகள் - மு. வரதராசு 35.00, ❑ பத்தினித் தெய்வங்களும் பரத்தையர் வீதிகளும் - தொல்காப்பியர் முதல் சித்தர் வரை பெண்களின் சித்தரிப்பு - பிரேமா அருணாசலம் 30.00, ❑ என். இலக்கிய நண்பர்கள் - தி. ஜானகிராமன் - க.நா.சு - மௌனி - எம்.வி. வெங்கட்ராம் 20.00, ❑ தேசிய இலக்கியமும் மரபுப் போராட்டமும் சுபைர் இளங்கீரன் 18.00, ❑ மலையக வாய்மொழி இலக்கியம் - சாரல்நாடன் 10.00, ❑ பன்முக ஆய்வில் கைலாசபதி - பதிமூன்று ஆய்வுக் கட்டுரைகள் 30.00, ❑ கைலாசபதியின் சமூக நோக்கும் பங்களிப்பும் - சி.க.செந்தில்வேல் 12.00, பேராசிரியர் கைலாசபதி நினைவுகளும் கருத்துக்களும் - சுபைர் இளங்கீரன் 17.00, ❑ தமிழும் அயலும் - சி.சிவசேகரம் 22.00, ❑ கலை - அன்னதா சங்கர் ராய் 18.00,

## கவிதை

❑ துரோகத்தின் தருணம் - ஃபெய்ஸ் அஹமத் ஃபெய்ஸ் கவிதைகள் 10.00, ❑ என்றும் எமக்கு மரணமில்லை 12.00, ❑ என் படுக்கையறையில் யாரோ ஒளிந்திருக்கிறார்கள் மனுஷ்யபுத்திரன் 12.00, ❑ பணிதல் மறந்தவர் - ஒடுக்குமுறைக்கு எதிரான மூன்றாம் உலகக் கவிதைகள் சி.சிவசேகரம் 12.00, ❑ குன்றத்து குமுறல் சி. சிவசேகரம், இ.தம்பையா, சிவ.இராஜேந்திரன், எஸ்.பன்னீர்செல்வம் 13.00, ❑ தலைப்புச் செய்திகள் மூன்றாம் உலக குரல் 18.00, ❑ கூடுகளை விட்டு ... போப்பு 8.00, ❑ நாங்கள் மனிதர் முருகையன் 20.00, ❑ மனிதனுக்கு மரணமில்லை - நவகவி 18.00, ❑ எத்தனை நாள் துயின்றிருப்பாய் என்னருமை தாய்நாடே -சாந்தோர் பெட்டோவ்பி 7.00, ❑ சந்தேகி - பிரளயன் 8.00, ❑ மழையின் சுருதி - கரிசல் குயில் பாடல்கள் 15.00, ❑ இன்னும் மீதமிருக்கிறது நம்பிக்கை பூவுலகின் நண்பர்கள் 5.00

## சினிமா–ஓவியம்–நாடகம்

❑ ரித்விக் கட்டக்: இந்திய சினிமாவின் மேகம் கவிந்த தாரகை - தொகுப்பு - சென்னை ஃபிலிம் சொஸைட்டி 18.00, ❑ சினிமா கோட்பாடு - பேல பெலாஸ் 65.00, ❑ திரைப்பட மேதை செர்கய் ஐஸன்ஸ்டின் - சென்னை ஃபிலிம் சொஸைட்டி 18.00, ❑ சலனம் இரு மாத சினிமா இதழ் - இரண்டாம் ஆண்டு தொகுப்பு 60.00, ❑ மைக்கேலேஞ்சலோ - தேனுகா 30.00, ❑ லியனார்டோ டாவின்சி - தேனுகா 30.00, ❑ சங்காரம் ஆற்றுகையும் தாக்கமும் கலாநிதி சி. மௌனகுரு 21.00, ❑ ஈழத்து தமிழ்நாடக அரங்கு கலாநிதி சி. மௌனகுரு 60.00, ❑ சமூக மாற்றத்திற்கான அரங்கு ஈழத்தமிழரிடையே சமூக மாற்றத்துக்கான வன்மையான அரங்கினை வளர்ப்பது பற்றிய ஒரு நாடக ஆக்கவியல் ஆய்வு - க. சிதம்பரநாதன் 20.00

ஆசிரியர், உரிமையாளர், அச்சிட்டு வெளியிடுபவர் கோ. பாஸ்கரன் தினுக்கு ஆர்ட் பிரிண்டர்ஸ்,
79 சடையப்பா லேன், சைதாப்பேட்டை, சென்னை 600 015, போன் 4850367